4078



# கிராம நலம்

ஏப்ரல் '67



பதவி ஏற்றவுடன் அரசாங்க அலுவலர்களுக்கு முதலமைச்சரின் அன்புரை (6·3·67)

(சென்னை, கோட்டையில்)

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே"


# கிராமநலம்

கதிர் 12 ஏப்ரல் 1967 நெல் 7


# மக்களாட்சிக் காவியத்தில் புதிய படலம்

———(0)———

## "மக்கள் இதயத் துடிப்பை அறிந்து விரைவில் பணி புரிவோம்"

—முதலமைச்சர்

பதவி ஏற்றதும், அன்று மாலை (6—3—67) சென்னை கோட்டையில் ராணுவ அணிவகுப்பு மைதானத்தில், அரசாங்க அதிகாரிகள், அலுவலர்கள் அடங்கிய கூட்டத்தில் முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை பேசினார். தமிழ்நாடு அரசாங்க தலைமைச் செயலாளர் திரு சி. ஏ. இராமகிருஷ்ணன், ஐ.சி. எஸ். புதிய அமைச்சரவையை வரவேற்றுப் பேசுகையில், "நடந்து முடிந்த தேர்தலில் மக்கள் பெருவாரியாக உங்களைத் தேர்ந்தெடுத்த தின் மூலம் ஆட்சியில் அமைந்திருக்கும் மந்திரி சபையிடம் மக்கள் நிரம்ப எதிர்பார்க்கிறார்கள் என்பதுடன் உங்கள் மீது மக்கள் வைத்துள்ள அபரிமிதமான நம்பிக்கையும், இந்த தேர்தல் முடிவு வெளிப்படுத்துகிறது" என்று குறிப்பிட்டு, 'நீங்கள் மேற்கொண்டுள்ள மாபெரும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில், அரசாங்க அதிகாரிகளும், சிப்பந்திகளும் கடினமாகவும், உண்மையுடனும், விசுவாசத்துடனும் ஒத்துழைப்போம்" என்று உறுதி கூறினார். முன்னாள் முதலமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம் அவர்கள் தன்னுடைய அமைச்சரவை பதவியிலிருந்த காலத்தில் எல்லா வகையிலும் ஒத்துழைப்பு கொடுத்து சிறந்த நிர்வாகத்திற்கு உதவிய அரசாங்க அதிகாரிகளுக்கும் சிப்பந்திகளுக்கும் நன்றி தெரிவித்து எழுதியிருந்த கடிதத்தையும் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் படித்துக்காட்டினார். தலைமைச் செயலாளரின் வரவேற்புரைக்குப் பின், முதலமைச்சர் "இது எனக்கு மிகவும் பழக்கமான காரியம்" என்று தொடங்கி, ஆற்றிய சொற்பொழிவின் சாரம் வருமாறு:—

'அரசாளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்கள், உங்களைச் சந்தித்துப் பேசுவது, இதுவரை இல்லாத பழக்கம். எனக்குள்ள பழக்கத்தை நான் விடமுடியாததாலும், நாட்டிலே ஒரு புதிய பழக்கத்தை உண்டாக்க விரும்பியும்தான், உங்களை இன்று இங்கே சந்திக்க விரும்பினேன்.

நான் மற்ற மாநிலங்களுக்குச் சென்ற போதெல்லாம், மிகத் திறமையான

**கோட்டையின் வரலாறு :**

"முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே முளைத்தது, சென்னைப்பட்டினம். அங்கே வாணிபம் செய்யப்போந்த ஆங்கிலேயர், கூவம் நதிக்கரையிலே ஒரு கோட்டை கட்டினர். அக் கோட்டை நகரத்திற்கு "வெள்ளை நகரம்" என்று பெயரிட்டனர். சென்னையின் அங்கங்களாக விளங்கும் மயிலாப்பூரும், திருவல்லிக்கேணியும் கடற்கரைச் சிற்றூர்களாக, அந்நாளில் காட்சியளித்தன...

நிர்வாகப் பணிபுரியும் உங்களைப் பாராட்டிப் பல இடங்களில் பேசப்பட்டதைக் கேட்டிருக்கிறேன்.

இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் இருந்து வந்தவர்களிடம் பழகியவன் என்ற முறையிலும், நேரிலே பார்த்து அனுபவித்தவன் என்ற வகையிலும், உங்கள் நிர்வாகச் சிறப்பை நான் அறிந்து மிக்க பெருமைப் பட்டிருக்கிறேன்.

சர்க்கார் அலுவலகங்களில் உயர் மட்டத்திலும், ஊழியர் அளவிலும் பலரிடம் நேரடியாக எனக்குப் பழக்கமில்லாவிட்டாலும், பலர் என் நண்பர்கள் என்று சொல்லிக்கொள்ளும் வகையில் இருக்கிறார்கள்.

## நட்பு, நட்பைப் பெற்றுத் தரும்

என்றாலும், உங்கள் எல்லோருடனும் அறிமுகமும் நட்பும் ஆகும் வகையில்தான் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள்.

'நட்பு, நட்பைத்தான் பெற்றுத் தரும்' என்பது தமிழ்மரபு. இந்தப் புதியப் பொறுப்பேற்றதால், நான் உங்களைப் பெற இருக்கிறேன் என்றால், 'உங்கள் நட்பைப் பெற இருக்கிறேன்' என்றுதான் பொருள்.

நீங்கள் என்னிடம் நட்போடு நன்றாகப் பழகி, இந்த மாநில நிர்வாகம், சிறப்பில் ஒரு துளியும் மங்காமலும், முடியுமானால், ஒரு படி மேலே செல்லும் வகையிலும் அமைந்திட வேண்டும் என்பதை எனக்கும் கவனப்படுத்திக்கொள்ளவும், உங்களுக்கு நினைவுபடுத்தவும்தான், இந்த நிகழ்ச்சியே நடக்கிறது.

## தமிழகத்தின் நிர்வாகச் சிறப்பு

மற்ற மாநிலங்களில் ஏதாவது சிக்கல் இருந்தால், 'தமிழகத்திலிருந்து அதிகாரிகளை அழைத்து வந்தால், சிக்கல் தீரும்' என்று, மற்ற மாநிலத்தவர் என்னிடம் சொன்னபோது, நான் உள்ளபடியே பெருமையடைந்ததுண்டு ; 'அத்தகையவர்களோடு சேர்ந்து பணியாற்ற முடியுமோ' என்று ஆசைப்பட்டதுண்டு ; என்னுடைய ஆசையை நிறைவு செய்யும் வகையில், நாட்டு மக்கள், என்னிடம் இந்தப் புதிய பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள்.

ஆனால், புதிய பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டபோது, மகிழ்ச்சியை விட அச்ச உணர்ச்சியே அதிகம் பெற்றேன். இதுவரையில் நாங்கள், கானம் பாடும் வானம்பாடிகளாக இருந்தோம் ; எங்கள் இசை இனிமையாக இருந்தது. இனிமையாக இருந்தது மட்டுமல்ல—நாட்டு மக்களின் ஆசைகளைக் கிளறிக்கூட விட்டது ; அந்த ஆசைகளை நிறைவேற்றத் தக்க உறு

---

### கோட்டை - வரலாற்றுக் கண்ணோட்டம்

" ......ஆங்கிலக் கம்பெனியார் கட்டிய கோட்டை, வளர்ந்தோங்கி விரிவுற்றது. மேடு பள்ளமெல்லாம் பரந்த வெளியாயின. திருவல்லிக்கேணிக்கு வடக்கே, மேடும், பள்ளமுமாகப் பல இடங்கள் இருந்தன, அவற்றுள் ஒன்று, நரிமேடு. நரிமேடு இருந்த இடத்தில், இப்போது பெரிய மருத்துவ சாலை இருக்கின்றது. இன்று மண்ணடி என வழங்கும் இடம், ஒரு மேட்டின் அடியில் பெரும் பள்ளமாக அந்நாளிலே காணப்பட்டது. ஆங்கிலக் கம்பெனியார் ஆதரவில், பல பேட்டைகள் எழுந்தன. அவற்றுள் சிந்தாதிரிப்பேட்டை, தண்டையார்பேட்டை முதலிய ஊர்கள் சிறந்தனவாகும். .. இங்ஙனம் விரிவுற்ற நகரின் அருகே, பல பாக்கங்கள் எழுந்தன. புதுப்பாக்கம், சேப்பாக்கம், கீழ்ப்பாக்கம், நுங்கம்பாக்கம் முதலிய சிற்றூர்கள் தோன்றி, நாளடைவில் நகரத்தோடு சேர்ந்தன..... "

—பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை.

தியைத் தரத்தான் உங்களை நாடி இருக்கிறோம்.

எங்கள் ஆசைக்கு ஏற்ப இனி, ராகம், தாளம் அமைய வேண்டும். இவ்வளவு நாட்கள், 'இல்லை, இல்லை' என்பதே ராகமாக இருந்தது; 'மெதுவாய்ப் போ—மெதுவாய்ப் போ' என்பது தாளமாக இருந்தது என்பதை நாங்கள் உணருகிறோம்.

### இசையும், இசைவும்

ஆனால், இனி இசைக்கு ஏற்ற ராகம் அமைய வேண்டும்; தாளம் மாற வேண்டும். தாளம் மாற வேண்டும் என்பதாலே, தப்புத் தாளம் போடச் சொல்லவில்லை; தாளத்தில் பல ரகம் உண்டு. அதிகம் பேருக்குத் தெரிந்த தாளம் ஆதி தாளம்; இதுவரையில் போட்டிருந்த அந்தத் தாளத்தை மாற்ற வேண்டும்; நாட்டு மக்களின் இதயத் துடிப்புக்குத் தக்கபடி, அது அமைய வேண்டும்.

மக்கள் 'சர்க்கார் அதிகாரிகள் சரியாக இல்லை' என்று சொல்லவில்லை; 'நிர்வாகம் சரியாக இல்லை' என்று சொன்னதில்லை; அதிலெல்லாம் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது; ஆனால், அவர்கள், 'அதிகாரிகள் தேர்ந்தெடுத்துக் கொண்ட வேலை முறையில்தான் மாற்றம் தேவை' என்கிறார்கள்.

அப்படிச் சொல்லுகின்ற அந்த மக்களின் பிரதிநிதிகளாகத்தான் நாங்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்; மக்கள் உள்ளத் துடிப்புகளை—மக்களின் எண்ணங்களைச் செயல்படுத்த முடியும் வகையில், கட்டுத் திட்டங்கள்—வழி முறைகள் அமைய வேண்டும்.

மக்கள் எண்ணங்களை எடுத்துச் சொல்லுகிற நாங்களும்—செயல்படுத்துகிற நீங்களும் ஆக நம் இருவர் உள்ளக்கிடக்கைகளும் நல்ல முறையில் அமையுமானால், பல நல்ல காரியங்களைச் செய்ய முடியும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

தமிழகம், நிர்வாகத்தில் முதலிடம் பெறுகிறது; தொழில் வளம்பெற்றிருக்கிறது; கல்வித் துறையிலும் சிறப்பாக இருக்கிறது; அரசியல் தெளிவு பெற்ற மக்கள் இங்கே இருக்கிறார்கள் — என்றெல்லாம் சொல்லுகிறார்கள்.

இவ்வளவு இருந்தும் இங்கே ஏழ்மை ஏன் நிலவுகிறது? இல்லாமை ஏன் இருக்கிறது? போதாமை ஏன் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறது?—இவற்றிற்குத் தக்க பதில் தரும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்; எங்களுடன் நீங்களும் சேர்ந்து துணை இருக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாக வந்த நாங்கள்—புதிய பொறுப்பின் பழக்கம் இல்லாத காரணத்தால் வேலையிலே தயக்கம் இருக்கலாம்; ஆனால்,'அதுதான் எங்கள் சுபாவம்' என்று கருதாமல் 'சூழ்நிலைதான் காரணம்' என்று ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

தொழில்கள் பரவலாக ஏற்பட்டு, அதன் மூலம் செல்வம் அதிகரிக்க, அந்தச் செல்வத்தை சமுதாயம் முழுவதும் அடைய வழி செய்ய வேண்டும். அதற்கான கல்வி வளர்ச்சியும் பரவ வழி செய்ய வேண்டும்.

### 'வினைத்திட்பம்' வளர்ப்போம்

நிர்வாக இயந்திரத்தைப் பற்றி எனக்குப் பயம் காட்டினார்கள். ஆனால், உங்களையெல்லாம் இங்கு கண்ட பிறகு, அது எனக்கு அவ்வளவு பயம் காட்டுவதாகத் தெரியவில்லை. ஜனநாயகத்தில் ஆட்சி மாறி மாறி வருவதுதான் நல்ல அம்சமாகும். சக்கரம் உருண்டால்தான் பயணம் நடக்கும். இல்லாவிட்டால் அங்கேயே நிற்கும். இப்போது சக்கரம் உருள ஆரம்பித்திருக்கிறது. அரசாங்க நிர்வாகத்தில் அனுபவம் பெற்றவரான முன்னாள் முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் எங்களுக்கு வழி சொல்ல வேண்டும்.

... கூட்டு முயற்சியே, நாட்டு வளர்ச்சிக்கு அடிப்படை ...

# அரசாங்க ஊழியர்களுக்கு, முதல்வரின் அன்புரை

அரசாங்க அலுவலர்களான நீங்கள் ஆக்கப்பூர்வமான யோசனைகளைக்கூறவேண் வேண்டும். எனக்குப் பதவி வந்துவிட்ட தாகக் கருதி, நீங்கள் ஒதுங்குவீர்களானல் பதவி எனக்கு ஒரு நோயாகவே மாறிவிடும். ஆகவே, தாராளமாக யோசனைகளைக் கூறுங்கள்.

### செயற்கரிய செய்வோம்

நீங்களும் நானும் சேர்ந்து செய்ய வேண்டியது நிரம்ப உண்டு—உணவு நெருக்கடியைத் தீர்க்க அரும்பாடு படுங் கள்; தொழில் வளத்தைப் பெருக்குவதில் உங்கள் அறிவாற்றலைப் பயன்படுத்துங்கள். பெருகுகின்ற தொழில் வளத்தின் மூலம் கிடைக்கக்கூடிய செல்வத்தைச் சமுதாயத் துக்கு முழுமையாகப் பங்கிட வழி முறை களை வகுத்துத் தாருங்கள்; வெறும் செல் வத்தை விட நிலையான கல்விச் செல்வத்தை எல்லா மக்களும் பெற வழி செய்யுங்கள்.

நம் முன்னுலே இருக்கின்ற பணிகள் மலை போல் இருக்கின்றன; தனி ஒரு மனித னுலோ, அவருக்குத் துணையிருக்கும் ஏழு எட்டு அமைச்சர்களாலோ ஆகக்கூடிய காரி யம் அல்ல இது; நீங்கள் அனைவரும் சேர்ந்து செய்ய வேண்டிய காரியம்;

அந்த வகையில்தான் உங்கள் துணையை நாடுகிறேன். நித்தநித்தம் உங்களைச் சந்திக்கிறவன்தான் நான் என்றாலும், புதிய பொறுப்பேற்ற பிறகு சந்திப்பதில் புதிய பொருள் இருக்க வேண்டும் என்று விரும்பியே உங்களைச் சந்திப்பதில் மிக்க பெருமைப்படுகிறேன்.

உங்கள் மனத்தில் சில குறைகள் இருக்கலாம். அதற்கு நிச்சயம் பரிகாரம் தேடப்படும். ஆனல், எங்களை அதுபற்றி அணுகுகிறபோது ஐயோ பாவம், இவர்கள் புதியவர்கள். கொஞ்சகாலம் ஆகட்டும் என்று அணுகவேண்டும்.

### உங்கள்வீட்டு முதல்பிள்ளை

உங்கள் அத்தனைபேருடைய அன்பு அரணுக இருக்கும் வரை, நிச்சயம் நாங் கள் எடுத்த பணியில் வெற்றி பெறுவோம்.

தலைமைச் செயலாளர் அவர்கள் என்னை முதலமைச்சர் என்று கூறினர். உங்கள் அலுவலகத்தை விட, உங்கள் இல் லத்தைப் பற்றியும் உங்கள் இல்லங்களி லுள்ள கஷ்டம் பற்றியும் நான் நன்றாக உணர்ந்திருப்பதால்—உங்களின் முத லமைச்சர் என்பதை விட, உங்கள் வீட்டி லுள்ள முதல் பிள்ளை என்று கருதி ஒத்து ழைப்புத் தரவேண்டும்.

---

வாழ்த்துக் கதிர்—

# மாணவர் கண்ட அமைச்சர்கள்

[திரு மா. செல்வராசன், பச்சையப்பன் கல்லூரி, சென்னை—30]

**[அண்ணுமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் உட்பட, தமிழ் நாடெங்கிலுமுள்ள மாணவர் மன்றங்கள் பல, அமைச்சர்களை உள்ளன்போடு வரவேற்றுள்ளன. "ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்" போல், சென்னை மாநகர் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் அமைச்சர்களுக்கு அளித்த வரவேற்பு பற்றிய எழுத்தோவியத்தை—உணர்ச்சிக் கதிரை—எண்ணப் பொறியை—இங்கே தருகிறேம். —ஆசிரியர்]**

இன்றையமாணவ உள்ளங்களில் தாய்மொழிப் பற்று மிகுந்து வருவதைக் காண்கிறேம். தமிழ் என்று சொல்லி வருகின்றவர்களுக்குத் தங்களையே தருகின்ற அளவிற்கு அவர்கள் தயாராக இருக்கின்றனர்கள்.

பச்சையப்பன் கல்லூரிப் பேரவை, முதலமைச்சரை அழைக்க இருக்கிறது என்று தெரிந்ததும், தமிழ் மன்றம் பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞர் மு. கருணுநிதி அவர்களையும், சமூகத் தொண்டுக் கழகம் கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர் களையும் அழைத்துவிட்டன. மாணவர் அமைப்புக்கள் போட்டி போட்டுக்கொண்டு அமைச்சரை வரவேற்கத் தொடங்கின.

மூவருமே முத்தமிழ் முரசுகள்! மாணவர் உள்ளங்கள் அவர்களை அமைச்சராகப் பார்க்கவில்லை. தங்கள் தலைவர் களாகவே மதித்தன. கல்லூரி விழாவில் முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் கலந்துகொண்டார்கள்.

[12-ம் பக்கம் பார்க்க]

# "ஆக்க முயற்சிகள் அனைத்திலும், முழு ஆதரவு"

## பாரதப் பிரதமரின் உறுதி

"இந்திய அரசாங்கத்தை, தலைமை தாங்கி நடத்திச் செல்ல வேண்டிய மாபெரும் பொறுப்பு, மீண்டும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதில் உங்களுடைய ஆதரவையும், ஒத்துழைப்பையும், வாழ்த்துக்களையும் பெறுவதற்காக இன்று உங்களிடம் பேசுகிறேன். பணிவோடு இந்தப் பணியில் என்னை மீண்டும் அர்ப்பணித்துக்கொள்கிறேன். இந்த நாட்டில் எனக்கு 50 கோடி தோழர்களும், குற்றம் குறைகளை எடுத்துச் சொல்வோர்களும், நண்பர்களும் இருக்கிறார்கள் என்று அறிவேன்.

### உயர்ந்த தரமுள்ள பணி தேவை

இதைப் போன்ற ஒரு சோதனைக் காலத்தை நாம் என்றுமே எதிர்நோக்கியது கிடையாது. ஒவ்வொரு பக்கத்திலும் கோரிக்கைகளும் ஆவலுடன்கூடிய நம்பிக்கையும் நிறைந்திருக்கின்றன. இவை அனைத்தையும் நான் மதிக்கிறேன். பற்றாக்குறை இல்லாமலும், அச்சமின்றியும், மேலான, முழு வசதிகளுடன்கூடிய வாழ்வை விரும்பும் நம் மக்களின் இந்த அடிப்படைத் தேவைகளை நாம் நிறைவேற்ற வேண்டும். ஆயினும், என்னிடத்தும் என் சகாக்களிடத்தும் நீங்கள் எதிர்பார்ப்பது போலவே நானும் உங்களிடமிருந்து ஒன்று எதிர்பார்க்கிறேன். நீங்கள் எந்த இடத்தில் இருந்தாலும், எந்தப் பணியைச் செய்தாலும், எந்தநேரத்திலும், எந்த சமயத்திலும், உயர்ந்த தரமுள்ள பணியை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

பொதுத் தேர்தல்கள் மகத்தான அனுபவத்தைத் தந்திருக்கின்றன. அரசியல் பக்குவத்தை நோக்கி நாடு முன்னேறியிருப்பதை அவை குறிக்கின்றன என்று நம்புகிறேன்.

தேர்தல்கள் நடைபெற்ற விதம் குறித்தும், அவற்றின் முடிவுகள் குறித்தும் உங்களுக்கு எனது பாராட்டுதல்கள். இந்தியாவின் சுதந்திர மக்களாகிய நீங்கள், உங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்ததுமட்டுமல்லாமல், ஜனநாயக முறைமையில் நமக்குள்ள நம்பிக்கையை வெற்றிகரமாக எடுத்துக் காட்டிவிட்டீர்கள்.



மத்திய அரசாங்கத்திலும், பல ராஜ்யங்களிலும் ஆளும் கட்சிக்கு இருந்த பெரும்பான்மை குறைந்துவிட்டது. வேறு சில ராஜ்யங்களில், முன்பு எதிர்க் கட்சி ஸ்தானத்தில் இருந்த ஒரு கட்சியோ அல்லது கட்சிகளோ தனியாகவும் கூட்டாகவும் ஆட்சிக்கு வந்திருக்கின்றன. இது குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சியாகும். விரும்பியதைத் தேர்ந்தெடுப்பதுதான் மக்களாட்சி. ஒன்றுக்கு மேற்பட்டவற்றிலிருந்துதான் விரும்பியதைத் தேர்ந்தெடுக்க முடியும். ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் வளர்ந்து போட்டியிடுகின்றன என்பது நல்ல அறிகுறியாகும்.

காங்கிரஸ் என்னும் மாபெரும் ஸ்தாபனத்தைப் பற்றி நீண்ட காலமாகவே குறை கூறப்பட்டு வந்திருக்கிறது. விடுதலை அடைவதற்கும், அதன் பிறகு ஆரம்ப வருடங்களிலும் நாட்டைத் தலைமை தாங்கி நடத்தி, இந்திய தேசீய காங்கிரஸ் வரலாற்றுச் சிறப்பு மிக்க பங்கை ஆற்றியிருக்கிறது. ஸ்திரத் தன்மையும், தொடர்ச்சியும் மிகமிக முக்கியமாகத் தேவைப்பட்ட போது காங்கிரஸ் அவற்றை அளித்தது. மாறுதலுக்கான விதைகள் விதைத்து அவை துளிர்விடவும் காங்கிரஸ் உதவியது.

அரசாங்கத்தில் பெரும்பான்மை குறைந்துவிட்டது என்பதனுலும் அல்லது அரசியல் மாறுதல்கள் ஏற்பட்டதனுலும் ஸ்திரமற்ற நிலை உண்டாகியிருக்கிறது என்னும் கருத்துக்கோ விரக்திக்கோ இடமில்லை. இந்தியா ஸ்திரமுள்ளதாகவும் நல்ல நிலையிலும் இருக்கிறது. எல்லா ராஜ்யங்களிலும் மக்கள் தேர்ந்தெடுத்துள்ள மந்திரி சபைகள் அமைக்கப்படும் என்று நான் நம்பினேன். இது, உண்மையிலேயே, சிரமமின்றியும், விரைவாகவும் நடைபெற்றுவிட்டது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். ராஜஸ்தான் ஒன்று மட்டும்தான் மாறுபட்டிருக்கிறது. அங்கு ராஷ்டிரபதியின் ஆட்சி ஏற்படும்படி ஆகிவிட்டது. அப்போது நிலவிய சூழ்நிலையில், வேறு வழியெதுவும் தெரியவில்லை. எனினும் சட்டசபை கலைக்கப்படவில்லை. அந்த ராஜ்யத்தில் கூடிய விரைவில் மாமூலான பொறுப்புள்ள அரசாங்கம் மீண்டும் ஏற்படும் என்று நம்புகிறேன்.

## சீரிய கொள்கைகளின் அடிப்படையில் ஒன்றுபட்ட இந்தியா

சுபிட்சம் மிக்க, ஒன்றுபட்ட புதியதொரு இந்தியாவை நிர்மாணிக்கும் விறுவிறுப்பான பணியில் மத்திய அரசாங்கத்துடன், மாநிலங்களில் அமைந்துள்ள அரசாங்கங்கள், அவை எந்த கட்சி சார்புடையவையாயினும், முழுப் பங்கு வகிக்கின்றன. மக்கள் ஆட்சி, மதச் சார்பின்மை, சமூக நீதி, எல்லோருக்கும் சம வாய்ப்பு என்ற கொள்கைகளின் அடிப்படையில்தான், இப் புதிய இந்தியா அமைய வேண்டும்.

என்னுடைய சகாக்களான முதலமைச்சர்களுக்கு நான் எழுதியிருக்கிறேன். ஆக்கரீதியான முயற்சிகள் அனைத்திலும் அவர்களுக்கு முழு ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று மத்திய அரசாங்கத்தின் சார்பில் உறுதி கூறியிருக்கிறேன். அதே போன்று, அவர்களுடைய ஒத்துழைப்பையும் நான் எதிர்பார்க்கிறேன். நம்மிடையே வேறுபாடுகள் எப்படிப்பட்டதாயினும், நமது பொறுமை மிக்க, சிந்திக்கும் திறன் பெற்ற, துணிவுள்ள மக்களின் நல்வாழ்வு என்ற பொது அக்கறை நம் இதயத்தில் இருக்கும் என்று நான் அறிவேன்.

கொள்கை பற்றிய அறிவிப்புகளுக்கு இது சமயமல்ல. பார்லிமெண்டில் இவை நிறைய இடம் பெறும். எனினும், உங்களுடன் சில கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

தேர்தல்கள் முடிவடைந்துவிட்டன. பிரதிநிதி ஸ்தாபனங்கள் நீடித்திருக்கவும், அவை வளர்வதற்காகவும், தேர்தல்கள்

(30— பக்கம் பார்க்கவும்)

## புத்துணர்ச்சியோடு புதிய தலைமுறையை உருவாக்குவோம்

# “மக்களுடன் மிக நெருங்கிய தோழமைத் தொடர்பு கொள்வோம் . . .”

**வானொலியில், தமிழக முதலமைச்சரின் கனிவு நிறைந்த கருத்துரை**

**உ**ங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இன்று சட்டமன்றத்தில் உறுதிமொழி தெரிவித்து பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்நாட்டு மன்னர்களாகிய நீங்கள் பிறப்பித்த ஆணையினை ஏற்றுக் கொண்டு அவர்கள் சட்ட மன்றத்தில் அமர்ந்துள்ளனர். அவர்களின் துணையுடன் நானும் என்னுடன் உள்ள மற்ற அமைச்சர்களும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளோம். மன்னர்களாகிய உங்களிடம் எமது வணக்கத்தையும், நன்றி அறிதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

### புனிதக் கடமை ஆற்ற....

பல ஆண்டுகளாக தொடர்ந்து என்னிடமும் என் தோழர்களிடமும் பாசம் கலந்த பரிவு காட்டி வருகின்றீர்கள். இந்த ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில், நாடாளும் பொறுப்பினையும் தந்துள்ளீர்கள். தங்கள் அன்பினையும் ஆதரவினையும் மிகப் பெரிய அளவுக்குப் பெற்றிருக்கும் நான், நெஞ்சு நெகிழ்ந்திடும் நிலையிலேயே பேசுகிறேன். தங்களின் மேலான நம்பிக்கைக்கு முழுதும் ஏற்றவனாக நடந்து கொள்ளவேண்டும் என்ற பொறுப் புணர்ச்சியைத் துணைகொண்டு கடமையைச் செய்திடுவதில் ஈடுபடுகிறேன். என்னைச் சுற்றிலும் கனிவு நிரம்பிய கண்கள்; என்னைச் சுற்றிலும் கை கொடுக்கும் கரங்கள்; என்னை ஊக்குவிக்க, எந்தப் பக்கமிருந்தும் அன்பு மொழிகள்; துணை நிற்கிறோம்; வழி காட்டுகிறோம்; முறை அறிவிக்கிறோம்; குறை களைகிறோம்; தயக்கம் வேண்டாம்; பொறுப்பினை நிறைவேற்றிடுக, என்று தகுதிமிக்க தமிழகத்தார் கூறிடுவது, செவிக்கு செந்தேனாக இருக்கிறது. பொறுப்பினை ஏற்றுக் கொண்டேன். ஒரு புனிதக் கடமையில் ஈடுபடுகிறோம் என்ற உணர்ச்சியுடன் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கிறேன்.

### எதிர்நோக்கியுள்ள எண்ணற்ற பிரச்னைகள்

நான் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பது தமிழ்நாட்டில்—வழி வழி வந்த வல்லவர்கள், வித்தகர்கள் நிரம்பிய தமிழ் நாட்டில். காவிரி, தென்பெண்ணை. பாலாறு, வைகை போன்ற ஆறுகளும் அருவிகளும் பண்பாடி வளமளித்திடும் தமிழ் நாட்டில். ஆயிரம் தொழில்களில் ஈடுபட்டு, நாட்டுக்குச் செல்வத்தை ஈட்டித் தரும் பாட்டாளிகள் நிரம்பிய தமிழ் நாட்டில். பாட்டுமொழியாம் தமிழ் மொழியுடன் இழைந்துள்ள பண்பாடு சிறந்திடும் தமிழ் நாட்டில். பாருக்குள்ளே நல்ல நாடு என்று பாவலர் கொண்டாடிடும் தமிழ்

> “எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் விலை
> எல்லோரும் இந்நாட்டு மன்னர்—நாம்
> எல்லோரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
> எல்லோரும் இந்நாட்டு மன்னர் வாழ்க!”
>
> —பாரதியார்

நாட்டில். அதனை எண்ண எண்ண இனிக்கிறது. ஆனால்? ஆமாம். அந்தக் கவலைத் தந்திடும் சொல் வரத்தான் செய்கிறது. ஆனால், எத்தனை எத்தனை சிக்கலுள்ள பிரச்னைகள் நெளிந்துகொண்டுள்ள தமிழ்நாடு என்பதனை எண்ணும்போது கவலை ஏற்படுகிறது. இந்தப் பிரச்னைகளைச் சிந்திக்கவும், சிக்கல்களைத் தீர்க்கவும், போதுமான உறுதியும் திறமையும், துணையும் தோழமையும் தொடர்ந்து கிடைத்திட வேண்டுமே என்பதனை எண்ணும்போது. நீங்கள் உடன் இருக்கிறீர்கள் என்ற நினைவு தான் கவலையை ஓட்டுகிறது ; கடமையை செய்வோம் என்ற உறுதியைத் தருகிறது.

உங்களுக்காக நான் என்பது மட்டுமல்ல நண்பர்களே, உண்மையைச் சொல்லுவதானால், உங்களால் நான்— அதனை உணருகிறேன்.—மறந்திடுபவனும் அல்ல நான்.

ஆயிரமாயிரம் திறமை மிகு அலுவலாளர்கள் பணியாற்றினால் மட்டும் போதாது ; ஆட்சி உண்மையில் செம்மையானதாக அமைந்திட வேண்டுமென்றால், வயலில், தொழிற்சாலையில், அங்காடியில் பணிபுரிந்திடும் உற்பத்தியாளர்கள் உழைப்பாளர்கள் அனைவரும் 'ஆட்சி நடத்திடுவோர் நாமே', என்ற உணர்வுடன் தத்தமது—கடமையினைச் செய்யவேண்டும். கற்றறிவாளர் எம்மை நல்வழி நடந்திடச் செய்யவேண்டும். இதழ் நடத்துவோர் உடனிருந்து முறை கூறிட வேண்டும். இவர் யாவரும் சேர்ந்து நடத்திடுவதே அரசு—நாங்கள் உங்களாலே அமர்த்தப்பட்டவர்கள்.

**" உழைப்பவர் வாழ்வு உயர்ந்திட, வழிவகுப்போம் "**

வயல்களிலே கதிர் குலுங்கிடின், சர்க்கார் அலுவலகங்களில் மகிழ்ச்சி துள்ளும். ;

ஆனால் என்னிடம் நீங்கள் ஒப்படைத்துள்ள வேலையின் கடினத்தையும் ஆண்டு பலவாகக்குவிந்து குவிந்துகெட்டிப்பட்டு விட்டுள்ளசீர்கேடுகளையும், சிக்கல்களையும் மறந்து விடாதீர்கள். கடமையை நான் செய்து முடித்திட உங்கள் ஒவ்வொருவருடைய முழு ஒத்துழைப்பும் தேவை என்பதை மறந்துவிடாதீர்கள். ஆட்சி நடத்திட ஆணை பிறப்பித்துவிட்டோம். இனி நாம் இல்லாமலேகூட ஆட்சி செம்மையாக நடந்திடும் என்று இருந்துவிடமாட்டீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் அவரவர் துறையில் இருந்து நற்பணியாற்றினால் மட்டுமே, என் வேலை நடந்திடும். நாடு சீர்படும்.

### அனைவரின் ஒத்துழைப்பும் தேவை

நாட்டு ஆட்சி செம்மையானதாகிட, நானும் எனது நண்பர்களும் அமைச்சரகத்தில் அமர்ந்து பணியாற்றினால் மட்டும் போதாது. அரசு நடந்திட

வள்ளுவர் வழியிலே :

## மன்னரைச் சேர்ந்தொழுகல்

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப்படும்

['இந்தத் தலைவர் எம்மைவிட வயதில் சிறியவர், எமக்கு உறவினர்' என்று, அவரை மதிக்காமல் நடக்கக் கூடாது. தலைமைப் பதவிக்கு உரிய பெருமையைத் தந்து, நடக்கவேண்டும்.]

பழையம் எனக்கருதி, பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்

['தலைவர், நமக்கு ஏற்கனவே தெரிந்தவர், பழக்கப்பட்டவர்' என்று எண்ணி, பண்பற்ற செயல்களைச் செய்தால், தீங்கு விளையும்]

கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்

['அவர் நம்மிடம் தனி அன்பு கொண்டவர்' என்ற உரிமை பாராட்டி, தலைமைப் பதவிக்குப் பொருந்தாத செயல்களை, தலைவருக்கு வெறுப்பு உண்டாகும்படி செய்யக் கூடாது.

குறிப்பறிந்து, காலம் கருதி, வெறுப்பில
வேண்டுப, வேட்பச் சொலல்

[தலைவரிடம் பேசுவதற்கு, அவரது குறிப்பறிந்து, உரிய காலத்தைத் தெரிந்தெடுக்க வேண்டும். மற்றும், வெறுப்பு இல்லாத, விருப்பமான செய்திகளை, தக்க முறையில் கூறவேண்டும்.]

தொழிற்சாலைகளிலே தோழமை மலர்ந்து, நீதியும் நிம்மதியும் கிடைத்து உற்பத்தி பெருகிடின், நாட்டு நிலை உயர்ந்திடும். அங் காடியிலுள்ளோர், கொள்வன கொடுப்பன என்பவை நேர்மையின் அடிப்படையில் அமைந்திருத்தல் வேண்டும் என்று இருந் திடின், அகவிலையும் பதுக்கலும் அழிந்து படும். பொது மக்களின் வாழ்வு சீர்படும். நாட்டின்நிலை உயர்ந்திட பணியாற்றிடவே நாம் என்ற உணர்வுடன் மாணவமணி கள் கல்விக்கூடங்களில் பயிற்சி பெற்றிடின் நாடு மேம்பாடடையும், இவை எல்லாவற் றின் கூட்டே ஆட்சி. சில மண்டபங்களிலே மட்டும் செய்யப்படுகிற காரியமல்ல ஆட்சி. நாட்டு ஆட்சி, வீட்டுக்கு வீடு காணப்படும் பண்பைப் பொறுத்திருக்கிறது.

இல்லாமை, போதாமை நீக்கப்பட்டு வலி யோர் எளியோரை வாட்டிடும் கொடுமை ஒழிக்கப்பட்டு, எல்லோர்க்கும் ஏற்றம், இன்பம், உறுதி அளிக்கப்பட்டு, நாடு பூக் காடாகத் திகழ்ந்திட வேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்டு, இந்த நிலை பெறு வதற்கான பணியில் ஒரு சிறு பகுதியை யேனும் நாம் செய்து முடிக்கவேண்டும் என்ற ஆவலுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளேன். எல்லா முனை களிலும் பற்றுக்குறை மிரட்டியபடி இருப் பதைக் காண்கிறேன். பல்வேறு முனை களில், தவருன நோக்கம், தனக்குத்தான் என்ற எண்ணம் மேலோங்கி இருக்கக் காண் கிறேன். பொது நலனில் மட்டுமே தனி மனிதர் நலன் காணமுடியும் என்பது ஏட் டுக்கு—நாட்டுக்கு அல்ல என்ற எண்ணம் கொண்டோர் உலவிடக் காண்கிறேன்.

## "அறநெறி அரசின் குறிக்கோள், மக்களின் நல்வாழ்வே"

### தடைக் கற்கள் நீங்கிடின்...

பிளவுகள் ஏற்படுவதற்கான முறைகளையும் எண்ணங்களையும் விட்டொழிக்க மன மற்று, இருப்பவர்களைக் காண்கிறேன். கூட்டு முயற்சிக்குப் பல தடைக் கற் கள் போடப்பட்டிருப்பதைக் காண் கிறேன். இவைகளை நீக்கிடின் நாடு எத்தகைய எழில்பெறும் என்பதனை எண்ணுகிறேன். உம்மை அழைக் கின்றேன் நண்பர்களே, நம்பிக்கை யுடன் அழைக்கிறேன். இந்த தூய தொண்டாற்ற வாரீர் என்று அழைக் கின்றேன். ஒவ்வொருவரிடமும் உள்ள அறிவும் ஆற்றலும், கிடைத்திடும் நேரமும், வாய்ப்பும், பெற்றிடும் வசதியும் நினைப்பும், இதற்கா கவே பயன்படுத்தப்பட வேண்டும். உங்களோடு சேர்ந்து இதற்காக உழைத்திட நானும், பொறுப்பேற்றுக் கொண்டுள்ள என் நண்பர்களும் காத் திருக்கிறோம்.

உணவுக்கே உழல்கிறோம்—அறிவீர் கள்—அறிந்த பின் செய்திடவேண்டி யது என்ன? இந்த நிலைமைக்கான காரணம் காண்கிறோம், குறை களை

### இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அமைந்த ஒழுங்கு முறை

'மன்னரிடம் பழகுவதற்குரிய முறைகள்' என்ற தலைப்பில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, வள்ளுவர் பெருந்தகை தொகுத்துக் கூறியுள்ளார். முடியாட்சி இருந்த காலத்துக்கேற்ப, 'மன்னர்' என்று அவர் குறிப்பிட்டதற்கு, குடியாட்சி நிலவுகின்ற இன்றைய நிலையில், 'ஆட்சித் தலைவர்' எனப் பொருள் கொள்வாரும் உண்டு. ஆனல், மக்க ளையே 'மன்னர்கள்' என்று ஏற்றுக் கொண் டுள்ளது, இன்றைய மக்களாட்சி உலகம்.

இந்தக் கொள்கையின்படி, மக்களது விருப்பங் களுக்குச் செயல் உருவம் தருபவர்களாக, ஆட்சித் தலைவர்கள் விளங்குகிருர்கள். ஆட்சித் தலைமை எடுக்கும் முடிவுகளை, நடைமுறையில் நிறைவேற்றும் பொது ஊழியர்களாக, அரசாங்கப் பணியாளர்கள் திகழ்கிருர்கள்.

ஆக, மக்கள்—ஆட்சித் தலைமை—நிர்வாக ஊழியர் என்ற மூன்று வகையினரும், ஒருவருக்கொருவர் ஒத்துழைக்கவேண்டிய உறவு முறைகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கு, வள்ளுவர் வகுத்துத் தந்துள்ள நெறிமுறைகள், எப்போதும் வழிகாட்டும் ஒளிக்கதிர்களாகும்.

கிறோம், முறை வகுக்கின்றோம், அரசாள்வோர் என்ற நிலையில். ஆனால் வகுத்திடும் முறைகள் வெற்றி பெற உங்களைத்தான் நம்பியிருக்கின்றோம். நாமாகத் தேடிப் பெற்றுக்கொண்ட அரசு இது. நம்முடைய துணையை நம்பியே இயங்கும்அரசு இது. எனவே இது செம்மையாக நடந்திட, நாம் தான் துணையிருக்க வேண்டும் என்று ஒத்துழைத்திட முனைந்து நின்றிட வேண்டுகிறேன்.

உணவு உற்பத்தி பெருகிடவும், உற்பத்தியாவது உண்போருக்கு முறையாகக் கிடைத்திடவும், கிடைப்பது அடக்கமான விலையில் நின்றிடவும், முறைகள் யாவை, என்பதறிந்திட விற்பன்னர்களிடம் கருத்தறிந்து வருகின்றேன். செயலில் ஈடுபடு முன்னர் சிந்தித்திடல் தேவை அல்லவா? அதிலே இப்போது கவனம் செலுத்தி வருகிறோம். உழைப்பவர் வாழ்வு உயர்ந்திட, வழி யாது என்பதனை ஆராய்ந்து வருகின்றோம்.

மக்களுடன் மிக நெருங்கிய தோழமைத் தொடர்பு கொண்டதாக நிர்வாகம் இருந்திட, என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி யோசித்து வருகின்றோம்.

ஊழலும் ஊதாரித்தனமும் போக்கப்பட என்ன நடவடிக்கை மேற்கொள்வது என்பது பற்றி கலந்து பேசி வருகின்றோம். எங்கள் துறையிலிருந்து என்னென்ன செய்ய இயலுமோ அவற்றைச் செய்திடத் தயங்கிடோம். உடனிருந்து, எமது முயற்சிக்கு வெற்றி கிடைத்திடச் செய்வது உமது கடமை.

### இருபதாண்டுகளாக காணாத நிலை

புதிய அரசு அமைந்திருக்கிறது இங்கு.. புதிய அரசு மட்டுமல்ல, அரசியலிலே புதிய பிரச்சினையை எழுப்பிவிடும் நிலையில் உள்ள அரசு..இங்கும், கேரளத்திலும், வங்கத்திலும், பீகாரிலும், பஞ்சாபிலும், ஓரிசாவிலும் ஆட்சிப் பொறுப்பில் காங்கிரசல்லாத கட்சியினர் உள்ளனர். வேறு சில மாநிலங்களில் காங்கிர கட்சி அரசு அமைந்திருக்கிறது. மத்திய சர்க்காரில் காங்கிரஸ் கட்சி அரசோச்சுகிறது. இந்த நிலை கடந்த இருபதாண்டுகளாக, நாடு காணாத நிலை.

இந்த நிலை காரணமாக, சிக்கல்கள், எரிச்சல்கள், மோதுதல் ஏற்பட்டுவிடுமோ, ஒற்றுமைக்கு ஊறு நேரிடுமோ, குழப்பநிலை வளர்ந்திடுமோ என்ற அச்சமும் ஐயப்பாடும் கொண்டிடுவோர் உள்ளனர். தமிழகத்தில் அரசோச்சும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கூறிக்கொள்கிறேன். இங்கு அமைந்துள்ள அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை, அந்த நிலைமையை நிச்சயமாக உண்டாக்காது. மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்கும் உள்ள உறவு முறைகள் அந்த முறைகள் செயல்படுத்தப் படும் வகை, என்பன பற்றிய புதிய சிந்தனையைக் கிளறவும், செம்மையான தாக்கப்படவும் இன்று பல இடங்களில் காங்கிரசல்லாத அரசு அமைந்திருப்பதை ஒரு நல்ல, தேவையான பயன் தரத்தக்க வாய்ப்பாக கருத வேண்டுமேயொழிய, கைபிசைந்துகொண்டு, கலக்கமடைவது தேவையற்றதாகும்.

எனறென்றும் எல்லா மாநில அரசுகளும், மத்திய அரசும் ஒரே கட்சியின் ஆட்சியில்தான் இருக்கும் என்று அரசியல் நுட்பம் அறிந்த யாவரும் கூறமாட்டார்கள், கருதிடமாட்டார்கள், எதிர்பார்த்திட மாட்டார்கள்.

### பண்புமிக்க நுண்ணறிவு

ஆகவே இங்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் வேறு இடங்களில், பல கட்சிகள் கொண்ட கூட்டு ஆட்சியும் ஏற்பட்டிருப்பது கண்டு, திகைப்பு கொள்ளாமல், எரிச்சல் அடையாமல், கசப்பு கொள்ளாமல் மத்திய சர்க்காரை நடாத்திடும் காங்கிரசு அரசு நடந்துகொள்ளுமானால், எரிச்சலும் மோதலும் எழ வேண்டிய நிலையே வராது. மிகச் சிறந்த, பண்புமிக்க ஆட்சி முறை நுண்ணறிவு இதற்குத் தேவை. மற்றவர்களின் கருத்தறிவதிலே ஓர் அக்கறை, அவர்களின் முறையீட்டைக் கேட்பதிலே ஒரு கனிவு. அவர்களுக்கான காரியமாற்றுவதிலேயும் துணை நிற்பதிலேயும் ஓர் ஆர்வம். இவை எல்லாவற்றையும்விட, ஒருவர் மனதை மற்றவர் புரிந்து கொள்வதிலே தனித் திறமை, இன்சொல், நட்பு, பரிவு ஆகியவை தேவை.

(19-ம் பக்கம் பார்க்க)

# தோழமை உணர்வின் சிறந்த எடுத்துக்காட்டு




"உலகில் எத்தகைய தோழமை உணர்ச்சி ஏற்படவேண்டும் என்பதை எடுத்துக்காட்ட, உணவுப் பொருள் வழங்கும் நாள் இது. சோவியத் மக்களும், அரசாங்கமும் அளித்த இந்த உதவி கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். பெருமைப்படுகிறேன். அந்த மகிழ்ச்சியை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

உலகில் சமாதானமும் சாந்தமும் நிலவ சோவியத் யூனியன் எடுத்துக்கொண்டுள்ள அக்கறையை உலகில் யாரும் மறுக்க முடியாது. ஒருவேளை தங்களைத் தாங்களே மறுத்துக் கொள்பவர்கள் மறுக்கலாம்.

சோவியத்நாடு, சோவியத் மக்கள் என்ற வார்த்தைகளைக் கேட்டவுடனேயே, இந்த நாட்டு மக்களின் மனதில் வசீகர எண்ணங்கள் தோன்றுகின்றன. அவ்வளவு வசீகரமான நாட்டின் உதவியை நாங்கள் மதிக்கிறோம்.

இந்திய மக்கள், குறிப்பாகத் தமிழர்கள் தானம் வாங்கிப் பழக்கப்பட்டவர்கள் அல்ல. ஆனல், இந்த நெருக்கடியான நேரத்தில் நல்லெண்ணத்தையும் கனிவான இதயத்தையும் தோழமையையும் கொடுத்து உதவிய மக்களுக்கு விரைவில் வட்டியும் முதலுமாகச் சேர்த்துச் செலுத்துவோம்.

உணவுத் துறையில் தன்னிறைவு பெறவேண்டும் என்பதை இந்த விழா நமக்கு உணர்த்துகிறது. தமிழகம் எப்போதும் தன்னிறைவு பெற்று இருந்ததை வரலாறு கூறுகிறது. பாண்டவர்களும் கவுரவர்களும் சண்டையிட்ட பாரத யுத்தத்தின்போது, அவர்களுக்குத் தமிழகத்திலிருந்து உணவு சென்றதாக பாரதம் என்ற இதிகாசம் கூறுகிறது.* அந்த இதிகாசம் கூறும் இதர விஷயங்களில் நான் அக்கறை காட்டாவிட்டாலும், இதனைப் பற்றி பெருமைப்படுகிறேன்..

என்றென்றும், சோவியத் மக்களிடம் நமக்கு நல்லெண்ணம் உண்டு. அவர்கள் தமிழ் மொழியிடமும், திருக்குறளிடமும் அளவு கடந்த அன்பு கொண்டிருப்பது கண்டு பெருமிதமடைகிறேன்......"

[இலவசமாக, சோவியத் யூனியன் அளிக்கும் 2 லட்சம் டன் கோதுமையின் ஒரு பகுதியை, சென்னை துறைமுகத்தில் 12-3-1967 அன்று தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணுதுரை பெற்றுக்கொண்டு, நன்றி தெரிவித்துப் பேசியபேச்சின் சாரம்.]

---

### * புறநானூற்றுப் பாடல்

"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம்பதின்மரும் பொருது களத்தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய் !"

### விளக்க உரை

"அசைந்த தலையாட்டமணிந்த குதிரையையுடைய பாண்டவர் ஐவருடனே சினந்து நிலத்தைத் தம்மிடத்தேகொண்ட பொற்பூந்தும்பையையுடைய துரியோதனன் முதலாகிய நூற்றுவரும் பொருது, போர்க்களத்தின்கட் படுந்துணையும் பெருஞ்சோறாகிய மிக்க உணவை இருபடைக்கும் வரையாது வழங்கினேய் !"

[சேரமான் பெருஞ்சோற்றுதியஞ்சேரலாதனை, முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது].

மாணவர்கள் வேண்டுகோள் சிலவற்றை எழுதி அவரிடம் கொடுத்தார்கள். மக்களாட்சியின் முழுமையை, மாணவர்களாகிய நாங்கள், அண்ணாவிடம் கண்டோம். "இதைச் செய் என்று சொல்லவும் அதைச் செய்யாதே என்று தடுக்கவும் உங்களுக்கு உரிமை உண்டு. எதை முதலில் செய்ய வேண்டும் என்பதைக் கூடச் சொல்லுங்கள். என்னிடம் வந்து கலந்துரையாடுங்கள்; வாதிடுங்கள். நேரில் வர முடியவில்லை என்றால் எழுதி வேண்டுமானாலும் தெரிவியுங்கள்" என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் மொழிந்தார்கள்.

அந்த நேரத்தில் அவரை முதலமைச்சராகக் கருதவில்லை. தலைவராகக் கூடக் காணவில்லை; எங்களுடன் பழகும் இனிய நண்பராகவே கண்டோம்.

"மக்கள் தந்த பிச்சை இந்த அமைச்சர் பதவி: இருக்கச் சொன்னால் இருக்கிறோம்; இல்லையென்றால் வெளியே வருகிறோம்" என்று மக்களாட்சியின் உண்மைக்கு மதிப்புத் தந்து பேசுகிறார் அண்ணா.

எங்கள் கல்லூரியின் சமூகத் தொண்டுக் கழகத்தில் கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் கலந்து கொண்டார். கல்லூரியில் விழா நிகழ்ச்சிகள் ஆங்கிலத்தில் நிகழ்ந்து வந்தன. எந்தப் பொது நிகழ்ச்சியும் இனிமேல் தமிழ்நாட்டில் தமிழிலேயே நடைபெற வேண்டும் என்று உறுதியாக அறிவித்தார், கல்வி அமைச்சர். எங்கள் உள்ளங்களை இந்த ஆணை பெரிதும் இழுத்தது. "தமிழும் ஆங்கிலமும் போதும்; மூன்றாவதாக ஒரு மொழி வேண்டாம்" என்று, மாணவர் கனவு நிறைவேறிடத் தெளிவாக உரைத்தார்.

சமூகத் தொண்டு என்றால் போதிய ஆர்வமின்றி இருந்தனர், மாணவர். தமிழைப் பரப்புவது கூட ஒரு தொண்டுதான் என்ற அமைச்சரின் புதிய விளக்கம் ஆர்வத்தை ஊட்டிவிட்டது.

தமிழ் மன்ற விழாவிலே பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி கலந்துகொண்டார். "நான் உங்களில் ஒருவன். நீங்கள் வேறு நான் வேறு அல்ல" என்று தம்மையும் எங்களுடன் இணைத்துப் பேசியது வேறுபாடற்ற ஒத்த தன்மையை எங்கள் உள்ளத்தில் ஊட்டியது. மன்ற ஆண்டுவிழா மட்டுமல்ல, தமிழுக்கு இதுதான் ஆரம்ப விழா" என்று எங்கள் தமிழ்ப் பேராசிரியர் வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

"வெறும் பட்டங்களாலேயே வாழ்க்கை நிறைவெய்தி விடாது. குறிக்கோள் உள்ள வாழ்க்கையோடு எதிலும் குதியுங்கள்," என்ற அமைச்சரின் வீரவுரை எங்களைத் துள்ளி எழச் செய்தது.

ஞாயிறு (1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் தேதி) தொடங்கி வியாழனுக்குள் (1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் தேதி) தமிழக 'ஞாயிறு மூன்று' எங்கள் கல்லூரியில் ஒளி வீசக் கண்டோம்.

தமிழையே அவர்கள் மூச்சாகக் கண்டோம்; மாணவரிடையே அவர்கள் தெளிவாகவும் உறுதியாகவும் பேசினார்கள். மொழிச் சிக்கலைக் குழப்பாமல் வேட்டெஃகம் (துப்பாக்கி) போல முழங்கினார்கள். எங்கள் உள்ளமே அமைச்சர்களின் உள்ளம்; எங்கள் எண்ணமே அவர்களின் எண்ணம்; எங்கள் எழுச்சியே அவர்களின் எழுச்சி! நாங்கள் எங்கள் சுமைகளை இறக்கிக்கொள்கிறோம்; அவர்கள் சுமந்துகொள்ளத் தயாராயிருக்கும் போது, நாங்கள் தாங்கலாமா?

## முத்தமிழ் முரசுகள்—மூன்று ஞாயிறு

தாழ்ந்து கிடந்தவனைத் தட்டி எழுப்பி, வீறுகொள்ளச் செய்த தமிழின விறல் மறவர், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள். மேடும் பள்ளமும் ஒன்றாகிப் பீடும் பெருமையும் பெறப் பாடுபடும் மேலாளர் முதலமைச்சர் அண்ணா.

அண்ணா, எங்கள் கல்லூரியில் பேசியது மக்களாட்சியின் இலக்கணம்; அவர் செயல் முறைகள் இலக்கியம் என்று துணிந்து கூறலாம். மொழியைக் கூடக் கொஞ்சம் மறந்து சமுதாயத்தில் உள்ள வறுமையைப் போக்கிடவே முதலில் முனைகிறேன் என்று புறப்பட்டுள்ள அண்ணாவின் ஆட்சி எங்களுக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் ஒரு நம்பிக்கையை நல்கும் எனத் துணியலாம்.

மாணவர்களாகிய நாங்கள், தமிழக அமைச்சர்களை எங்களிடையே,

**காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக் கூறும் மன்னன் நிலம்**

என்ற குறளின் விளக்கமாகவே காண்கிறோம்.

---

### நாடும் ஏடும்

"... ..பல ஏடுகளை நான் புரட்டிப் பார்த்திருக்கிறேன். இன்று நாட்டில் நடப்பவைகளையும் அதனோடு ஒப்பிட்டுப் பார்க்கிறேன். ஏட்டிலே உள்ளதற்கும் நாட்டிலே நடப்பதற்கும் ஒரு துளிகூடப் பொருத்தமில்லை. எங்கு பார்த்தாலும் ஏழ்மை, வறுமை, பற்றாக்குறை, நலிந்த வாழ்க்கை இவைகள்தான் காணப்படுகின்றன.

ஆகவே, நம் ஒவ்வொருவரின் கடமை என்ன? மக்களை எப்படி நலிந்த வாழ்க்கையில் இருந்து தூக்கி விடுவது என்பதுதான். அவரவர் தாங்கள் தங்கள் துறைகளில் ஏற்றமுடன் பணிபுரிவதன் மூலம், இந்தத் தலைமுறையினர் படும் கஷ்டம் அடுத்த தலைமுறைக்காவது இல்லாமல் இருக்கச் செய்யவேண்டும். அத்தகைய குறிக்கோளுடன் தியாகம் செய்யும் பரம்பரையாக, பிற்கால சந்ததியினரின் வாழ்வு மலரப் பாடுபடவேண்டும்...."

[சென்னை மருத்துவக் கல்லூரி பொங்கல் விழாவில் (*11-3-67*) தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை.]

**அ**ன்று—அதாவது 1945-ம் ஆண்டில்—ஓர் ஏக்கர் நிலம் அவருக்கு ஒரு ரூபாய் வருமானத்தையே அளித்தது; அவருக்குச் சொந்தமான 300 ஏக்கர் நிலத்திலிருந்து அவர் அன்று பெற்ற வருவாய் ரூ. 300 தான். இதுகூட ஏதேனும் பயிர் செய்ததால் அவருக்கு கிடைத்ததா? அதுவும் இல்லை. அவருடைய நிலம், உவர் மண் நிலம். அந்த மண்ணை சலவைக்காரர்கள் பயன்படுத்திக் கொண்டு, அதற்கு ஈடாக அவர்கள் அளித்த தொகைதான், இந்த 300 ரூபாய்.

அன்று

ஓர் ஏக்கருக்கு ஒரு ரூபாய் வருமானம்

ஆனால், இன்றோ!

ரூபாய் 2,300

ஆனால் இன்றோ! தேசிய விதைகள் கார்ப்பரேஷன் விதைகள் உற்பத்திக்காக தேர்ந்தெடுத்த ஒரு சில பண்ணைகளில் இந்த நிலங்கள் அடங்கிய பண்ணையும் ஒன்றாயிற்று. விரிய சோள விதைகளுக்காக இந்த பண்ணையை கார்ப்பரேஷன் தேர்ந்தெடுத்துள்ளது. இந்த பண்ணையின் உரிமையாளா மதுரையைச் சோந்த திரு கணபதி அவர்கள்.

இந்த நிலத்தை விவசாயத்திற்கு தகுதியுடைதாக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் செயலில் முனைந்த திரு கணபதியை, அவரது நண்பர்கள் எல்லோரும் அணுகி பணத்தை இதில் வீணடிக்க வேண்டாம் என்று தடுத்தனர்.

ஆனால் முன் வைத்த காலை பின் வைக்காது காரியத்தில் ஈடுபட்டார் திரு கணபதி. "இந்த நிலத்தின் தரத்தை யுயர்த்த என்னால் முடிந்ததை செய்தேன் என்ற திருப்தியாவது எனக்கு ஏற்பட்டால் அதுவே போதும்" என்றார் திரு கணபதி.

மதுரை—சிவகங்கை சாலையில் வீர பாஞ்சான் கிராமத்தின் அருகிலுள்ள தனது நிலத்தில், இப்போது 130 ஏக்கர்களின் தரத்தை அவர் உயர்த்தி விட்டார். இந்த நிலப்பரப்பில் அவர் நெல், கரும்பு, சோளம் ஆகிய பயிர்களை விதைகளுக்காக பயிர் செய்துவருகிறார்.

"எஞ்சியுள்ள 170 ஏக்கர்களின் தரத்தையும் சீக்கிரமே உயர்த்தி விடுவோம்; உழைப்பும் பணமும் தான் தேவைப்படுகின்றன. இது வரையில் இரண்டு லட்சம் ரூபாய்கள் செலவழித்து விட்டேன். 1945-ம் ஆண்டில் இந்த நிலத்தின் மதிப்பு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 கூட இல்லை; ஆனால் இன்று ஓர் ஏக்கரின் மதிப்பு ரூ. 4,000" என்றார் அந்த விவசாயி.

### விளை நிலமாக்கும் முறை

டிராக்டர்களைக் கொண்டு வெகு ஆழமாக உழுதல், நிலத்தை மட்டப் படுத்துதல், தழை உரங்கள், எரு வண்டல்களை அதிகமாகப் போடுதல், அடிக்கடி பெருமளவில் நீர்ப் பாய்ச்சுதல், கொளுஞ்சி விளைவித்து அந்த நிலங்களை ஆழமாக உழுதல போன்ற முறைகள் இங்கு வெற்றிகரமாக கையாளப்பட்டன.

பண்ணையைச் சுற்றி வரும்போது, ஒவ்வொரு பகுதியும் மேற்கண்டவாறு பற்பல நிலைகளில் இருக்கின்றன. ஒரு பகுதி நிலம் மிகவும் மோசமானதாக இருந்தது; தண்ணீர் தேங்கியுள்ள அந்த நிலத்தில் ஒருவரின் கால்கள் முழங்கால்கள் வரை சேற்றில் சென்றன. "இன்னும் சில ஆண்டுகளில் இங்கே பயிர்கள் செழிப்பாக வளர்

வதைக் காணப் போகிறீர்கள்" என்று நம்பிக்கையுடன் கூறினர் திரு கணபதியின் சகோதரர் திரு சுந்தர பாண்டியன்.

பண்ணை வரப்புகளின் உள்ளோரமாக செஸ்போனியா, கிளிரிசிடியா, ஐபோமியா, கொளுஞ்சி, சணம்பு ஆகியவை வளர்கின்றன.

### சி. எஸ். ஏச். 1 விதை பயிர்

ஜூன் மாதத்தில் இந்த பண்ணையை சுற்றிப்பார்த்த போது 9½ ஏக்கர் நிலத்தில் வீரிய சோள வித்து பயிர் வளர்ந்திருந்தது. "ஆண், பெண் வித்துக்கள் ஒரே சமயத்தில் பூக்காததனால், விதைகள் சரியானபடி அமையவில்லை; குறித்த காலத்தில் மழையில்லாததும், கடுங்கோடையுமே இவற்றிற்கு காரணங்களாகும்; ஆகவே அடுத்தமுறை ஆண் வித்துக்களை ஐந்து நாட்கள் முன்பாகவே விதைக்கபோகிறோம்" என்று பண்ணை நிர்வாகி, திரு எஸ். முத்துசாமி விளக்கினார்; இவர் ஓய்வு பெற்ற விவசாய துணை நெறியாளர்.

திரு கணபதி வியாபாரத்திலே கண்ணும் கருத்துமாயிருப்பவராதலால், தன்னுடைய பண்ணைக்கு விவசாய நுட்பமறிந்தவரே நிர்வாகியாயிருந்தால்தான், விவசாய நுணுக்கங்களில் தனிக்கவனம் செலுத்த முடியும் என்பது அவர் நம்பிக்கை. எனவே அவர் திரு எஸ். முத்துசாமியை பண்ணை நிர்வாகியாக ஏற்றுக்கொண்டுள்ளார். இருப்பினும் தாமே ஒவ்வொரு நாளும், எல்லா விஷயங்களையும் நேரில் கவனித்து ஆவன செய்யத் தவறுவதில்லை.

### பயிர்செய்யும் முறை

வீரிய சோள விதைப்பயிர்களுக்கான நிலம் மூன்று முறை உழப்படுகின்றது; அவ்வாறு மூன்று முறை உழுதபின் மூன்றடி இடை வெளியில் பாத்திகள் அமைக்கப்படுகின்றன. மார்ச்சு மாத நடுவில், பாத்தி வரப்பின் சரிவில் மூன்று அங்குல இடை வெளியில், விதைகள் நடப்பட்டன. "இந்த தடவை விதைப்பது சற்று தாமதமாகிவிட்டது, அடுத்த முறை பிப்ரவரியிலே விதைத்து விடுவோம்" என்றார் பண்ணை நிர்வாகி.

விதைப்பதற்கு முன்னால் ஏக்கருக்கு 30 பவுண்டு நைட்ரஜன், 60 பவுண்டு பாஸ்பரஸ் சத்து, 30 பவுண்டு பொட்டாஸ் சத்துள்ள கலவை உரம் போடப்பட்டன. 35 நாட்களுக்குப் பிறகு மேலும் 600 பவுண்டு நைட்ரஜன் போடப்பட்டது.

கிணறு, ஏரி, 'பம்பு செட்' மூலம் பயிர்களுக்கு பாசனம் செய்யப்பட்டது. தோகைகளை துளையிடும் வண்டுகளை ஒழிப்பதற்காக 'எண்டிரினு'ம், மெடாசிஸ்டாக்ஸ்' (Matasytox) சும் நான்கு முறை மாற்றி மாற்றி தெளிக்கப்பட்டன. கம்பளிப் பூச்சிகளை ஒழிப்பதற்காக பத்து சதவீத 'பி. எச். சி. மருந்து தூவப்பட்டது. களைகளெல்லாம் ஒழுங்காக, தவறாது நீக்கப்பட்டன.

பூப்பதற்காக 1½ சத யூரியா கலவை தெளிக்கப்பட்டது.

### இலாப கணக்கு

"பயிர் நன்றாக செழித்து வளர்ந்தால் அதன் மூலம் ஏக்கருக்கு ரூ. 2,400 மதிப்புள்ள 400 கிலோ விதைகள் கிடைக்கும். இது தவிர 1,400 கிலோ தரமான விதைகளால் மேலும் ரூ. 600 கிடைக்கும். விவசாயத்திற்கு ஆன செலவு சுமார் ரூ. 700. எனவே சாதகமான சூழ்நிலையில் ஏக்கருக்கு ரூ. 2,300 லாபம் கிடைக்கும். அதைத்தான் நாங்கள் எதிர்ப்பார்க்கிறோம்" என்று விளக்கினர் பண்ணை நிர்வாகி.

அறுவடை முடிந்தவுடனேயே, விதைகளை உலற வைப்பதற்கு உதவும் யந்திரங்களையும் வாங்கியுள்ளார், திரு கணபதி. இரண்டாம் தர தானியங்களெல்லாம் உணவிற்காக விற்கப்படுகின்றன.

எதற்குமே பயன்படாது என்று கருதப்பட்ட அந்த நிலங்கள் இன்று திரு கணபதியின் மனோதிடம், விடா முயற்சியாலும், ஓய்வுபெற்ற விவசாய அதிகாரியான திரு எஸ். முத்துசாமியின் தொழில் நுட்ப உதவி, ஆலோசனையாலுமே லாபம் தரக்கூடிய விளை நிலங்களாக மாறி விட்டன.

## பசுவிற்கு தினம் 60 லிட்டர் நீர் தேவை

—o—

பசுக்கள் குறைவாக பாலைத் தருவதற்கும், எருதுகள் மெதுவாக வேலை செய்வதற்கும் அசுத்தமான நீர் ஒரு காரணமாகும்.

கிராமங்களிலுள்ள குட்டைகளில் தேங்கி நிற்கும் நீர் மிகவும் ஆபத்தானது. இந்நீரை கால்நடைகள் குடிப்பதற்கு தகுதியுடையதாக்க வேண்டுமென்றால், அவற்றில் சுண்ணும்பு கலக்க வேண்டும். அளவுக்கு சற்று அதிகமாகவே சுண்ணும்பை சேர்த்துக் கொள்வது, சாலச்சிறந்தது. குட்டைகளை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். குட்டைகளின் அடியிலும், பக்கவாட்டிலுமுள்ள வண்டல், சேற்றை அகற்ற வேண்டும்.

மரத் தொட்டிகள், சிமெண்டினால் கட்டப்பட்ட தொட்டிகள் பயன்படுத்தப்பட்டால், அவற்றிலுள்ள நீரை மூன்று அல்லது நான்கு வாரங்களுக்கு ஒரு முறை வடித்து விடவேண்டும். பிறகு அவற்றின் அடிப் பாகங்களையும் பக்கவாட்டங்களையும், நன்றாகச் சுரண்டி அசுத்தங்களை அகற்றவேண்டும்.

ஒவ்வொரு தடவையிலும் பசுக்கள் குறைவாகவே தண்ணீர் குடிக்கின்றன. ஆனால் மொத்தத்தில் பார்ப்போமானால், அவற்றிற்கு அதிக அளவில் நீர் தேவைப்படுகிறது. சினை பிடிக்காத பசுக்கள் தினமும் சராசரியாக 60 லிட்டர் தண்ணீர் குடிக்கின்றன. இது தவிர, பசுபால் தரும்போது, அது கொடுக்கும் ஒவ்வொரு லிட்டர் பாலிற்கும், அதற்கு 3 லிட்டர் நீர் கூடுதலாக தேவைப்படுகிறது. எனவே, அவற்றிற்கு அடிக்கடி தண்ணீர் கிடைக்க வசதி செய்யவேண்டும்.

—o—

# வேளாண்மை உற்பத்தி - இன்றைய அவசரத் தேவை

[1967—68-ம் ஆண்டு நிதி நிலே அறிக்கை :]

"........ இந்த வரவு - செலவுத் திட்டம் இதற்கு முன்னரே அரசாங்கம் ஏற்றுக் கொண்ட பொறுப்புக்களுக்கும் கொள்கைகளுக்கும் இணங்க, புதிய அமைச்சரவை இக் கொள்கைகளேயும் திட்ட வேலேகளேயும் விரிவாக மறு ஆய்வு செய்கிறவரையில், ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட வேலேகளும் அரசாங்க அலுவலும் எவ்வித இடையூறுமின்றிச் செயல்படும் வகையிலே தயாரிக்கப்பட்டுள்ளது."

"..........ஏற்கெனவே ஒத்துக்கொண்டபடி மத்திய உதவி நமக்குக் கிடைக்குமென்று நாம் எதிர்பார்த்த நிலேயில் மாற்றம் ஏதும் இல்லாமலிருந்தால், நடப்பு ஆண்டில் குறைந்த அளவு இறுதியிருப்புடன் நமது கணக்குகளேச் சரிக்கட்ட முடியுமென்று நாம் எதிர்பார்க்கிறேம். மற்றும், ரிசர்வ் பாங்கியிலிருந்து அனுமதியில்லாத அதிகப்பற்று (over-drafts) ஏதும் இன்றி, இந்த ஆண்டுக் கணக்கினே முடிக்க முடியுமென்ற உறுதியான நம்பிக்கையும் நமக்கு இருக்கிறது."

"எண்ணூர் அனல் மின்சாரத் திட்டம், பரம்பிக்குளம்–ஆளியாறு நீர் மின்சாரத் திட்டம் போன்ற நமது முக்கியமான திட்டங்களுக்கான வேலே மூன்றும் திட்டக் காலத்திலேயே தொடங்கி விட்டதால், இவற்றின் கிழ் செய்ய வேண்டிய முதலீடுகள், அடுத்த ஆண்டில் உச்ச நிலேயை அடையும். இந்த திட்டங்களே நிறைவேற்றும் வேகத்தைத் தடைப் படுத்துவது, நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல."

"வேளாண்மை உற்பத்தியை, விரைந்து பலனளிக்கும் திட்டங் களின் வாயிலாகப் பெருக்கி, விலேவாசிகளின் மீதுள்ள நெருக்கு தலே நீக்குவதே இன்று நம் முன்னுள்ள அவசரத் தேவை யாகும். வேளாண்மை வளர்ச்சிக்குத் தொடர்புள்ள திட்ட வேலேகள் பெரும்பாலும், மாநிலத் திட்டங்களின் வரம்புக்குள் அடங்குகின்றன. இந்தத் திட்ட வேலேகளேக் குறைப்பது அறி வுடைமையாகாது."

"1967 - 68-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளே மீண்டும் புதிதாக ஆலோசித்து, புதுத் திட்டங்களுக்கும் புதுக் கொள்கைகளுக்கும் வகை செய்யும் முறையில், அவற்றை மாற்றி யமைத்து, 1967-ம் ஆண்டு ஜூன் திங்கள் வாக்கில் சட்டப் பேரவையின்முன் அரசாங்கம் வைக்கும். வரவு - செலவுத் திட்ட மதிப்பீடு களில் வருவாய்க் கணக்கில் எதிர் பார்த்த 31 லட்சம் ரூபாய் சொற்ப உபரித் தொகைக்கு மாருக, 745 லட்சம் ரூபாய் அளவிற்குத் துண்டு விழுமென இப்பொழுது தெரிகிறது. வருவாய்க் கணக்கில் இவ்வளவு பெரிய துண்டு விழுந்த போதிலும், வருவாய்க் கணக்கு, கடன் கணக்கு, மூலதனக் கணக்கு, பொதுக் கணக்கு ஆகிய இவற்றை யெல்லாம் சேர்த்துப் பார்க்கு மிடத்து, நமது மாநிலத்தின் மொத்த நிதி நிலே சரிக்கட்டப்படும் என்றும், வரவு - செலவு மதிப்பீடு களில் எதிர்பார்க்கப்பட்ட அதே அளவுத் தொகை முடிவான ரொக்க இருப்பாக நிற்குமென்றும் தெரிகிறது..."



G.N. 4A

"...நிலவரிக் கொள்கையின் எதிர் காலம் குறித்து அரசாங்கம் இன்னும் முடிவு செய்யவில்லை. நிலவரி நீக்கத்தைப்பற்றிய எல்லா அம்சங்களையும் குறித்து ஆராய்வ தற்கென்று நியமிக்கப்பட்ட சிறப்பு அலுவலரின் அறிக்கை அண்மை யில்தான் கிட்டியுள்ளது. சிறப்பு அலுவலரின் அறிக்கையை ஆராய்ந்து அதன்மீது முடிவுகள் எடுக்க அரசாங்கத்துக்குச் சிறிது காலம் செல்லும். ஆகவே, நில வரியின் எதிர்காலத்தைக் குறித்து அரசாங்கம் எடுக்கும் முடிவுகள் சட்டப் பேரவையின்முன் வைக்க விருக்கும் முறையான வரவு-செலவுத் திட்டத்தில் மட்டுமே காணப்படும்..."

"...1967-68-க்குரியவரவு-செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கில் வரவினங்கள் 204·39 கோடி ரூபா யாகவும் செலவினங்கள் 211·99 கோடி ரூபாயாகவும் மதிப்பிடப் பட்டுள்ளது. இதனுல் 760 லட்சம் ரூபாய் வருவாய்க் கணக்கில் துண்டு விழுகிறது. இது நடப்பு ஆண்டில் எதிர்பார்க்கிறபடி, வருவாய்க் கணக்கில் விழும் 745 லட்ச ரூபாய் துண்டினைவிடச் சற்றே உயர்ந்துள்ளதெனினும், இத்துண்டு கணிசமானதுதான். வருவாய்க் கணக்கில் விழுகிற துண்டையும் மொத்தக் கணக்கு களில் விழுகிற துண்டையும் இந்த நிலையில் அடைக்காமல் விடுகிறேம்..."

## வரவு-செலவுத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் (1)

**அ**ரசாங்கம் செய்யும் செலவுகள் அனைத்தும், சட்டசபையின் திட்டமான அங்கீகாரத்தைப் பெற்றி ருக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் தலையாயக் கொள்கையாகும்.

அமைச்சர்களுக்கோ, அரசாங்கச் செயலாளர் களுக்கோ அரசாங்கப் பொது நிதியின் மீது இயல் பான அதிகாரம் இல்லை. ஏற்கெனவே சட்ட மன்றம் செய்த முடிவுகளையும், செய்யக்கூடும் என்று சில வேளைகளில் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளையும் இவர்கள் அமுலாக்குகிறார்கள். எனவே, ஆட்சி நிர் வாகத்திற்குப் பொறுப்பானவர்கள், வரப்போகும் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வரவினங்களையும், செலவினங்களையும் குறிப்பிட்டு நிதி நிலை அறிக் கையைத் தயாரிக்கின்றனர். அந்த அறிக்கை, நிதி ஆண்டு துவங்குவதற்கு முன்னதாகவே சட்ட மன்றத்தின் அங்கீகாரத்திற்காக வைக்கப்படும். நிதி நிலை அறிக்கையை ஆராயவும், மாற்றவும், திருத்த வும், இறுதியில் முடிவாகத் தன் அங்கீகாரத்தைக் குறிப்பிடவும் வழி செய்யப்படுகிறது. இந்த நடை முறை முடிந்து, கவர்னர் அங்கீகாரம் அளித்த பின்பு, நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்ட நிதி வரம்புகளுக்கு உட்பட்டு, நிர்வாகத்தை இயக்கு பவர்களுக்குப் போதிய அதிகாரமளிக்கப்படுகிறது.

'நான்காம் திட்டத்தின் முதல் ஆண்டு முடிவடையும் தறுவாயில் இருப்பினும், நான்காம் திட்டம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. மூன்றும் திட்டக் காலத்தில் நிறை வேற்ற முடியாமற்போன திட்டங் களுக்காகவும் இன்றியமையாத சில வேளாண்மை உற்பத்தித் திட்டங் களுக்காகவும் கல்வி, மருத்துவ உதவி பொதுச் சுகாதாரம் போன்ற சமூகப் பணிகளின்கீழ், தவிர்க்க முடியாத சில செலவின அதிகரிப்புகளுக்காகவுமே, பெரும் பாலும் வகைசெய்து, 1966-67-க் குரிய ஆண்டுத் திட்டத்தைத் தயாரித்திருந்தோம். மாநில அர சாங்கங்களுடன் அண்மையில் தொடர்ச்சியாக விவாதங்கள் நடத்திய திட்டக் கமிஷன், நமது மாநில நான்காம் ஐந்தாண்டுத் திட்ட வரைவிற்குத் தற்காலிக ஒப்புதல் வழங்கியுள்ளது. மாநில நான்காம் திட்டத்தில் ஒதுக்கக் கருதியுள்ள முதலீடு 564 கோடி ரூபாய் அளவில் உள்ளது. இதில் மத்திய அரசாங்கம் 250 கோடி ரூபாய்அளவிற்கு உதவியளிக்கும். எஞ்சிய 314கோடி ரூபாயை மாநில அரசாங்கமே திரட்ட வேண்டும். இவ் விவாதங்களுக்குப் பின்னர் மத்திய அரசாங்கம் ஊக்குவிக்கும் சில திட்டங்களின் கீழ் ஒதுக்கி யுள்ள முதலீடுகளை, மாநில அரசாங்கத் துறைக்கு அவற்றிற் கான நிதி ஆதாரங்களோடு மாற்றுவது குறித்து, திட்டக் கமிஷன் சில முடிவுகளைச் செய் துள்ளது. இந்த நடைமுறையின் மூலம் பற்பல மாநிலங்களுக்குக் கிடைக்கக்கூடிய கூடுதல் தொகை களைக் கணக்கிட்டு திட்டக்கமிஷன் இன்னும் தெரிவிக்கவில்லை. அவ் வாறு ஏற்படும் மாற்றங்களையும் சேர்த்தால், நமது மாநிலத்தின் நான்காம் ஐந்தாண்டுத் திட்ட முதலீடு 600 கோடி ரூபாய்க்குக் குறையாமல் இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆயினும் நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் தேசிய வளர்ச்சி மன்றத்தால் (National Development Council) இன்னும் முறையாக ஏற்கப்பட வில்லை. மாநில நான்காம் ஐந் தாண்டுத் திட்ட வரைவினை, நமது மாநில அரசாங்கம் விரைவாக

(2)

சிக்கனம், நிர்வாகத்தில் ஒழுங்கு முறை ஆகியவை களிலும் அரசாங்கத்துக்கு, வரவு–செலவுத் திட்டமானது, ஒரு பயனுள்ள கருவியாக இருக்கிறது. ஒவ்வொரு துறைக்கும் பல திட்டங்கள் உண்டு. அவை அவசியமானவை யாகவும், மிகவும் வேண்டப்படுவனவாக வும் இருக்கும். ஆனால், அரசாங்கத்தின் பொருளாதார நிலை, ஒரு வரையறைக்கு உட்பட்ட தாக இருக்கிறது. * * *

பல்வேறு துறைகளின் தலைவர்களும் அமைச்சர்களும் தங்கள் தங்கள் துறைகளின் திட்டங்களை எவ்வளவு வன்மையுடன் வலியுறுத்தினாலும், திட்டங்கள் பலவற்றிலும் எது உடனடியாக அல்லது நிதானமாக மேற்கொள்ளப்பட வேண்டியது என்பதை ஆராயவேண்டும்.

''நிதி வசதிகளில் தற்போதுள்ள இடையூறுகளை ஏற்றுக்கொண்ட பின்னரும் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில், திட்ட வேலைகளுக்காக ஒதுக்கவேண்டிய நிதியளவு 75·78 கோடி ரூபாய்க்குக் குறைவாக இருக்க முடியாதென்று நாங்கள் கருதியுள்ளோம், நிதியளவினை இதற்குக்கீழ் குறைத்தால், மின்சாரம், பாசனம், வேளாண்மை உற்பத்திபோன்ற துறைகளில் முக்கியமான திட்டங்களின் விரைவு பெரிதும் பாதிக்கப்பட்டு, ஏற்கெனவே செய்துள்ள முதலீடுகளிலிருந்து விரைவில் பயன் கிடைப்பதும் தடைப்படும்.''

''...சிறு பாசனம், கிராம மின்சார வசதி-இவற்றின் கீழ் நாம் செய்துள்ள நிதி ஒதுக்கீடுகளும் நடப்பு ஆண்டில் செய்துள்ளவற்றைக் காட்டிலும் மிகக் குறைவாக உள்ளன. வேளாண்மை உற்பத்தியின்கீழ் நமது குறிக்கோள் அளவுகளைச் சாதிக்க வேண்டுமென்றால், நடப்பு ஆண்டில் எட்டிய அளவிற்காவது இவற்றை உயர்த்த வேண்டியிருக்கும்.''

''மாநிலங்கள் தங்கள் நிதி நிலைமைகளை மிக்க விழிப்போடு நிர்வகிப்பது தேவை என்பதை நாம் குறைத்துச் சொல்லவில்லை. மற்றும் மாநிலங்கள் வளர்ச்சித் திட்டங்களுக்கு வேண்டிய நிதி வசதிகளை திரட்டிக் காப்பதற்குத் தங்களால் இயன்ற எல்லாவற்றையும் செய்யவேண்டும் என்பதையும் நாம் குறைத்துச் சொல்லவில்லை. கண்ணும் கருத்தும் கலந்த நிதி நிர்வாகத்தை வளர்க்கும் தங்களுடைய எல்லா முயற்சிகளிலும் மத்திய அரசாங்கத்துடன் நாங்கள் முற்றிலும் ஒத்துழைப்போம். என்றாலும், நிதி விவகாரங்களில் மிக மேம்பட்ட ஒழுங்கைக் கடைப்பிடிக்கிற ஒரு மாநிலம், ஒப்புதல் பெற்ற திட்டங்களை நிறைவேற்றுவதில் இடருற்றால், மத்திய அரசாங்கமும் திட்டக் கமிஷனும் அதன் இடர்ப்பாடுகளை, குறிப்பாக இந்த இடர்ப்பாடுகள் தற்காலிகமானவை என்று தெரியும்போது, அவற்றைச் சமாளிக்கும் வகையில் உதவி செய்ய முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.''

(20—3—67–ல், 1967–68–ம் ஆண்டுக்குரிய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளை, தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன் வைத்து, முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் ஆற்றிய உரையின் சாரம்.

மறு ஆய்வு செய்து, முறை வைப்புகளில் இன்றியமையாத எந்தச் சரிக்கட்டல்கள் தேவையென்பதை ஆலோசிக்கும். இந்த மறுஆய்வின் பகுதியாக திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மாநில அரசாங்கத்திற்குக் கிட்டுகிற நிதி வசதிகள் எவையென்பதைக் குறித்துப் புதிதாக ஆய்வு செய்யும். இந்த ஆய்விற்கு இயல்பாகவே கொஞ்ச காலம் செல்லுமாதலால், இதன் முடிவுகள் சட்டப் பேரவையின் முன் வைக்கப்படவிருக்கும் முறையான வரவு-செலவுத் திட்டத்தில் தான் காணப்படும்...''

''...இந்த இடைக்காலத்திட்டத்தில் வேளாண்மை உற்பத்தித் திட்டங்களுக்காகவும், ஏற்கெனவே கிட்டியுள்ள வெளிநாட்டு உதவியுடன் செயலாற்றப்பட்டு வரும் பாசனத் திட்டங்களுக்காகவும், மின்சாரத் திட்டங்களுக்காகவும் வகை செய்யவேண்டும் எனத் திட்டக் கமிஷன் கூறியுள்ளது.''


## அதிக பயன் தரும் மலிவான டிராக்டர்

ஒவ்வொரு விவசாயியும் டிராக்டர் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கனவை நனவாக்க, ஜப்பானிய நடைவண்டி டிராக்டர் இப்போது இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகிறது. சிறிதாகவும், மலிவானதாகவும், எல்லா வயல் வேலைகளுக்கும் உதவுவதாகவும் உள்ள இந்த டிராக்டர் மண் எண்ணெயினால் இயங்குகிறது.

சிறு துண்டு நிலங்களில்கூட இந்த டிராக்டரை உபயோகிக்கலாம். இதைப் பயன்படுத்தும்போது விவசாயி, அதன் பின்பக்கமாக நடந்து சென்று இயக்க வேண்டும்.

இந்த நடைவண்டி டிராக்டருக்கு பலவிதமான சக்கரங்களைப் பொருத்துவதன் மூலம் உழுதல், பயிரிடுதல், பரம்படித்தல், களையெடுத்தல், பூச்சி மருந்து தெளித்தல், அறுவடை செய்தல், போரடித்தல், பாசன நீர் இறைத்தல் ஆகிய பல வேலைகளுக்கும் பயன்படுத்தலாம்.

இத்துடன் ஒரு டிரெய்லரை இணைத்தால், பண்ணை எரு, உரங்கள், பண்ணை எந்திரங்கள், விளைபொருள்கள் மற்றும் குடும்பத்தவரையும் ஏற்றிச் செல்லலாம்.

ஐந்து குதிரைச் சக்தியுள்ள இந்த டிராக்டர் விலை ரூ. 4,500 தான்.

# பிற மாநிலங்களில்...

## சோளம் கொள்முதல் செய்த கிராமத்திற்கு ரூ. 5,000 பரிசு

மஹாராஷ்டிர மாநிலத்திலுள்ள 40 கிராமங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 5,000 பரிசளிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளிடமிருந்து பெருமளவில் சோளத்தைக் கொள் முதல் செய்து, அவற்றை அரசாங்கத்திற்குக் கொடுத்து, இந்த ரொக்கப் பரிசுகளை பெற்றுள்ளன, இந்த கிராமங்கள். ஒரு கிராமம், இதில் பரிசு பெற வேண்டுமானல், அந்த கிராமத்தை உள்ளடக்கிய தாலுகா குறைந்தது 2,000 டன்களாவது கொள்முதல் செய்திருக்க வேண்டுமென்பது, இப் பரிசுக்காக அரசாங்கம் வகுத்த கொள்கையாகும். இத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு கிராமமும், அதன் மொத்த விளைச்சலில் 12½ சதவீதத்தை அரசாங்கத்துக்கு விற்பனை செய்து விட்டன.

பரிசுத் தொகைகளை அரசாங்கம் கலெக்டர்களிடம் ஒப்படைத்தது. பரிசு பெற்ற கிராமங்கள், பரிசுத் தொகையைக் கொண்டு, சமுதாயத்திற்கு உருவான, நிலையான சாதனைகளை செய்ய வேண்டும்.

அரசாங்கத்திற்கும், பஞ்சாயத்து ஆட்சிக்கும் உள்ள ஒத்துழைப்பை எடுத்துக்காட்டும் வகையில், இவை அமைந்திருக்க வேணடும்.

* * *

## இரண்டே வாரங்களில் 1,18,000 கிணறுகள்

வரட்சி நிலைமையை வென்று, பாசனத்தைப் பெருக்கி விவசாய உற்பத்தியை பன்மடங்காகப் பெருக்க, இரண்டே வாரங்களில் 1,18,000 கிணறுகள், உத்தரப் பிரதேசத்திலுள்ள கோரக்பூர் கோட்டத்தில் தோண்டப்பட்டுள்ளன இக்கோட்டத்தில் கோரக்பூர், பஸ்தி, தியோரிதா, ஆஜம்கார் ஆகிய மாவட்டங்கள் அடங்கும்.

உத்திரப்பிரதேச மாநிலத்திலேயே அதிகமாக கிணறுகளை வெட்டியுள்ள மாவட்டம், கோண்டா மாவட்டமாகும். 1965–66-ம் ஆண்டில் இங்கு 23,398 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன, ஒவ்வொரு கிணறுக்கும் ரூ. 20 உதவித் தொகை அளிப்பதற்காக, மாநில அரசாங்கம் மேலும் ரூ. 12 லட்சம் ஒதுக்கியுள்ளது.

Articles reproduced from " Panchayati Raj " and Government of India materials on pages : 5, 6, 13, 14, 18, 21, 30, 31 (8 pages) " பஞ்சாயத்து ராஜ " இதழிலிருந்து எடுக்கப்பட்டவை : பக்கங்கள் : 5, 6, 13, 14, 18, 21, 30, 31 (8 பக்கங்கள்).]

இந்தியப் பிரதமராக வந்திடும் திருமதி இந்திராகாந்தி அவர்கள் இந்தப் பண்புடன் நடந்து கொள்வார்கள் என்று நம்பிக்கை கொண்டிருப்பவர்களில் நான் ஒருவன். சின்னாட்களுக்கு முன்பு கூட, அவர்கள் இந்தி பேசாத பகுதியினரின் உரிமைக்கான உத்தர வாதத்தை சட்ட வடிவாமாக்கித் தந்திட உறுதி கொண்டிருப்பதாகக் கூறி, நம்மை மகிழ்வித்தார்.

### மாநிலங்களின் அதிகாரங்கள்

மாநிலங்களின் தேவைகள், நாளுக்கு நாள் வளருகின்றன. அடிப்படைத் தேவைகளை மட்டுமே கூறுகிறேன். இவைகளை மக்கள் பெறுவதற்கான முறையில் மாநில அரசு செயல்பட இயலாது தடுத்திடும் குறைபாடுகள் நீக்கப்பட்டாக வேண்டும்.

நிதி நிலை, வருவாய்ப் பெருக்கம், உதவி, கடன், என்பவைகளை மட்டுமல்ல நான் குறிப்பிடுவது. செயலாற்றுவதற்குத் தேவைப்படும் அதிகாரம் பற்றியும் குறிப்பிடுகிறேன்.

அரசியல் சட்டத்தில் தரப்பட்டு உள்ள அதிகார வரம்பும் வகையும், மாற்றிஅமைக்கப்பட்டால்தான், மாநில அரசு முழு வளர்ச்சி பெற முடியும், மக்களின் வாழ்வைச் செம்மைப்படுத்த முடியும் என்றால், அந்த நோக்கத்துடன் அரசியல் சட்டத்தைத் திருத்தத் தயக்கம் காட்டக் கூடாது.

அணைத்தல், பிணைத்தல், கட்டுண்டு கிடத்தல், இவை வெவ்வேறு.... மாநில—மத்திய சர்க்கார் உறவு எம் முறையில் இருந்தால், பொது நன்மையைக் கெடுக்காத வகையில் மாநிலத்தின் மாண்பும் வளமும் ஏற்றம் பெற முடியும் என்பது அக்கறையுடன் கவனித்தாக வேண்டிய பிரச்சினையாகும்.

எனது நண்பரும் கேரளத்து முதலமைச்சருமான நம்பூதிரிபாத் அவர்கள் இதே கருத்தைக் கொண்டவர். அவருடைய சீரிய முயற்சி, இந்தப் பிரச்னைக்குப் பெரிதும் வலிவலுக்கும் என்று நம்புகிறேன். வங்கத்து முதல்வர், அஜாய் குமார் முகர்ஜி அவர்கள். காங்கிரஸல்லாதார் நடத்திடும் அரசுகளின் கூட்டு மாநாடு நடத்திட விரும்புகிறார். அத்தகைய மாநாடும், இந்தப் பிரச்சினையை ஆராய உதவும் என்பதால், அந்த முயற்சியை வரவேற்கிறேன்.

அதுபோலவே, தென் மாநிலங்களான தமிழகம், ஆந்திரம், கேரளம். கர்நாடகம் ஆகியவை தோழமைத் தொடர்பை வலுவாக்கிக் கொள்வது தேவை. எத்தனையோ துறைகளில், இந்த மாநிலங்கள் தமக்குள்ள இயற்கை வளங்களை இணைப்பதி மூலம், புதிய பொலிவும் வலிவும் பெற்றிட முடியும். அதற்கான முயற்சிக்கு ஆக்கம் தரவேண்டுமென, அந்த அரசுத் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

### வணக்கத்துக்குரியவர் யார்?

உள்ளத்திலே தோன்றிடும் யோசனைகள் பலப்பல. சில மட்டுமே இன்று கூறுகின்றேன். ஆனால். எல்லா எண்ணங்களும் ஓர் அடிப்படையான இலட்சியத்தை சுற்றியே வட்டமிடுகின்றன. மக்களுக்கு நல்வாழ்வு தரவேண்டும், என்பதே அந்த இலட்சியம்.

இலட்சியம் தூய்மையானது; அந்த இலட்சியம் வெற்றி பெற்றால் மட்டுமே அற நெறி அரசு அமைந்ததாக பொருள்படும்; அந்த இலட்சியத்துக்காகப் பணியாற்ற புறப்படுகிறேன், உமது நல்லெண்ணத்தைத் துணைகொண்டு. இலட்சியம் மிகப் பெரியது, நான் சாமான்யன். ஆனால் உங்கள் தோழன்—ஆகவே என்னுடைய திறமையை நம்பி அல்ல—உங்கள் எல்லோருடைய திறமையையும் நம்பி இந்தப் பணியில் ஈடுபடுகிறேன்.

முன்பு தரிசாகக் கிடந்த இடத்தை விளைநிலமாக்கிட வியர்வை சிந்துவோர், குறை அளவு இயங்கிவந்த யந்திரத் தொழிற்சாலையை முழு அளவு இயங்கிடச் செய்யப் பாடுபடுவோர், மக்களின் வசதிப் பெருக்கத்துக்காக உற்பத்தி, விநியோகம் ஆகியவற்றில் ஈடுபட்டு அதனை நேர்மையான முறையில் நடத்திடுவோர் இவர்களெல்லாம், என் நண்பர்கள், என் வணக்கத்துக்கு உரியவர்கள். [அடுத்த பக்கம் பார்க்க]

# உணவுச் சிக்கலைத் தீர்ப்பதில் உடனடி நடவடிக்கை

## மொத்த விளைச்சலில் 20 சத விகிதமே கொள்முதல் செய்யப்படுகிறது

**"உணவு தானியக் கட்டுப்பாடு, பங்கீட்டு முறை, கொள்முதல் என்பதெல்லாம் கொள்கை அல்ல; ஒரு நடைமுறைதான். 'தற்சமயம் மிகவும் அவசியம்', 'தவிர்க்க முடியாது' என்ற கட்டத்தில்தான், அவை அமுல் செய்யப்படுகின்றன.**

**கொள்முதல் திட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால்தான் அமுல் படுத்தப்படுகிறது என்பதைப் பொது மக்கள் உணர்ந்து வருகிறார்கள்."**

**"எனவே, இப்போதைய நிலையையொட்டி, நெல் கொள்முதல் திட்டம் தமிழ் நாட்டில் நீடிக்கும். அதோடு, பதுக்கலைத் தடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்படும். கடத்தல், பதுக்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறவர்களுக்குச் சிறைத்தண்டனை விதிக்கவும், கடத்தலில் ஈடுபடும் வண்டி வாகனங்களைப் பறிமுதல் செய்யவும் வகை செய்து, சட்டத் திருத்தம் கொண்டுவரப்படும்."**

இவ்வாறு, தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள், அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டு முடிவில், மாநில அரசாங்க நிலையை, பத்திரிகை நிருபர்களிடம் விளக்கினார்.

உற்பத்திப் பெருக்கம், பதுக்கல் தடுப்பு, தானியச் சேமிப்பால் விலை இறக்கம் ஆகிய காரணங்களையொட்டி, இன்னும் இரண்டு ஆண்டுகளில் உணவு நிலை, சீரடையும் எனத் தாம் நம்புவதாகவும், அப்படிச் சீராகும்போது, உணவு தானியக் கட்டுப்பாடுகளுக்கு அவசியம் இராது என்றும், முதலமைச்சர் கூறினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு, மார்ச்சு மாதம் 14-ந் தேதி சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. மாநில அமைச்சர்கள், அரசாங்கச் செயலாளர்கள், வருவாய்க் கழக உறுப்பினர்கள், பல்வேறு துறைத் தலைவர்கள், திட்ட ஆலோசகர் முதலியோர் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

முதலமைச்சருடன் கலந்தாலோசித்த பின்னர், உணவு அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் அவர்கள் தயாரித்த சில முக்கிய கேள்விகளுக்குப் பதில் விளக்கம் கோரும் வகையில், எல்லா மாவட்ட ஆட்சித்தலைவர்களிடமிருந்தும், கருத்துக்கள் பெறப்பட்டன. இவை பெரும்பாலும் மூன்று முக்கிய பிரிவுகளில் அடங்கும்: 1. உணவு விநியோக முறைகளைச் செம்மைப்படுத்துதல்: 2. உற்பத்தி பெருக்கத் திட்டங்கள்; 3. நிர்வாகப் பிரச்னைகள்.

கொள்முதல் செய்வதில் இப்போது பின்பற்றப்படும் முறைகளோடு, கிராம நிறுவனங்களிடம் கொள்முதல் பொறுப்பை ஒப்படைக்கலாமா என்ற கருத்தும் ஆராயப்பட்டது.

தற்சமயம், மொத்த விளைச்சலில் 20 சத விகித (அதாவது 5-ல் ஒரு பங்குதான்) அரசாங்கத்தால் கொள்முதல் செய்யப்பட்டு, உணவு நெருக்கடியைச் சமாளிக்க, கையிருப்பாக வைக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

---

(மூன் பக்கத் தொடர்ச்சி)—முதலமைச்சரின் வானொலிப் பேச்சு

உற்பத்தித் துறைக்கு முட்டுக் கட்டை யிடுவோர், உற்பத்திக்காகப் பாடுபடுவோரின் வயிற்றலடிப்போர்- அவர்கள் எனக்கு மட்டுமல்ல—சமூகத்துக்கே பகைவர்.

விலையை ஏற்றிவிடுவோர்—விளைந்ததைப் பதுக்கிக்கொள்வோர்—நாட்டை நாசமாக்கும் நடமாடும் நோய்கள்.

ஊழல் ஊதாரித்தனம் இலஞ்ச இலாவணம் ஆகிய கேடுகளைச் செய்வோர்—நாட்டின் அவமானச்சின்னங்கள்.

நண்பர்களே.

நாட்டின் பகைவர்கள், சமூக விரோதிகள் ஆகியோரிடமிருந்து நாட்டைக் காத்திட வேண்டிய பொறுப்பும், கடமையும், நமக்கு இருக்கிறது.

கேடு களைந்திட,
நாடு வாழ்ந்திட,
சுயநலம் மடிந்திட,
பொதுநலம் மலர்ந்திட

தொண்டாற்றுவோம் வாரீர், வாரீர் என்று அழைக்கின்றேன், வணக்கம். நன்றி.

[15—3—67-ல் சென்னை வானொலியில் முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் முழு வாசகம்.]



மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மகாநாடு, 14—3—67-ல், சென்னை ராஜாஜி மண்டபத்தில், முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

1965-66-ம் ஆண்டுக்கு, நாட்டின் சிறந்த கிராம சேவிகை என்று தேர்ந்தெடுக்கப் பட்ட குமாரி குந்தளா மேஹர் (அலக்பூர் வட்டாரம், ஒரிசா மாநிலம்) யூனியன் உணவு-விவசாய ராஜாங்க அமைச்சரிடமிருந்து பரிசினைப் பெறுதல்.



# தமிழ்நாடு அரசாங்கம்

## அமைச்சரவை



திரு வி.ஆர். நெடுஞ்செழியன்
கல்வி-தொழில் அமைச்சர்




திரு கே.ஏ. மதியழகன்
உணவு-வருவாய்த்துறை அமைச்சர்




திருமதி சத்தியவாணிமுத்து
ஹரிஜன நலம்-செய்தித்துறை அமைச்சர்



திரு சி.என். அண்ணாதுரை
முதலமைச்சர்



சர்தார் உஜ்ஜல்சிங்
மாநிலக் கவர்னர்




திரு எஸ். மாதவன்
சட்டம்-கூட்டுறவு அமைச்சர்



திரு எஸ்.ஜே. சாதிக் பாஷா
பொது சுகாதார அமைச்சர்




திரு மு. கருணாநிதி
பொதுப்பணித்துறை அமைச்சர்



திரு ஏ. கோவிந்தசாமி
விவசாய அமைச்சர்



திரு எம். [illegible]சாமி




தமிழ்நாடு சட்டப்பேரவையில், தமிழ்நாடு கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங் உரை நிகழ்த்துகிறார். (17—3—67)

தமிழ்நாடு சட்டமன்றச் சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு எஸ். பி. ஆதித்தனாரை (சட்டமன்றத்தில் அரசாங்கக் கட்சித் தலைவர்) திரு வி. ஆர். நெடுஞ்செழியனும் (சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர்) திரு பி. ஜி. கருத்திருமனும் சபாநாயகர் ஆசனத்தில் அமர்த்துதல். (17—3—67)



சட்டமன்ற உதவி சபாநாயகர்
புலவர் கோவிந்தன்.



# ஆட்சிப் பொறுப்பில் இணக்கமான மாறுதல்

**[சட்டப் பேரவையில் தமிழ்நாடு கவர்னர் விளக்க உரை]**

**[தமிழ்நாடு சட்டப் பேரவையில் (சட்டசபை, சட்டமன்றம் ஆகிய இரு சபைகளின் உறுப்பினர்கள் கொண்ட பொதுச் சபை) தமிழ்நாடு கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங் 17-3-67-ல் மாலே 5 மணிக்கு உரை நிகழ்த்தினர். அவருடைய உரை, பல நிர்வாகப் பிரச்னைகள் பற்றி கொள்கை விளக்கங்கள் கொண்டதாக அமைந்திருந்தது. அவ்வுரையின் சாரத்தை சுருக்கி, கீழே தருகிறோம். ஆசிரியர்]**

✠ ''பொதுமக்களின் நம்பிக்கையைப் பெருமளவில் பெற்றுள்ள இந்த அரசாங்கம், வேளாண்மை உற்பத்தியின் உயர்ந்த குறிக்கோள்களே எய்துவதில், உழவர்களின் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் ஒன்று திரட்டி, வேளாண்மை வளர்ச்சிப் பணியாளர்களுடன் அவர்கள் பயனுறு முறையில் ஒத்துழைக்கும் வகையில் ஆவன செய்யும். வளர்ச்சித் திட்ட வேலேகளில் உழவர்கள் ஆர்வத்தோடு ஈடுபடும் இந்தப்பணியில் முற்றிலும் ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி மன்ற ஒன்றிப்புகளும் கலந்துகொள்ளும் வண்ணம், அரசாங்கம் முயற்சியினே மேற்கொள்ளும்...''

✠✠ ''நமது மாநிலத்தில் கூட்டுறவு நிறுவனத்தின் வேலேயை ஆராய்ந்து நல்ல முறைகளில் அதைச் சீர்திருத்தி அமைப்பதற்கான செயற்குறிப்புக்களே வகுப்பதற்கான குழு ஒன்றை நிறுவ வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது...''

✠✠✠ ''திட்டத்தைத் தீட்டுவதிலும், செயலாற்றுவதிலும் மாநிலங்கள் இனியும் செயலற்ற பார்வையாளர்களாக இல்லாமல், சுறுசுறுப்பான பங்கு கொள்பவர்களாக மாறவேண்டும்.''...

''பொதுத் தேர்தலில்மக்கள் அளித்துள்ள பெருவாரியானவாக்குகள், தங்கள் வாக்குரிமையைச் செலுத்துவதில் அவர்களுக்குள்ள பேரார்வத்தைக் காட்டுவதுடன், நமது நாட்டில் குடியாட்சி வேரூன்றி விட்டது என்பதையும், தங்கள் வருங்கால வாழ்வைத் தாங்களே வகுத்துக்கொள்ள முடியும் என்பதை மக்கள் முற்றிலும் உணர்ந்துள்ளார்கள் என்பதையும் புலப்படுத்துகின்றன. புதியதொரு அரசாங்கத்தை அமைதியான முறையில் ஆட்சிப் பீடத்தில் அமர்த்தியிருப்பதும், நமது மாநிலத்தின் ஆட்சிப்பொறுப்பு, ஓர் அரசியல் கட்சியிடமிருந்து வேருேர் அரசியல் கட்சிக்கு மிக இணக்கமாக மாற்றப்பட்டிருப்பதும், நமது மக்கள், அரசியல் துறையில் எந்த அளவிற்கு முதிர்ச்சி பெற்றுள்ளனர் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக அமைவனவாகும்.''

### நன்மரபுகளே போற்றி வளர்ப்போம்

''இத் தேர்தல்களே நடத்தித் தருவதில் ஏதேனும் ஒரு வகையில் ஈடுபட்டிருந்த பல்வேறு நிலேகளில் உள்ள எண்ணற்ற அரசாங்க ஊழியர்கள், பொதுவாகவே பாராட்டத்தக்க வகையில் சார்பின்றியும், பற்றுநீக்கியும் தங்கள் கடமைகளே ஆற்றியுள்ளனர். உளநிறைவும் அரசியல் கட்சிச் சார்பு மற்ற அரசாங்க ஊழியர்கள், நமது மாநில மக்களின் நலனே மேலும் சிறக்கச் செய்வதில் பெரும் பங்குவகிக்க முடியும் என்பதை எனது அரசாங்கம் முற்றிலும்

உணர்ந்துள்ளது. மற்றும், நிர்வாகத் துறையில் உருவாகியுள்ள நன்மரபுகளைப் போற்றி வளர்க்கவும், அதே சமயத்தில் வளங்கெழு அரசின் (Welfare State) கொள்கைகளை நிறைவேற்றும் வகையில் நிர்வாக யந்திரம் செவ்வனே இயங்குவதற்குத் தேவைப்படுகிற இன்றியமையாச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்தவும், இவ்வரசாங்கம் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்யும்."...

"உற்பத்தியாளர்களுக்குப் போதிய ஊக்கம் அளிக்கும் வகையிலும், சமுதாயத்தில் மிக எளிய நிலையில் உள்ள மக்களுக்கு, நியாய விலைகளில் நல்ல அரிசி கிடைக்கச் செய்யும் முறையிலும் சிறந்ததோர் உணவுக் கொள்கையை நாம் உருவாக்க வேண்டும்."...

**சமுதாய நெறி உணர்வு உள்ளத்தில் பதிய...**

"உபரி தானியங்கள் வைத்திருப்பவர்கள் அதைச் சமுதாயத்திற்கு உதவக் கடமைப்பட்டவர்கள். பொதுநலம் பேணித்தொண்டு செய்வதற்குக் கிடைத்த ஓர் அரிய வாய்ப்பாகவே செல்வர்கள் தங்களுக்குக் கிட்டிய செல்வத்தைக் கருத வேண்டுமேயல்லாது, ஆடம்பர வாழ்க்கை நடத்துவதற்கல்ல என்னும் சமுதாய நெறி உணர்வை அவர்கள் உள்ளத்தில் பதிய வைக்க அரசாங்கம் முயலும்."..

"குறிப்பாகச் சிறிய குடியானவர்களுக்கு இயன்ற வரையில் இடையூறுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும். தொழிலாளர்கள், நிலமற்ற உழவுப்பணியாளர்கள், நிலைத்த வருவாய் பெறுவோர் போன்று சமுதாயத்தில் எளிதில் அல்லலுக்கு ஆளாகும் பிரிவினர்க்கு இன்றியமையாப் பொருள்களைத் தங்கு தடையின்றி வழங்கி வருவதன் மூலம் விலைவாசி ஏற்றத்தைத் தவிர்க்க முடியும் என்றும், நாளடைவில் எல்லாத் துறைகளிலும் விலைகளைப் பெருமளவுக்குக் குறைக்க முடியும் என்றும், இதனால் உழவர்களுக்கு இன்றியமையாத தேவைப் பொருள்கள் நியாயவிலைகளில் கிட்டுமென்றும் அரசாங்கம் உறுதியாக நம்புகிறது." [அடுத்த பக்கம்பார்க்க]

# தமிழக அமைச்சரவை

## 1. திரு சி. என். அண்ணாதுரை—

**முதலமைச்சர்**

பொது நிர்வாகம், நிதி, போலீஸ், திட்டம், மது விலக்கு, அயல்நாடுகளிலுள்ள இந்தியர்கள்.

## 2. திரு வி. ஆர். நெடுஞ்செழியன்—

**கல்வி, தொழிலமைச்சர்**

கல்வி (தொழிற் கல்வி உட்பட), அற நிலையப் பாதுகாப்பு, சுரங்கம், சுரங்கப் பொருட்கள், இரும்பு, எஃகு, ஜவுளி, தேர்தல், தொழிலாளர் நலன், சட்ட மன்றத் துறை, மின்சாரம்.

## 3. திரு மு. கருணாநிதி—

**பொதுப்பணித் துறை அமைச்சர்**

பொதுப்பணித் துறை, சிறு பாசனம், வீட்டு வசதி, நெடுஞ்சாலைத் துறை, போக்குவரதது, அரசாங்க பஸ் போக்குவரத்து, துறைமுகங்கள்.

## 4. திரு கே. ஏ. மதியழகன்—

**உணவு, வருவாய்த்துறை அமைச்சர்.**

உணவு, ரெவின்யூ போர்டு, மாவட்ட ரெவின்யூ துறை, வர்த்தக வரி.

## 5. திரு ஏ. கோவிந்தசாமி—

**விவசாய அமைச்சர்**

விவசாயம், கால்நடைப் பராமரிப்பு, மீன் வளம், காட்டிலாகா, சின்கோனா.

## 6. திருமதி சத்தியவாணிமுத்து—

**ஹரிஜன நல அமைச்சர்**

ஹரிஜன நலத் துறை, செய்தி விளம்பரம், அரசாங்க அச்சகம், எழுதுபொருள், அச்சுத் துறை, சினிமாப் படச் சட்ட நிர்வாகம், மாதர், குழந்தைகள் நலன்.

## 7. திரு எஸ். மாதவன்—

**சட்டம், கூட்டுறவு அமைச்சர்**

கூட்டுறவு, சட்டம், கோர்ட்டுகள், சிறைச்சாலை, பதிவுத் துறை, பாஸ்போர்ட்டு சீட்டுகள், பண லேவாதேவி சட்டத்துறை, எடை அளவு சட்ட நிர்வாகம்.

## 8. திரு எஸ். ஜே. சாதிக் பாஷா—

**சுகாதார அமைச்சர்**

சுகாதாரம், மருத்துவம், வீட்டு வசதி, கட்டுப்பாடு, அனாதை விடுதிகள், பிச்சைக்காரர்கள் பிரச்னை, பத்திரிகைக் காகித கட்டுப்பாடு, பண்டங்கள் சப்ளை, விலைவாசி.

## 9. திரு எம். முத்துசாமி—

**உள்ளாட்சித் துறை அமைச்சர்**

உள்ளாட்சி, சமுதாய அபிவிருத்தித் திட்டம், பஞ்சாயத்துக்கள், பூதானம், கிராம தானம், கதர், கிராமத் தொழில்கள் அபிவிருத்தி, முன்னாள் ராணுவத்தினர் பிரச்னை.

''விலைவாசி ஏற்றம், உற்பத்திச் செலவின உயர்வு என்கிற இந்த நச்சு வட்டத்தை நாம் எங்கேனும் ஓரிடத்தில் தகர்த்துத் தான் ஆகவேண்டும். அண்மையில் நமக்குக் கிட்டிய அனுபவங்களின் படிப்பினையை யொட்டி விரைந்து பலன் தரும் திட்டங் களில் நாட்டம் செலுத்தி, இப்போதாவது நமது வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டு வதே அறிவுடைமையாகும்.

உழவர்கள், குறிப்பாக சிறு நிலக்கிழார்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏற்றவகை யில் அவர்களுக்குப் போதிய உற்சாகமும் ஊக்கமும் அளிக்கவேண்டும். இந்தச் சூழ லில்தான் எனது அரசாங்கத்தின் நிலவரி கொள்கை தனிச் சிறப்பு வாய்ந்த ஒன் றாகத் திகழ்கிறது. பொது மக்களின் கருத்துக்கு இணங்க,சட்டப் பேரவையின் அகத்தேயும் புறத்தேயும் தெரிவிக்கப்பட்ட மக்களின் கருத்து நெருக்குதலுக்குப் பணிந்து நிலமேல்வரி (Land Revenue Surcharge) ஏற்கெனவே அகற்றப்பட்டு விட்டது. ஆனால், இதுமட்டும் போதாது. சிறு நிலக்கிழார்களை, நிலவரிச் சுமையின் பிடிப்பிலிருந்தும் விடுவிப்பதற்குப் படிப் படியான திட்டமொன்றும் வகுக்கப்பட வேண்டும். இது குறித்து அடுத்த பசலிக் குள் திட்டவட்டமான முடிவுகளை அர சாங்கம் மேற்கொள்ளும்.

பயிரிடும் குத்தகைக்காரர்களின் இடர்ப் பாடுகளில் நாம் நாட்டம் செலுத்தினா லொழிய, வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய நமது திட்ட வேலைகள் முழு வெற்றியைத் தரமாட்டா. தற்போதைய நிலவாரச் சட்டத்தில் உள்ள பொத்தல்களை அடைத்து, பயிரிடும் குத்தகைக்காரர்கள், நடைமுறையில் நிலையான வார உரிமை (Fixity of Tenure) பெறுவதற்கு உறுதியானவகை செய்யும் பொருட்டு, அரசாங்கம் அச் சட்டத்தை மறு பரிசீலனை செய்யும்.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி வீதம் மாநிலத் திட்டத்தில் செய்துள்ள முதலீடுகளைக் கொண்டு மட்டுமே முடிவு செய்யப்படுவதில்லை என்பதை வலி யுறுத்திச் சொல்ல வேண்டும். பொரு ளாதார வளர்ச்சியை மேம்படுத்து வதில், மத்திய அரசாங்கத் துறையிலும், தனியார் துறைகளிலும் மாநிலத்தில் செய்யப்படுகிற முதலீடுகள் மேலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். பொருளாதார முறையிலும் தொழில் நுட்ப வகையிலும் ஐயத்திற்கு இடமின்றி மேற்கொள்ளலாமென்று முடிவு செய்யப் பட்ட சேலம் உருக்காலை போன்ற பெரிய தொழில் திட்டங்கள் சிலவற்றை நிறைவேற்றுவதன் மூலம் மத்திய அரசாங்க துறைகளில் இம் மாநிலத்திற்குரிய நியாய மான பங்கு முதலீடு செய்யப்பட வேண்டுமென்பதை மாநில அரசாங்கம் வற்புறுத்தும்.''

''வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கு வதன் அவசியம் குறித்தோ நமது மின்சாரத் திறனை உயர்த்தும் தேவையைக் குறித்தோ, கல்வி, மருத்துவ வசதி, பொதுச் சுகாதாரம் போன்ற இன்றியமையாச் சமூகப் பணிகளை விரிவு படுத்துவதன் அவசியம் குறித்தோ கருத்து வேறுபாடு எதுவும் இருப்பதற்கில்லை. இத் துறைகளில் இந்த மாநிலத்தின் அரசியல் வாழ்வில் ஈடுபட்டுள்ள பற்பல பிரிவின ரிடையே ஆக்கவகையில் ஒத்துழைப்பும் ஒத்த உணர்வும் நிலவ வேண்டுமென நான் வேண்டிக் கொள்கிறேன்.''

## குடியாட்சி மரபுகளை போற்றி வளர்க்கும் தமிழகம்

''உயரிய குடியாட்சிமரபுகளை வளர்ப்பதில் நாம் ஏற்கனவே நாட்டின் எஞ்சிய பகுதி களுக்கு உதாரணமாகச் செயல்பட்டிருக் கிறோம். அந்த மரபுகளுக்கேற்ப நடந்து கொள்வதுடன், அவற்றை மேலும் வளர்க்கவும் இன்று நாம் அழைக்கப்பட்டுள் ளோம். அண்மையில் இம் மாநில மக்களின் நம்பிக்கையைப் பெருமளவில் பெற்றுள்ளவர்கள் இம்மன்றத்தின் ஆட்சிப்பலகையில் அமர்ந்திருப்பதையும் பல ஆண்டுகளாக நிர்வாகத் துறையில் முதிர்ந்த அனுபவம் பெற்றுள்ளவர்கள் எதிர்க்கட்சியினராக வீற்றிருப்பதையும் இன்று காண்கிறோம். இந்தச் சூழலில் மக்களின் நலனை வளர்க்கும் பொது முயற்சியில் பல்வேறான அரசியல் கட்சி களைச் சேர்ந்தவர்களிடையே பயன்தரும் வகையில் ஒத்துழைப்புக் கிட்டுமென நான் உறுதியாக நம்புகிறேன்.''

——0——

" மக்களுக்காகத்தான், காவல்படை இருக்கிறது ; காவல் படையின் அலுவல்கள் எல்லாம், மக்கள் நலனை ஒட்டியதாகவே இருக்கும் என்ற எண்ணம், மக்களிடையே ஏற்படவேண்டும். அதற்கேற்ப காவல் படையின் பணி முறையில், புதிய பாங்கு தோன்ற, வழிவகை காணவேண்டும்."

—முதலமைச்சர்

# காவல் படையினரின் பணி

தமிழ்நாடு காவல் படைத் தலைமை அதிகாரி (Inspector-General of Police) திரு எப். வி. அருள் தலைமையில், 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 9-ம் தேதி அன்று நடைபெற்ற காவல் படை அதிகாரிகள் கூட்டத்தில், முதலமைச்சர் திரு சி. என். அண்ணுதுரை நிகழ்த்திய உரையின் சுருக்கம் வருமாறு :

" இதுநாள் வரை, காவல் படையைப்பற்றி குறைகூறி வந்த நான், இன்று திடீரென்று, அப்படையைப் போற்றுபவனுக மாறிவிடுவேன் என்று நீங்கள் எதிர் பார்க்கமாட்டீர்கள். ஆனால் ஒன்று ; காவல்படை மிகவும் பலம் வாய்ந்ததாக இருக்கவேண்டும் என்பதை, நாங்கள் ஏற்கனவே உணர்ந்திருக்கிறோம். அந்த நிலையிலிருந்து இன்றும் நான் மாறுபடவில்லை. சட்ட ஒழுங்கை நிலை நாட்டும் பொறுப்புடைய அப்படை, பலம் வாய்ந்ததாக இருக்கவேண்டும். ஏனெனில், சட்ட ஒழுங்கு நிலை நிறுத்தப்படாமல், உலகில், சட்ட பூர்வ அரசாங்கம் எதுவும், இயங்க முடியாது.

**பாதுகாப்புப் பணியில் அனுசரணைப் போக்கு**

எனவே, இக்கொள்கையைப் பொறுத்தவரை, யாருக்கும் கருத்து வேறுபாடில்லை. ஆனால் கொள்கையை வியாக்யானம் செய்வதில்தான், சங்கடம் நேரிடுகிறது. பாதுகாப்புப் பணி புரிவதில் அனுசரணைப் போக்கும் (liberality) இயைந்திருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். பாதுகாப்பு—அனுசரணைப் போக்கு இந்த இரண்டையும் எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பது, நம் நாட்டிற்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ள ஒரு பிரச்னையாகும்.



துப்பாக்கிச் சூடு நிகழ்ச்சிகளின் போது, காவல் படையின்மீது மக்களுக்கு ஏற்படும் வெறுப்பு உணர்ச்சிபற்றி உங்கள் தலைமை அதிகாரி குறிப்பிட்டதைப் பாராட்டுகிறேன். அத்தகைய நிகழ்ச்சிகளின் போது மக்கள் மனதில் வெறுப்பு உணர்ச்சி தோன்றுவது மட்டுமல்ல ; காவல்படை அதிகாரிகளேகூட, துப்பாக்கிச் சூடு நிகழ்ச்சிக்குப்பின் தங்கள் வீடுகளுக்குத் திரும்பும்போது, மனவருத்தம் அடைவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. கொல்வது, அதிலும் நம் நாட்டு மக்களை நாமே கொல்வது, மகிழ்ச்சிதரக் கூடிய காரியம் அல்ல. ஆகையால், துப்பாக்கி நிகழ்ச்சி நடக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், சிலர் கொல்லப்படுகிறார்கள்—மக்கள் மனதில் வெறுப்பு உணர்ச்சி, கோபம் உண்டாகிறது என்பது மட்டுமல்ல ; அதிகாரிகளாகிய நீங்களே அத்தகைய ஒன்று நடந்து விட்டதே என்று மெத்தவும் மனவருத்தம் அடைவீர்கள் என்று கருதுகிறேன். இத்தகைய துர்ப்பாக்கிய சம்பவங்களைத் தவிர்க்கும் பிரச்னைக்கு, போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒரு வழி வகை கண்டு வைத்திருக்கிறார் என்பதை அறிய மகிழ்ச்சி அடைகிறேன். அவரது யோசனை பற்றி மேலும் தீர ஆலோசித்து, ஒரு திருப்தியான முடிவு காணலாம் என நினைக்கிறேன்.

சட்ட ஒழுங்கை நிலை நாட்டுதல் என்பது நெடு நாட்களாக இருந்துவரும் பொதுவான கொள்கை. அக்கொள்கை, இப்போதைய புதிய சகாப்தம், புதிய ஜனநாயக உணர்ச்சி, மக்களிடையே தோன்றியுள்ள புதிய உள்ளக் கிடக்கை ஆகியவற்றிற்குப் பொருந்திவரச் செய்ய வேண்டும். காவல் படையின் அலுவல்கள் என்பவை, மக்களது நலனுக்கும் அரசாங்கத்தின் நிலையான தன்மைக்கும் உற்றவையே என்று ஏற்கும் நிலை உண்டாக வழி வகை காணவேண்டும்.

பொது வாழ்வுக்கு அதிகாரிகள்

அரசாங்கத்தின் நிர்வாகத் துறை ஒவ்வொன்றையும் நான் குறைகூறி வந்தவன் என்றாலும், காவல் படையின் மீது எனக்கு வெறுப்பு கிடையாது என்பதை, நான் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன். அதேபோல காவல் படையினரும், அரசியல் வாதிகள் என்றாலே ஒரு தப்பெண்ணம் கொள்ளமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

நாம் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டால், ஒரு புதிய சகாப்தமே ஆரம்பமாவது உறுதி என்று கருதுகிறேன். நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதால், நிகழப்போவது ஒன்று உண்டு என்றால், அது இதுதான் :— அரசாங்கத்தின் ஒவ்வொரு துறையிலும், சிறப்பாக, காவல் படைத் துறையில், ஒரு புதிய உணர்ச்சியை, ஒரு புதிய நோக்கினைப் புகுத்திட, நாங்கள் விரும்புகிறோம்."

இவ்வாறு கருத்துரை வழங்கிய முதலமைச்சர் காவல் படையினரின் குடியிருப்புப் பிரச்சினை போன்ற, பிரச்சினைகளைத் தாம் ஆராய்ந்து, ஆவன செய்வதாகக் கூறினார். காவல் படையினர் நடத்தும் கூட்டங்கள், மாநாடுகளில் தமிழிலே பேசவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

# இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி வழக்குகள், திரும்பப் பெறப்படுகின்றன

## தண்டனை அடைந்த எல்லோருக்கும் விடுதலை

### தமிழக அரசாங்கத்தின் ஆணைகள்

**1965-ம்** ஆண்டு, தமிழ்நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி சம்பந்தமாகக் குற்றச் சாட்டுகளுக்குள்ளான அனைவருக்கும் மன்னிப்பு அளிக்கும் விஷயத்தை, அரசாங்கம் கவனமாக பரிசீலித்தது. கிளர்ச்சி, யாராலும் தூண்டிவிடப்பட்டதல்ல என்றும், இயற்கையாகவே ஏற்பட்ட எழுச்சி என்றும் அரசாங்கம் கருதுகிறது. மாநிலத்தில் தமிழ் மொழி பேசுவோர்களது நலன்களைக் காக்க வேண்டுமென்ற ஆவலின் விளைவாக, இக் கிளர்ச்சி நடந்தது. ஆகவே அக்கிளர்ச்சி சம்பந்தமாக, தண்டிக்கப்பட்ட அனைவருக்கும் மன்னிப்பு தருவதே பொருத்தம் என்று அரசாங்கம் கருதுகிறது.

அக்கருத்தினை ஒட்டி, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி சம்பந்தமாக விசாரணையில் உள்ள வழக்குகளும் அப்பீல் வழக்குகளும், வாபஸ் பெறப்படும். ஏற்கெனவே தண்டிக்கப்பட்டு, சிறைத் தண்டனை அனுபவிப்பவர்களும் விடுதலை செய்யப்படுவார்கள். இவ்வாறு தமிழ்நாடு அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது.

அரசியல் சட்டத்தின் **161**-வது ஷரத்தின் கீழ், மாநிலக் கவர்னர் தமது அதிகாரங்களை பிரயோகித்து இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியால் தண்டிக்கப்பட்ட அனைவருக்கும் மன்னிப்பு அளித்துள்ளார்.

[இதன் முழு விவரம், பொதுத் துறையின் 17-3-67 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 631-லும் மற்றும் பொதுத் துறையின் 23-3-1967 தேதியிட்ட அரசாங்கக் குறிப்பாணை எண் 1262-லும் காணலாம்.]

(பாரதப் பிரதமரின் வானொலிப் பேச்சு—6-ம் பக்கத் தொடர்ச்சி.)

நடத்தப்படுகின்றன. ஆனால் அரசாங்கத்தின் மிக முக்கிய பணியில் மாறுதல் இல்லை : வறுமை, அறியாமை, பிணி, ஏற்றத் தாழ்வு, அநீதி ஆகியவற்றுக்கு எதிரான நீண்ட கடுமையான போராட்டம் தான் அந்தப் பணி.

## முதுமையின் அனுபவமும் அறிவும்

இதைச் செய்வதற்கு விருப்பம் இருந்துவிட்டால் மட்டும் போதாது. இந்தப் பணிக்கு ஏற்ற கருவிகளை உருவாக்க வேண்டும். சுதந்திரத்திற்குப் பிறகு மிகவும் சிரமமான காலத்தில், காந்திஜியும், பண்டிட்ஜியும் விவேகத்துடன் உருவாக்கிக் கொடுத்த சித்தாந்தமும் கொள்கைகளும் நமக்கு வழி காட்டுகிற பாக்கியம் பெற்றிருந்தோம். புதிய சவால்களுக்கு விடை காணுவதில், நாம் முழு மனதுடன் ஈடுபட வேண்டும். சுதந்திரத்திற்குப் பிறகு அநேகமாக இருபது ஆண்டுகள் முடிவடைந்திருக்கின்றன. ஒரு புதிய தலைமுறையினர் பெரியவர்களாகியிருக்கிறார்கள். நான்காவது பொதுத் தேர்தல் ஒரு பெரிய மாறுதலைக் குறிக்கிறது. புதிய விருப்பங்கள் நிறைவேற்றப்படுவதற்காகக் காத்திருக்கின்றன. புதிய தேவைகள், சூழ் நிலைகள் விருப்பங்கள் நம் முன்னே நிற்கின்றன. இவற்றை நாம் நிறைவேற்ற முனையவேண்டும். அவ்விதம் செய்யும்போது, புதிய உணர்ச்சியுடன் கூடிய தேசியக் குறிக்கோளை நாம் ஏற்படுத்த வேண்டும். நம்முடைய பணிகளையும், திட்டங்களையும் விவரித்து அவற்றில் எவற்றை முன்னதாக நிறைவேற்ற வேண்டும் என்று முடிவு செய்ய வேண்டும். புதுப்பித்துக்கொள்ளல் என்பது தொடர்ச்சியானதொரு விஷயமாகும்.

### புதிய தேவைகள், புதிய பணிகள்

கடந்த சில ஆண்டுகளாக முக்கியமாக, சென்ற ஆண்டு, தப்பெண்ணத்தால் அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் இடையே வேறுபாடுகள் சில சமயம் ஏற்பட்டன. வன்முறைச் செயல்களிலும், பலாத்காரச் செயல்களிலும் ஈடுபடும் தன்மைபற்றி நாம் ஒவ்வொருவரும் மிகவும் கவலை கொண்டிருக்கிறோம் என்று நான் நிச்சயமாக நினைக்கிறேன். பார்லிமெண்ட் முறை மக்கள் ஆட்சியில் வன்முறைச் செயல்களுக்கு இடமில்லை.

## ஒன்று கலக்கவேண்டும்

நாட்டை நிர்வகிப்பதும், அபிவிருத்தி செய்வதும் நாம் எல்லோரும் பங்கு பெறும் ஒரு பொறுப்பாகும். இப்பொறுப்பிலிருந்து எந்த ஒரு தனி மனிதனோ, சமூகமோ, தப்பித்துக்கொள்ள முடியாது. பங்கு கொள்வது, ஆலோசனை அளிப்பது, விவாதிப்பது ஆகியவற்றுக்கான வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டுமென்பது எனது முயற்சியாக இருக்கும். ஒன்றுகூடி ஒத்துழைத்து முன்னேற வேண்டுமென்பது தான் நமது விருப்பம்.

பழங்குடி மக்கள், ஹரிஜனங்கள் போன்ற சிறுபான்மைப் பிரிவினரின் விசேஷ பிரச்னைகளையும், குன்றுப் பகுதிகள், பின்தங்கிய பிரதேசங்கள், பற்றாக்குறையாக எப்போதும் உள்ள பகுதிகள் ஆகியவற்றின் பிரச்னைகளையும் கவனித்து அவற்றைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். நான் இதற்கு உறுதி கூறுகிறேன். பரந்த இந்தியாவில் வாழும் எந்த ஒரு பிரிவினரும் அவர்களை மற்றவர்கள் மறந்துவிட்டார்கள் என்று எண்ணக் கூடாது. அவர்களைப் புறக்கணித்தால், அது நாட்டிற்கே ஏற்படும் ஒரு நஷ்டமாகும்.

## இளமையின் துடிப்புடனும் லட்சிய உணர்வுடனும்

பீஹாரிலும், உத்தரப் பிரதேசம், மற்ற பற்றாக்குறை பிரதேசங்களில் வாழும் மக்களைப் பற்றிய சிந்தனைகளே தற்போது என் மனத்தில் மேலோங்கி நிற்கின்றன. நடப்பு ஆண்டில் உணவுப் பிரச்னை மிகவும் கடுமையாக இருக்கும். விலைவாசி உயர்வையும் நாம் தடுக்க வேண்டும். வேலை வாய்ப்புகளையும் அதிகரிக்கவேண்டும். இவற்றைச் செய்வதற்காக பிரத்யேகமாக திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவை பற்றி திட்டத்தில்

விவரமாக கூறப்படும். ஒரே வார்த்தையில் சொல்லப்போனுல், பற்ருக்குறைக்குப் பதில் விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும் அதிக உற்பத்தி என்பதுதான். இதை அடைய உழைப்பு தேவை. கடுமையான உழைப்புக்கு ஒரே மாற்று கடுமையான உழைப்புத்தானே தவிர, வேறு அல்ல.

பொருளாதாரத் துறையில், சுதேசி, அதாவது சுயராஜ்யம் என்பதுதான் நமது குறிக்கோள். பொருளாதாரத் துறையில் சுயபலச் சார்பு நிலை என்பது குறிக்கோளென்பது மட்டுமல்ல, அது ஒரு நடைமுறையே ஆகும்.

சொந்த முறையில் நான் மிகவும் முக்கியமாகக் கருதும் வேறு சில பிரச்னைகளை உங்களிடம் இப்போது கூறுகிறேன்.

### தேசிய மொழிகளை வலுப்படுத்துவோம்

நமது தேசிய மொழிகள் அனைத்தையும் நாம் வலுப்படுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டும். புத்தகங்களையும், மொழி பெயர்ப்புக்களையும் இலட்சக் கணக்கில் மலிவான விலையில் வெளியிடுவதில் நாம் அக்கறை காட்ட வேண்டும். இப்புத்தகங்கள் கலாச்சாரத்தையும், கல்வியறிவையும் பெருக்கவும், விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியை அவ்வப்போது அறிந்து கொள்ளவும் உதவும்.

கடுமையான தானியப் பற்ருக்குறை உடனடியாக கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்ருலும், நீண்டகால பிரச்னையும், மிகவும் அடிப்படையானதுமான பெரும்பான்மையான மக்களின் ஆரோக்கியத்தையும், சக்தியையும் பாதிக்கும் சத்துணவு இல்லாமைப் பிரச்னையை நாம் புறக்கணிக்கக் கூடாது.

இந்த விஷயத்திலும், மக்களின் உணவின் தரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதற்கான திட்டத்தை அரசியல் சாசனத்தில் 47-வது ஷரத்தின்படி உருவாக்க வேண்டியது அவசியம் என்றும், அது சாத்தியமானது என்றும் நான் நினைக்கிறேன்.

ஜனத்தொகை எண்ணிக்கை கட்டுக்கடங்காமல் போவதற்கு முன் நாம் ஜனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும். ஆள்பல உபயோகம் பற்றிய திட்டத்தில் ஒரு பகுதியே குடும்பக்கட்டுப்பாடு திட்டம். இதன் மற்ருெரு பகுதி கல்வியாகும்.

கடந்த ஆண்டில் ஏற்பட்ட மாணவர்கள் கிளர்ச்சிக்கு காரணம் எதுவாக இருப்பினும், அது நம்முடைய கல்வி முறை சீர்திருத்தப்பட வேண்டும் என்பதற்கு ஓர் எச்சரிக்கையே ஆகும். நாம் இது விஷயமாக என்ன செய்கிருேமோ அதுதான் வருங்கால சந்ததிகளை உருவாக்கப் போகிறது. இது சம்பந்தமாக நாம் என்ன செய்ய உத்தேசித்திருக்கிருேமோ, அதுபற்றி நாம் தீவிரமாகச் சிந்தனை செய்ய வேண்டும். அதே சமயத்தில் நாம் தைரியத்துடன் உடனடியாக முடிவுகள் எடுக்க வேண்டும்.

நமது நாட்டுக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், அறிஞர்கள் முதலியோரின் ஆக்கத்திறனுக்கான வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும். இந்தியப் புரட்சி நீடித்து உன்னத நிலையை அடைவதற்கு இவர்கள்தான் நல்லுணர்வுடனும், உத்வேகத்துடனும் கூடிய சக்தியை நல்குகிருர்கள். நடந்த பொதுத் தேர்தலின் முடிவுகள் சுட்டிக்காட்டும் நீதி ஏதாவது இருக்குமானுல், அது நாடு விரும்புவதைச் செயலாற்றல், முன்னேற்றம், மாறுதல், இவைதான் என்பது தெளிவாகும். அதிகாரமும், பொறுப்பும் புதிய தலைமுறையின் வசம் மாறிக்கொண்டிருக்கிறது. முதுமையின் அறிவும் அனுபவமும் இளமையின் துடிப்புடனும், லட்சிய உணர்வுடனும் ஒன்றறக் கலக்க வேண்டும்.''

[1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ந்தேதி புதன் கிழமை இரவு 8-30 மணிக்கு, அகில இந்திய வானொலியில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு.]

# வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்

**ஏப்ரல் 1967**

[சென்னை, திருச்சி, நெல்லை, கோவை வானொலி நிலையங்களிலிருந்து கிராம நிகழ்ச்சிகள் தினசரி இரவு 7–30 மணியிலிருந்து 8 மணிவரை ஒலிபரப்பாகின்றன].

1—4—67 (சனி).

1. விஸ்தரிப்புப் பணியாளர்களுக்கான குறிப்புகள்
2. சித்திரை மாத சாகுபடி குறிப்புகள் உரையாடல்.

2—4—67 (ஞாயிறு)

செய்யாறு வட்டார அபிவிருத்தி பற்றிய செய்திச் சித்திரம்.

3—4—67 (திங்கள்)

பண்ணைச் செய்தி—தஞ்சையில் புதுத் திட்டம்.

4—4—67 (செவ்வாய்)

கிராம ரேடியோ மன்றம் கேள்வி பதில்.

வெக்கை நோய்—உரையாடல்.

5—4—67 (புதன்)

கிராமிய சுகாதார குடும்பநல நிலையத்தின் பணி.

வெண்டை சாகுபடி உரையாடல்,

6—4—67 (வியாழன்)

சொர்ணவாரியில் நெல் நாற்றங்கால்.

7—4—67 (வெள்ளி)

கிராம வானொலி மன்றம்—கேள்வி பதில்.

தீவிர சாகுபடித் திட்டமும் கடன் வசதியும்—பேச்சு.

8—4—67 (சனி)

விஸ்தரிப்புப் பணியாளர்களுக்கான குறிப்புகள்.

வீரிய சோளத்தில் அமோக விளைச்சலைப் பெறுவது எப்படி.

9—4—67 (ஞாயிறு)

கன்னியாகுமரி மாவட்டத்தில் நெல்சாகுபடி.

10—4—67 (திங்கள்)

பசு பராமரிப்பு—உரையாடல்.

11—4—67 (செவ்வாய்)

கிராம வானொலி மன்றம்—கேள்வி பதில்.

கால்நடைகளுக்குத் தாதுப்பொருளின் அவசியம்—பேச்சு.

12—4—67 (புதன்)

வாழையைத் தாக்கும் முடிக் கொத்து நோய்.

13—4—67 (வியாழன்)

மல்லிகைச் சாகுபடி—உரையாடல்.

14—4—67 (வெள்ளி)

கிராம ரேடியோ மன்றம்—கேள்வி பதில்.

புத்தாண்டில் விவசாய அபிவிருத்தி—பேச்சு.

15—4—67 (சனி)

விஸ்தரிப்புப் பணியாளர்களுக்கான குறிப்புகள்.

கால்நடைகளுக்கு பசும் புற்கள்—உரையாடல்.

16—4—67 (ஞாயிறு)

கரும்பையழிக்கும் இளம் குருத்துப் பூச்சி.

17—4—67 (திங்கள்)

அமோக விளைச்சலுக்கு அதிசயக் கம்பு

18—4—67 (செவ்வாய்)

கிராம வானொலி மன்றம்—கேள்வி பதில்.

மலைப் பகுதிகளில் உருளைக் கிழங்கு சாகுபடி.

19—4—67 (புதன்)

திராட்சையின் பறவைக்கண் நோயும்—தடுப்பு முறைகளும்.

20—4—67 (வியாழன்)

ஆண்டுக் கடன் திட்டம்—உரையாடல்.

21—4—67 (வெள்ளி)

கிராம வானொலி மன்றம்—கேள்வி பதில்

சொர்ணவாரிப் பட்டத்தில் நெல்லுக்கு உரமிடுதல்.

22—4—67 (சனி)

விஸ்தரிப்பு பணியாளர்களுக்கான குறிப்புகள்.

23—4—67 (ஞாயிறு)

மீன் உரப் பொருட்கள்—உரையாடல்.

24—4—67 (திங்கள்)

பிந்தியிடப்பட்ட நடவுக்கு கோ. 853 கரும்பு—உரையாடல்.

25—4—67 (செவ்வாய்)

கிராம வானொலி மன்ற கேள்வி பதில்.

கூட்டுறவும் உணவு உற்பத்தியும்—பேச்சு.

26—4—67 (புதன்)

ஜாதிக்காய் சாகுபடி.

27—4—67 (வியாழன்)

சம்பாவிலும் ஆடுதுறை 27 பயிர் செய்யலாம்.

28—4—67 (வெள்ளி)

கிராம வானொலி மன்றம்—கேள்வி பதில்.

கரும்பு பயிரின் விரோதிகளை ஒழியுங்கள்.

29—4—67 (சனி)

விஸ்தரிப்புப் பணியாளர்களுக்கான குறிப்புகள்.

உணவு முனையில் புதியதோர் முறை.

30—4—67 (ஞாயிறு)

தென்னந்தோப்பு பராமரிப்பு.

பஞ்சாயத்து அரசிதழ்
PANCHAYAT GAZETTE
கிராமநலம் பகுதி 2 GRAMANALAM PART 2.

(பஞ்சாயத்து, பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசாங்க ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் இந்தப் பகுதியில் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

—:o:—

## விதிகள்—1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம்—நகரப் பஞ்சாயத்துக்கள் சம்பந்தப்பட்ட விதிகள்—நகரப் பஞ்சாயத்துக்களின் கணக்குகள் பேரில் தணிக்கை அறிக்கைகள் வழங்குவதற்கு கால வரம்பு—திருத்தம்—வெளியிடப்படுகிறது.

## Rules—Madras Panchayats Act, 1958—Rules relating to Town Panchayats—Time limit for issue of audit reports on accounts of the Town Panchayats—Amendment—Issued.

பஞ்சாயத்து யூனியன் மன்றங்களிடமிருந்து ஆண்டுக் கணக்குகளை தணிக்கை அலுவலகம் பெற்ற தேதியிலிருந்து, ஓர் ஆண்டு கால வரம்பிற்குள், அக் கணக்குகளின் பேரில் தணிக்கை அறிக்கைகளை, தல நிதி கணக்குகள் ஆய்வாளர் வழங்கிவிட வேண்டுமென்று ஒரு கால வரம்பை நிர்ணயித்து, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2453-ல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன; இந்த உத்தரவுகள் 1965–66-ம் ஆண்டு, மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்குரிய கணக்குகளிலிருந்து செயல்படும். அதேபோன்று, நகரப் பஞ்சாயத்துக்களிடமிருந்து. ஆண்டு கணக்குகளை தணிக்கை அலுவலகம் பெற்ற தேதியிலிருந்து ஓர் ஆண்டு கால வரம்பிற்குள் அக்கணக்குகளின் பேரில் தல நிதி கணக்குகள் ஆய்வாளர் வழங்கிவிட வேண்டுமென்றும், அவ்வாறு செய்வதை, 1965–66-ம் ஆண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்குரிய கணக்குகளிலிருந்து துவங்கலாம் என்று உத்தரவுகள் பிறப்பிக்கும்படி கிராம வளர்ச்சி நெறியாளர் இப்போது கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கிராம வளர்ச்சி நெறியாளரின் கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ப, தல நிதி கணக்குகள் ஆய்வாளர், நகரப் பஞ்சாயத்துக்களிடமிருந்து ஆண்டுக் கணக்குகளை பெற்ற தேதியிலிருந்து, 12 மாத கால வரம்பிற்குள் அக் கணக்குகளின் பேரில் தணிக்கை அறிக்கைகளை வழங்கிவிட வேண்டுமென்றும், அவ்வாறு செய்வதை 1965–66-ம் ஆண்டு, மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்குரிய கணக்குகளிலிருந்து துவங்க வேண்டும் என்றும், கிராம நல தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 260-ல் அறிவிப்பு எண் 12-ல் உள்ள 'தணிக்கை அறிக்கைகளை வெளியிடுதல், 'பைசல் செய்தல்' சம்பந்தப்பட்ட விதிகளில் விதிகள் 1, 2, மற்றும் 3-ல் வகுக்கப்பட்டுள்ள நடைமுறைக்கேற்றவாறு தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவேண்டுமென்றும், இதற்கு தகுந்த முறையில் மேற்கண்ட விதிகள் திருத்தப்படவேண்டும் என்றும் அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1967 ம் ஆண்டு ஜனவரி மாதம் 23–ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 139–ன் சுருக்கம்.)

—

## விவசாயம்—'பம்புசெட்டுகள் விநியோகிக்கும் திட்டத்தை நகரப் பஞ்சாயத்துகளுக்கு விஸ்தரித்தல்—உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றன.

## Agriculture—Scheme for the supply of pumpsets to Town Panchayats—Ordered.

'பம்பு செட்டு'களை வினியோகிக்கும் திட்டம் நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று—விவசாயத் துறையின் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1525-ல் வெளியிடப்பட்டுள்ள உத்தரவுகளைத் தொடர்ந்து—அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

2. கிராம நல தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 549-ல் வெளியிடப்பட்டுள்ள விதிகளுக்கு வேண்டிய திருத்தங்கள், கிராம நல தல நிர்வாகத் துறையால் தனியே பிறப்பிக்கப்படும்.

(விவசாயத் துறையின் 1967–ம் ஆண்டு ஜனவரி மாதம் 5–ந் தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண் 143295.)

கிராம மனித சக்தித் திட்டம்—நீர் தேங்குவதை தடுப்பதற்கும், வெள்ளக் கட்டுப்பாடுகளுக்கும எளிய நடவடிக்கைகளை திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுதல்—விளக்க உத்தரவுகள்—பிறப்பிக்கப் படுகின்றன.

## Rural Manpower Programme—Implementation of—Works and schemes—Inclusion of simple anti-water logging and flood control measures under the programme—Instructions—Issued.

உயர்மட்ட அளவிலுள்ள பொறியியல் நிறுவனங்களின் உதவியின்றியே, பஞ்சாயத்து யூனியன் பொறியியல் அலுவலர்கள் நிறைவேற்றக்கூடிய வகையில், வெள்ளத் தால் சூழப்பட்ட கிராமங்களை உயர்த்தி சிறிய கட்டுக் கரைகள (Embankments) அமைத்தல், மற்றும் நீர்த் தேங்குவதை தடுக்கும் (anti-water logging) வகையில் சிறிய வடிகால் (Drainage) வேலைகள் ஆகியவற்றை கிராம மனித சக்தித் திட்டத்தின்கீழ்—கிராம நல தல நிர்வாகத்துறையின் 7—10—1965 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2222-ல் (இவ்வாணையின் தமிழாக்கம் "கிராமநலம்" நவம்பர் 1965 இதழ், பாகம் II, பக்கம் iii-ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது) பிறப்பிக்கப்பட்டுள்ள அடிப்படை அம்சங்கள், முதன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு—மேற்கொள்ளலாம் என்று சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தெரிவிக்கப் படுகிறது.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 11-2-1967 தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண் 85294-ன் சுருக்கம்.)

---

தாளவாடி பஞ்சாயத்து யூனியன்—மேல் நிலை குடிநீர்த் தொட்டிகள்—ரூ. 1 லட்சம் விசேஷ மானியம்.

## Rural Water Supply—Piped water supply—Coimbatore District—Talavadi Panchayat Union—Construction of over head tanks—Special grant of Rs. 1 Lakh—Sanctioned.

கோயம்புத்தூர் மாவட்ட கூட்டு ஆட்சித் தலைவர், தாளவாடி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த நான்கு முக்கிய கிராமங்களில், மேல் நிலை குடிநீர்த் தொட்டிகள் கட்டும் வேலையை மேற்கொள்ள, ரூபாய் ஒரு லட்சம் விசேஷ மான்யம் கோரியுள்ளார். இந்த வட்டாரம் மிகவும் பின் தங்கிய பகுதியாக இருப்பதால், குடிநீர்த் தொட்டிகள் கட்டும் செலவில், பத்து சதவிகிதத்திற்கு மட்டுமே பொது மக்களின் நன்கொடைத் தொகை உட்பட்டிருக்கவேண்டுமென்று, மேலும் அவர் கோரியுள்ளார்

2. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கோரிக்கைகளை, அரசாங்கம் கவனமாக, தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராம வேலைகள்,) கிராம வளர்ச்சி நெறியாளர் ஆகியோருடன் கலந்தாலோசித்து, கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பிக்கிறது,

(அ) தாளவாடி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த நான்கு முக்கிய கிராமங்களில், மேல் நிலை குடிநீர்த் தொட்டிகள் கட்டும் வேலைகளை மேற்கொள்ள, அந்த பஞ்சாயத்து யூனியனுக்கு, விசேஷ சலுகையாக, ரூ. 1 லட்சத்தை (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) அரசாங்கம் விசேஷ மானியமாக அளிக்கிறது.

(ஆ) மேல் நிலை குடிநீர்த் தொட்டிகள் கட்டப்பட வேண்டிய கிராமங்கள், தாளவாடி பஞ்சாயத்து யூனியனுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சி தலைவரால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

(இ) இந்த வட்டாரம் மிகவும் பின் தங்கிய பகுதியாக இருப்பதால், குடிநீர்த் தொட்டிகள் கட்டும் மொத்த செலவில், பத்து சதவீதத்திற்கு மட்டுமே, அவற்றால் பலனடைபவர்களின் அல்லது பஞ்சாயத்தின் நன்கொடைத்தொகை உட்பட்டிருக்க வேண்டும்; அதாவது, ஒவ்வொரு வேலைக்கும் மொத்த செலவிலும் அரசாங்க மானியம் 90 சதவீதத்திற்கு மேற்படக்கூடாது.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 7-2-1967 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 257-ன் சுருக்கம்.)

——(o)——

கோட்டப் பஞ்சாயத்து அதிகாரிகள் திறம்பட பணியாற்றுதல் - அலுவல் பட்டியல் - அங்கீ கரிக்கப்படுகிறது.

## Establishment - Panchayat Development Subordinate Service - Divisional Panchayat Officers - Effective functioning at District level - Job chart - Approved.

கோட்டப் பஞ்சாயத்து அதிகாரிகள், (Divisional Panchayat Officers) தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சட்ட பூர்வமான அலுவல்களை செய்து வருவதோடு பஞ்சாயத்து வளர்ச்சி நிர்வாகம் சம்பந்தப்பட்ட எல்லா வற்றிலும், வருவாய்க்கோட்ட அதிகாரிக்கு நேர் உதவி யாளராக (Personal Assistants) வும் பணியாற்ற வேண்டுமென்று, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஜுன் மாதம் 5-ம் தேதியிட்ட அரசாங்க

ஆணை எண் 1588-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இருப்பினும், கிராம நல தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 13-ம் தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண் 238469-ல் மேற்கண்ட உத்தரவுகள் மாற்றியமைக்கப்பட்டன. அதன்படி, கோட்ட அளவிலுள்ள எல்லா பிரிவுகள் சம்பந்தப்பட்ட வேலைகளிலும் கோட்டப் பஞ்சாயத்து அதிகாரிகள் வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு உதவி செய்ய வேண்டிய தேவையில்லை; பஞ்சாயத்துக்கள் சம்பந்தப்பட்ட அலுவல்களில் மட்டுமே, வருவாய்க்கோட்ட அதிகாரிகளுக்கு அவர் உதவி செய்தால் போதும். மேலும், பஞ்சாயத்து யூனியன்கள் மற்றும் வருவாய்ப் பிரிவுகள் (Revenue Branches) சம்பந்தப்பட்ட வேலைகளை, தங்கள் அலுவலகத்திலுள்ள பஞ்சாயத்து வளர்ச்சி தலைமை எழுத்தர், மற்றும் வருவாய்ப் பிரிவு தலைமை எழுத்தரின் உதவியைக் கொண்டு, வருவாய்க்கோட்ட அதிகாரிகளே அவ்வேலைகளை கவனிக்கவேண்டுமென்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2. இப்போதுள்ள இந்த நிர்வாக அமைப்பானது திருப்திகரமாக செயல்படவில்லை யென்றும், கோட்டப் பஞ்சாயத்து அதிகாரிகள், வருவாய்க் கோட்ட அதிகாரிகளுக்கு உதவி புரிவதிலோ, அல்லது தங்களது இதர வேலைகளை செய்வதிலோ சரியாக செயல்பட இயலவில்லை என்றும் கிராம வளர்ச்சி நெறியாளர் எடுத்துக்கூறியுள்ளார். எனவே, மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர் உதவியாளரைப் (பஞ்சாயத்து வளர்ச்சி) போன்று, கோட்டப் பஞ்சாயத்து அதிகாரிகளை, கோட்ட அளவில் இயங்கச் செய்யலாம் என்றும், அவ்வாறு செய்வதால் வாஹெலிப் பராமரிப்பு நிறுவனம், திரைப்படப் பகுதி உள்பட பஞ்சாயத்து வளர்ச்சி நிர்வாகம் முழுவதையும் சரியாக மேற்பார்வையிடவும், தக்க கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கவும் வசதியாயிருக்கும் என்று கிராம வளர்ச்சி நெறியாளர் கருத்து தெரிவித்துள்ளார்.

3. கிராம வளர்ச்சி நெறியாளரின் கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, கோட்டப் பஞ்சாயத்து அதிகாரிகள், வருவாய்க் கோட்ட அதிகாரிகளுக்கு நேர் உதவியாளர்களாக செயல்பட்டு, தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சட்டபூர்வ அலுவல்களை செய்து வருவதோடு, பஞ்சாயத்து வளர்ச்சி வேலைகள் அனைத்திலும் வருவாய்க்கோட்ட அதிகாரிக்கு உதவி செய்ய வேண்டுமென்று, அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. இவ்வாணையுடன் இணைக்கப்பட்டு, அதில் விவரிக்கப்பட்டுள்ள கோட்டப் பஞ்சாயத்து அதிகாரிகளுக்குரிய அலுவல் பட்டியலை (Job chart) யும் அரசாங்கம் அங்கீகரிக்கிறது. இவ்வாறு அவர்களின் வேலை, நிலையில் மாறுதல் வரும்படுவதன் காரணமாக, கோட்டப் பஞ்சாயத்து அதிகாரிகள், கோட்டத் தலைமை இடத்தில் (divisional headquarters) அதிகமாக தங்க நேரிடுமாகையால், அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட பயணப் படியில் குறைவேதுமில்லாமல், ஆனால் அவர்கள் மாதம் ஒன்றுக்கு சுற்றுப்பயணம் செய்யவேண்டிய நாட்களின் எண்ணிக்கை 20-லிருந்து 15-ஆகக் குறைக்கப்படவேண்டுமென்றும் அரசாங்க ஆணை பிறப்பிக்கிறது.

(இணைப்பை ஆணையில் காண்க.)

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1967 ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 149-ன் சுருக்கம்.)

—o—

## நகரப் பஞ்சாயத்துக்களுக்கு உயர் விகித வீட்டுவரி—பஞ்சாயத்து ஆட்சி நிதிகள் பற்றிய ஆய்வுக் குழுவின் சிபாரிசு—விளக்க உத்தரவுகள்—பிறப்பிக்கப்படுகின்றன.

## Tax—House Tax—High rates of taxes for Town Panchayats—Recommendation of the Study Team on Panchayat Raj Finances—Instructions—Issued.

வீடுகளின் வருடாந்திர வாடகை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு வீட்டு வரி விதிக்கப்படுகின்ற நகரப் பஞ்சாயத்துக்களிலெல்லாம், அவற்றின் நிதிநிலை வளம்பெற, வீட்டுவரி விகிதத்தை குறைந்த பட்சமாக 5 சதவீதத்திலும், உயர்ந்த பட்சமாக 10 சதவீதத்திலும் அரையாண்டிற்கு நிர்ணயிப்பது பற்றி விரிவாக பரிசீலனை செய்யப்பட்டது.

அதிக, குறைந்த வரி விகிதங்கள் கொண்ட அட்டவணையானது 1965-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் (திருத்தச்)சட்டத்தின் பிரிவு 6ஐக் கொண்டு திருத்தப்பட்டுள்ளது வீடுகளின் ஆண்டு மதிப்பை அடிப்படையாகக்கொண்டு வீட்டு வரி விதிக்கப்படுகையில், மேற்கண்ட திருத்தப்பட்டுள்ள அட்டவணையின் படி, ஆண்டொன்றுக்கு குறைந்தபட்சமானது 2 சதவீதமாகவும், அதிகபட்சமானது 20 சத வீதமாகவும் இருக்கும். எனவே சூழ்நிலைக்கேற்ப, 2 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்குள் எந்த விகிதத்தையும் கடை பிடித்துக் கொள்ளுதல் பஞ்சாயத்துக்களின் விருப்பமாகும். நகரப் பஞ்சாயத்துக்களின் வருவாயை அபிவிருத்தி செய்ய, மற்றும் அவற்றின் செலவினங்கள், பொறுப்புக்களை நிறைவேற்ற, வீட்டு வரி விதிப்பதற்கு அட்டவணையில் குறைந்த பட்சமாக 2 சத வீதம் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், 5 சத விதத்திற்கு மேற்பட்ட ஒரு விகிதத்தை பின்பற்ற வேண்டும் என்று நகரப் பஞ்சாயத்துக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

வீட்டு வரித் தீர்வையை திருத்தியமைக்கும் வேலை மேற்கொள்ளப்படும்போது, இதைக் கருத்தில் கொள்ளுமாறு நகரப் பஞ்சாயத்து அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம வளர்ச்சி நெறியாளர் அலுவலகத்தின் 2.2.1967 தேதியிட்ட ந. க. எண் 1637/67ன் சுருக்கம்.)

## தல நிதி தணிக்கைத் துறை சீரமைப்பையொட்டி அலுவல் வரம்பில் மாறுதல்கள்.

## Reorganisation of Local Fund Audit Department--Consequent changes of jurisdiction.

இத்துறை (தல நிதி கணக்குகள் துறை) 1-10-1966 முதல் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று, நிதித் துறையின் 14—7—1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 789-ல் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அதற்கேற்ப, ஒவ்வொரு மாவட்டத்திலும், இத்துறையின் கட்டுப்பாட்டிலிருந்து வரும் எல்லா கிளை தணிக்கை அலுவலகங்களும், இக்கடிதத்தின் இணைப்பில் விவரிக்கப் பட்டுள்ளவாறு, தல நிதி கணக்குகள் துணை ஆய்வாளர் (Assistant Examiner of Local Fund Accounts) ஒருவரின் பொறுப்பில், செயல்படும்.

2. எனவே, தங்கள் கீழுள்ள அதிகாரிகளெல்லாம் இனி சம்பந்தப்பட்ட துணை ஆய்வாளருடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

### இணைப்பு.

| வரிசை எண். | அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியின் பதவி பெயர். | தலைமையிடம். | அலுவல் வரம்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | தல நிதி கணக்குகள் துணை ஆய்வாளர். | சைதாப்பேட்டை | சென்னை நகரம், செங்கற்பட்டு மாவட்டம். |
| 2. | தல நிதிக் கணக்குகள் துணை ஆய்வாளர். | கடலூர் | தென் ஆர்க்காடு மாவட்டம். |
| 3. | தல நிதிக் கணக்குகள் துணை ஆய்வாளர். | மாயூரம் | தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள (கிழக்கு தஞ்சாவூர் அபிவிருத்தி மாவட்டம்) மாயூரம், சீர்காழி, நாகப்பட்டிணம், நன்னிலம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி தாலூகாக்கள். |
| 4. | தல நிதிக் கணக்குகள் துணை ஆய்வாளர். | தஞ்சாவூர் | தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள (மேற்கு தஞ்சாவூர் அபிவிருத்தி) தஞ்சாவூர், கும்பகோணம், பாபநாசம், பட்டுக்கோட்டை அறந்தாங்கி, ஓரத்தநாடு தாலுக்காக்கள், மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் முழுவதிலுமுள்ள மாவட்ட தீவிர விவசாய வேலைத்திட்டம். |
| 5. | தல நிதிக் கணக்குகள் துணை ஆய்வாளர். | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 6. | தல நிதிக் கணக்குகள் துணை ஆய்வாளர். | இராமநாதபுரம் (இருப்பு) மதுரை | இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோயில்பட்டி, சங்கரன் கோயில் தாலுக்காக்கள். |
| 7. | தல நிதிக் கணக்குகள் துணை ஆய்வாளர். | மதுரை | மதுரை மாவட்டம். |
| 8. | தல நிதிக் கணக்குகள் துணை ஆய்வாளர். | திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம் (கோயில் பட்டி, சங்கரன் கோயில் தாலுக்காக்கள் நீங்கலாக) |
| 9. | தல நிதிக் கணக்குகள் துணை ஆய்வாளர். | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை அவநாசி, மற்றும் பல்லடம், (திருப்பூர் நகரம், மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கதர் நிறுவனங்கள் தவிர), மற்றும் நீலகிரி மாவட்டம். |
| 10. | தல நிதிக் கணக்குகள் துணை ஆய்வாளர். | ஈரோடு | கோயம்புத்தூரிலுள்ள ஈரோடு, பவானி, கோபி, தாராபுரம் தாலுக்காக்கள், திருப்பூர் நகரம் மற்றும் பல்லடம் தாலுக்காவிலுள்ள கதர் நிறுவனங்கள். |
| 11. | தல நிதிக் கணக்குகள் துணை ஆய்வாளர். | சேலம் | சேலம், தர்மபுரி மாவட்டங்கள். |
| 12. | தல நிதிக் கணக்குகள் துணை ஆய்வாளர். | வேலூர் | வட ஆர்க்காடு மாவட்டம் |

(தலநிதிக் கணக்குகள் ஆய்வாளரின் 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6-ம் தேதியிட் கடித எண் 9718-ஆ சுருக்கம்.)

## 1967 பொதுத் தேர்தல்

# தமிழ்நாடு சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் விவரம்

## சென்னை நகரம்

| | தொகுதி. | வெற்றி பெற்றவர் பெயர். |
|---|---|---|
| 1 | வண்ணாரப்பேட்டை | திரு மு. வேதாசலம் (தி.மு.க.) |
| 2 | ஹார்பர் | திரு அபீபுல்லா பெய்க் (சுயேச்சை) |
| 3 | பேசின் பிரிட்ஜ் | திரு எம். ஆர். கண்ணன் (தி.மு.க.) |
| 4 | பார்க் டவுன் | திரு எச். வி. ஹண்டே (சுதந்.) |
| 5 | பெரம்பூர் (தனித் தொகுதி) | திருமதி சத்தியவாணிமுத்து (தி.மு.க.) |
| 6 | புரசைவாக்கம் | திரு வி. எஸ். கோவிந்தராசன் (தி.மு.க.) |
| 7 | எழும்பூர் | திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி (தி.மு.க.) |
| 8 | ஆயிரம் விளக்கு | திரு கே. ஏ. மதியழகன் (தி.மு.க.) |
| 9 | திருவல்லிக்கேணி | திரு வி. இரா. நெடுஞ்செழியன் (தி.மு.க.) |
| 10 | மைலாப்பூர் | திரு அரங்கண்ணல் (தி.மு.க.) |
| 11 | தியாகராய நகர் | திரு ம. பொ. சிவஞானம் (தி மு.க ) |
| 12 | சைதாப்பேட்டை | திரு மு. கருணாநிதி (தி.மு.க.) |

(மொத்த இடங்கள்—12)

## செங்கல்பட்டு மாவட்டம்

| | தொகுதி. | வெற்றி பெற்றவர் பெயர். |
|---|---|---|
| 13 | கும்முடிப்பூண்டி | திரு கே. வேழவேந்தன் (தி.மு.க.) |
| 14 | பொன்னேரி (தனித் தொகுதி) | திரு பா. நாகலிங்கம் (தி.மு.க.) |
| 15 | திருவொற்றியூர் | திரு அ. பொ. அரசு (தி.மு.க.) |
| 16 | பறங்கிமலை | திரு எம். ஜி. இராமச்சந்திரன் (தி.மு.க.) |
| 17 | திருப்போரூர் | திரு முனு ஆதி (தி.மு.க.) |
| 18 | செங்கல்பட்டு | திரு செ. கோ. விசுவநாதன் (தி.மு.க.) |
| 19 | மதுராந்தகம் | திரு கொளத்தூர் கோதண்டம் (தி.மு.க.) |
| 20 | அச்சரப்பாக்கம் (தனித் தொகுதி) | திரு பி. எஸ். எல்லப்பன் (சுதந்.) |
| 21 | உத்தரமேரூர் | திரு கே. எம். இராஜகோபால் (தி.மு.க.) |
| 22 | காஞ்சிபுரம் | திரு நா. கிருட்டினன் (தி.மு.க.) |
| 23 | குன்றத்தூர் (தனித் தொகுதி) | திரு எம். கோபால் (தி.மு.க.) |
| 24 | ஸ்ரீபெரும்புதூர் | திரு டி. இராஜரத்தினம் (தி.மு.க.) |
| 25 | கடம்பத்தூர் | திரு சி. வி. எம். அண்ணாமலை (தி.மு.க.) |
| 26 | திருவள்ளூர் (தனித்தொகுதி) | திரு சு. ம. துரைராஜ் (தி.மு.க.) |
| 27 | திருத்தணி | திரு கே. விநாயகம் (காங்.) |

[மொத்த இடங்கள்—15)

## வட ஆர்க்காடு மாவட்டம்

| | தொகுதி. | வெற்றி பெற்றவர் பெயர். |
|---|---|---|
| 28 | அரக்கோணம் | திரு எஸ். ஜே. இராமசாமி (தி.மு.க.) |
| 29 | சோளிங்கர் | திரு அரங்கநாதன் (தி.மு.க.) |
| 30 | இராணிப்பேட்டை | திரு எம். அப்துல் கபூர் சாகிப் (சுயே.) |
| 31 | ஆர்க்காடு | திரு என். வீராசாமி (தி.மு.க.) |
| 32 | காட்பாடி | திரு. ஜி. நடராஜன் (தி.மு.க.) |
| 33 | குடியாத்தம் | திரு வி. கே. கோதண்டராமன் (மார்க்ஸ்) |
| 34 | பேர்ணாம்பட்டு | திரு பி. ஜயராமன் (தி.மு.க.) |
| 35 | நாட்றாம்பள்ளி | திரு தி. சி. திம்மராய கவுண்டர் (தி.மு.க.) |
| 36 | திருப்பத்தூர் | திரு சின்னராஜி கவுண்டர் (தி.மு.க.) |
| 37 | வாணியம்பாடி | திரு ராஜமன்னார் (காங்.) |
| 38 | ஆம்பூர் (தனித் தொகுதி) | திரு எம். பன்னீர் செல்வம் (தி.மு.க.) |
| 39 | கணியம்பாடி | திரு எல். பலராமன் (காங்.) |
| 40 | வேலூர் | திரு மா. பா. சாரதி (தி.மு.க.) |
| 41 | ஆரணி | திரு ஏ. சி. நரசிம்மன் (தி.மு.க.) |
| 42 | செய்யாறு | திரு கே. கோவிந்தன் (தி.மு.க.) |
| 43 | வந்தவாசி (தனித் தொகுதி) | திரு எஸ். முத்துலிங்கம் (தி.மு.க.) |
| 44 | பெரணமல்லூர் | திரு வெ. து. அண்ணாமலை (தி.மு.க.) |
| 45 | போளூர் | திருமதி எஸ். குப்பம்மாள் (தி.மு.க.) |

| தொகுதி. | | வெற்றிபெற்றவர் பெயர். |
|---|---|---|
| 46 | செங்கம் (தனித் தொகுதி) | திரு பி. எஸ். சந்தானம் (தி.மு..க.) |
| 47 | தண்டாரம்பட்டு | திரு சகாதேவ கண்டர் (காங்.) |
| 48 | கலசப்பாக்கம் | திரு எஸ். முருகையன் (தி.மு.க.) |
| 49 | திருவண்ணாமலை | திரு டி. விஜயராஜ் (காங்.) |

(மொத்த இடங்கள்—22)

## தென் ஆர்க்காடு மாவட்டம்

| | | |
|---|---|---|
| 50 | மேல்மலையனூார் | திரு ரா. ரா. முனுசாமி (தி.மு.க.) |
| 51 | செஞ்சி | திரு வெ. முனுசாமி (தி.மு.க.) |
| 52 | திண்டிவனம் | திரு கே. இராமமூர்த்தி (காங்.) |
| 53 | வானூர் (தனித் தொகுதி) | திரு ஏ. ஜி. பாலகிருஷ்ணன் (தி.முக.) |
| 54 | கண்டமங்கலம் (தனித் தொகுதி) | திரு எம். இராமன் (தி.மு.க.) |
| 55 | விழுப்புரம் | திரு எம். சண்முகம் (தி.மு.க.) |
| 56 | நெல்லிக்குப்பம் | திரு சி. கோவிந்தராஜன் (மார்க்ஸ்) |
| 57 | கடலூர் | திரு இரெ. இளம்வழுதி (தி மு.க.) |
| 58 | பண்ருட்டி | திரு எஸ். இராமச்சந்திரன் (தி.மு.க.) |
| 59 | புவனகிரி | திரு ஆ. கோவிந்தராசன் (தி.மு.க.) |
| 60 | காட்டுமன்னார்கோயில் (தனித் தொகுதி) | திரு எஸ். சிவசுப்ரமணியன் (காங்.) |
| 61 | குறிஞ்சிப்பாடி (தனித் தொகுதி) | திரு என். இராஜாங்கம் (தி.மு.க.) |
| 62 | சிதம்பரம் | திரு ர. கனகசபை பிள்ளை (காங்.) |
| 63 | விருத்தாசலம் | திரு ஜி. பூவராகன் (காங்.) |
| 64 | மங்களூர் (தனித் தொகுதி) | திரு ஏ கிருஷ்ணன் (தி.மு.க.) |
| 65 | உளுந்தூர்பேட்டை | திரு மு. கந்தசாமி படையாச்சி (காங்.) |
| 66 | திருக்கோவிலூர் | திரு இ. எம். சுப்பிரமணியம் (காங்.) |
| 67 | முகையூர் | திரு ஏ. கோவிந்தசாமி (தி.மு.க.) |
| 68 | ரிஷிவந்தியம் (தனித் தொகுதி) | திரு எம். ஆனந்தன் (தி.மு.க.) |
| 69 | சங்கராபுரம் | திரு எஸ். பி. பச்சையப்பன் (தி.மு.க.) |
| 70 | கள்ளக்குறிச்சி | திரு டி. கேசவலு நாயுடு (தி.மு.க.) |

(மொத்த இடங்கள்—21)

## தர்மபுரி மாவட்டம்

| தொகுதி. | | வெற்றிபெற்றவர் பெயர். |
|---|---|---|
| 71 | ஹோசூர் | திரு பி. வெங்கடசாமி (சுதந்.) |
| 72 | உத்தனப்பள்ளி | திரு கே. எஸ். கோதண்டராமையா (சுதந்.) |
| 73 | கிருஷ்ணகிரி | திரு பி. ஏம். முனுசாமி கவுண்டர் (காங்.) |
| 74 | காவேரிப்பட்டணம் | திரு ஏ. பட்டாபி நாயுடு (காங்.) |
| 75 | ஊத்தங்கரை | திரு டி. தீர்த்தகிரி கவுண்டர் (காங்.) |
| 76 | ஹரூர் (தனித் தொகுதி) | திரு என். தீர்த்தகிரி (காங்) |
| 77 | தர்மபுரி | திரு எம். சுப்பிரமணிய கவுண்டர் (தி.மு.க.) |
| 78 | பாலக்கோடு | திரு க. முருகேசன் (காங்.) |
| 79 | பெண்ணாகரம் | திரு பி. கே. சி. முத்துசாமி (காங்.) |

(மொத்த இடங்கள்—9)

## சேலம் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 80 | மேட்டூர் | திரு சுரேந்திரன் (பி.சோ.) |
| 81 | தாரமங்கலம் | திரு கோவிந்தன் (தி.மு க.) |
| 82 | ஓமலூர் (தனித் தொகுதி) | திரு சி. பழனி (தி.மு.க.) |
| 83 | சேலம்—1 | திரு கி. ஜயராமன் (தி.மு.க.) |
| 84 | சேலம்—2 | திரு ஈ. ஆர். கிருஷ்ணன் (தி.மு.க.) |
| 85 | ஏர்க்காடு (தனித் தொகுதி) | திரு வி. சின்னசாமி (தி.மு.க.) |
| 86 | பனமரத்துப்பட்டி | திரு டி. பொன்னுமலை (தி மு.க.) |
| 87 | வீரபாண்டி | திரு எஸ். ஆறுமுகம் (தி.மு.க.) |
| 88 | எடப்பாடி | திரு அ. ஆறுமுகம் (தி.மு.க.) |
| 89 | சங்கரி (தனித் தொகுதி) | திரு ஆர். நல்லமுத்து (தி.மு.க.) |
| 90 | திருச்செங்கோடு | திரு டி. ஏ. ராஜவேலு (தி.மு.க.) |
| 91 | கபிலமலை | திரு சி. வி. வேலப்பன் (தி.மு.க.) |
| 92 | நாமக்கல் | திரு எம். முத்துசாமி (தி.மு.க.) |
| 93 | சேந்தமங்கலம் (தனித் தொகுதி) | திரு அ. செல்லா கவுண்டர் (காங்). |
| 94 | ராசிபுரம் | திரு பெ. பெரியசாமி (தி.மு.க.) |
| 95 | ஆத்தூர் | திரு கே. என். சிவப்பெருமாள் (தி.மு.க.) |
| 96 | தலைவாசல் (தனித் தொகுதி) | திரு மு. மாரிமுத்து (தி.மு.க.) |

(மொத்த இடங்கள்—17)

## நீலகிரி மாவட்டம்

| தொகுதி. | | வெற்றிபெற்றவர் பெயர். |
|---|---|---|
| 97 | கூடலூர் (தனித் தொகுதி) | திரு சி. நஞ்சன் (காங்.) |
| 98 | உதகமண்டலம் | திரு கே. போஜன் (சுதந்.) |
| 99 | கூனூர் | திரு பெல்லி கவுடர் (தி.மு.க.) |

(மொத்த இடங்கள்—3)

## கோயம்புத்தூர் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 100 | மேட்டுப்பாளையம் | திரு திப்பையா (காங்.) |
| 101 | அவிநாசி | திரு ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் (சுதந்.) |
| 102 | தொண்டாமுத்தூர் | திரு இரா. மாணிக்கவாசகம் (தி.மு.க.) |
| 103 | சிங்காநல்லூர் | திரு பி. வேலுசாமி (பி.சோ.) |
| 104 | பேரூர் (தனித்தொகுதி) | திரு என். மருதாசலம் (மார்க்ஸ்) |
| 105 | கோயம்புத்தூர் மேற்கு | திரு கே. கோவிந்தராசுலு (தி.மு.க.) |
| 106 | கோயம்புத்தூர் கிழக்கு | திரு எம். பூபதி (மார்க்ஸ்) |
| 107 | கிணத்துக்கடவு | திரு கண்ணப்பன் (தி.மு.க.) |
| 108 | பொள்ளாச்சி | திரு அ. ப. சண்முகசுந்தர கவுண்டர் (தி.மு.க.) |
| 109 | வால்பாறை (தனித்தொகுதி) | திரு ஈ. ராமசாமி (தி.மு.க.) |
| 110 | உடுமலைப்பேட்டை | திரு எஸ்.ஜே. சாதிக் பாஷா (தி.மு.க.) |
| 111 | தாராபுரம் (தனித்தொகுதி) | திருமதி வி. ப. பழனியம்மாள் (தி.மு.க.) |
| 112 | வெள்ளக்கோயில் | திரு கே. என், சாமிநாத கவுண்டர் (தி.மு.க.) |
| 113 | காங்கேயம் | திரு ஏ. சேனுபதி கவுண்டர் (காங்.) |
| 114 | பொங்களூர் | திரு பி. என். பரமசிவ கவுண்டர் (தி.மு.க.) |
| 115 | பல்லடம் | திரு கே. என். குமாரசாமி கவுண்டர் (பி.சோ.) |
| 116 | திருப்பூர் | திரு சு. துரைசாமி (தி.மு.க.) |
| 117 | மொடக்குறிச்சி | திரு கே. ஆர். நல்லசிவம் (சம்.சோ.) |
| 118 | பெருந்துரை | திரு பாலசுப்பிரமணியம் (சம்.சோ.) |
| 119 | ஈரோடு | திரு எம். சின்னசாமி (தி.மு.க.) |
| 120 | பவானி | திரு ஏ. எம். ராஜா (தி.மு.க.) |
| 121 | அந்தியூர் | திரு இ. எம். நடராஜன் (தி.மு.க.) |

| தொகுதி. | | வெற்றிபெற்றவர் பெயர். |
|---|---|---|
| 122 | கோபிச்செட்டிபாளையம் | திரு ஏ. எம் ராமசாமிகவுண்டர் (சுதந்.) |
| 123 | சத்தியமங்கலம் | திரு பி. ஜி. கருத்திருமன் (காங்.) |
| 124 | பவானிசாகர் (தனித்தொகுதி) | திரு இராமராசன் (தி.மு.க.) |

(மொத்த இடங்கள்—25)

## மதுரை மாவட்டம்

| | | |
|---|---|---|
| 125 | ஒட்டன் சத்திரம் | திரு நாச்சிமுத்துக் கவுண்டர் (தி.மு.க.) |
| 126 | பழனி (தனித்தொகுதி) | திரு கு. கிருஷ்ணமூர்த்தி (தி.மு.க.) |
| 127 | பெரியகுளம் | திரு மேத்தா (தி.மு.க.) |
| 128 | போடி நாயக்கனூர் | திரு சு. சீனுவாசன் (காங்.) |
| 129 | கம்பம் | திரு இராஜாங்கம் (தி.மு.க.) |
| 130 | தேனி | திரு பழனிவேல் இராஜன் (தி.மு.க.) |
| 131 | ஆண்டிப்பட்டி | திரு எஸ். பரமசிவம் (சுதந்) |
| 132 | சேடப்பட்டி | திரு வி. தவமணித்தேவர் (சுதந்) |
| 133 | உசிலம்பட்டி | திரு பி. கே. மூக்கையாதேவர் (சுயே) |
| 134 | நிலக்கோட்டை (தனித்தொகுதி) | திரு ஏ. முனியாண்டி (தி.மு.க.) |
| 135 | சோழவந்தான் | திரு பி. எஸ். மணியன் (தி.மு.க.) |
| 136 | திருப்பரங்குன்றம் | திரு எஸ். அக்கினிராஜூ (தி.மு.க.) |
| 137 | மதுரை மேற்கு | திரு என். சங்ரய்யா (மார்க்ஸ்) |
| 138 | மதுரை செண்டிரல் | திரு சொ. கோவிந்தராஜன் (தி.மு.க.) |
| 139 | மதுரை கிழக்கு | திருமதி கே. பி.ஜானகி அம்மாள் (மார்க்ஸ்) |
| 140 | மேலூர்தெற்கு(தனித்தொகுதி) | திரு ஓ. பி. இராமன் (தி.மு.க.) |
| 141 | மேலூர் வடக்கு | திரு பி. மலைச்சாமி (தி. மு.க.) |
| 142 | வடமதுரை | திரு பி. தம்பி நாயக்கர் (காங்.) |
| 143 | திண்டுக்கல் | திரு அ. பாலசுப்பிரமணியம் (மார்க்ஸ்) |
| 144 | ஆத்தூர் | திரு வி. எஸ். எஸ். மணிச்செட்டியார் (தி.மு.க.) |
| 145 | வேடசந்தூர் | திரு என். வரதராஜன் (மார்க்ஸ்) |

(மொத்த இடங்கள்—22; தேர்தல் நடந்து முடிந்த இடங்கள்—21)

சுதந்திரா கட்சி வேட்பாளர் தேர்தலுக்கு சிலதினங்களுக்குமுன் காலமாகிவிட்டபடியால், திருமங்கலம் சட்டசபைத் தொகுதிக்கான தேர்தல் தள்ளிவைக்கப் பட்டுள்ளது.

## திருச்சிராப்பள்ளி மாவட்டம்

| | தொகுதி. | | வெற்றிபெற்றவர் பெயர். |
|---|---|---|---|
| 146 | அரவக்குறிச்சி | .. | திரு எஸ். கந்தசாமி கவுண்டர் (சுதந்) |
| 147 | கரூர் | .. | திரு தோ. மு. நல்லசாமி (காங்.) |
| 148 | தொட்டியம் | .. | திரு வடிவேல் (தி.மு.க.) |
| 149 | முசிறி | .. | திரு பு. செ. முத்துசெல்வன் (தி.மு.க.) |
| 150 | உப்பிலியாபுரம் | .. | திரு டி. பி. அழக முத்து (தி.மு.க.) |
| 151 | பெரம்பலூர்( தனித்தொகுதி) | .. | திரு ஜே எஸ். இராசு (தி.மு.க.) |
| 152 | வரகூர் | .. | திரு ஆர். நாராயணன் (தி.மு.க.) |
| 153 | ஆண்டிமடம் | .. | திரு கே.என். ராமச்சந்திரன் (தி.மு.க.) |
| 154 | ஜெயங்கொண்டம் (தனித்தொகுதி) | .. | திரு ஆ. கு. மூர்த்தி (தி.மு.க.) |
| 155 | அரியலூர் | .. | திரு ஆர். கருப்பையா (காங். |
| 156 | லால்குடி | | திரு டி. நடராஜன் (தி.மு.க.) |
| 157 | ஸ்ரீரங்கம் (தனித் தொகுதி) | .. | திரு எஸ். ராமலிங்கம் (காங்.) |
| 158 | திருச்சிராப்பள்ளி-1 | .. | திரு எம். எஸ். மணி (தி.மு.க.) |
| 159 | திருச்சிராப்பள்ளி-2 | .. | திரு ஆர். நாகசுந்தரம் (தி.மு.க.) |
| 160 | திருவெறும்பூர் | .. | திரு வை. சுவாமிநாதன் (காங்.) |
| 161 | குளித்தலை | .. | திரு எம். கந்தசாமி (தி.மு.க.) |
| 162 | கிருஷ்ணராயபுரம் (தனித் தொகுதி) | .. | திரு பெ. சௌந்தரபாண்டியன் (தி.மு.க.) |
| 163 | கடவூர் | .. | திரு கருணகிரி முத்தையா (காங்.) |
| 164 | விராலிமலை | .. | திரு வி. எஸ். சண்முகம் (தி.மு.க.) |
| 165 | திருமயம் | .. | திரு புலவர். பொ. பொன்னம்பலம் (தி.மு.க.) |
| 166 | ஆலங்குடி | .. | திரு கே. வி. சுப்பையா (தி.மு.க.) |
| 167 | புதுக்கோட்டை | .. | திரு விஜய ரகுநாத தொண்டைமான் (காங்.) |

(மொத்த இடங்கள்—22)

## தஞ்சாவூர் மாவட்டம்

| | தொகுதி. | | வெற்றிபெற்றவர் பெயர். |
|---|---|---|---|
| 168 | திருவையாறு | .. | திரு ஜி. முருகய்யாசேதுரார் (தி.மு.க.) |
| 169 | தஞ்சாவூர் | .. | திரு ஏ. ஒய். எஸ். பரிசுத்த நாடார் (காங்.) |
| 170 | பாபநாசம் | .. | திரு இரா. சவுந்திரராஜ மூப்பனார் (காங்.) |
| 171 | வலங்கைமான் (தனித்தொகுதி) | | திரு ந. சோமசுந்தரம் (தி.மு.க.) |
| 172 | கும்பகோணம் | .. | திரு நா. காசிராமன் (காங்.) |
| 173 | ஆடுதுறை | .. | திரு அ. மாரி முத்து (காங்.) |
| 174 | சீர்காழி (தனித் தொகுதி) | .. | திரு க. பா. சு. மணி (சுயே) |
| 175 | செம்பனார்கோவில் | .. | திரு எஸ். கணேசன் (தி.மு.க.) |
| 176 | மாயூரம் | .. | திரு என். கிட்டப்பா (தி.மு.க.) |
| 177 | குத்தாலம் | .. | திரு. கோ. பாரதி மோகன் (மார்க்ஸ்) |
| 178 | குடவாசல் | .. | திரு சி. கிருஷ்ணமூர்த்தி (தி.மு.க.) |
| 179 | நன்னிலம் (தனித் தொகுதி) | .. | திரு. பி. ஜெயராஜ் (காங்.) |
| 180 | திருவாரூர் (தனித் தொகுதி) | .. | திரு. தனுஷ்கோடி (மார்க்ஸ்) |
| 181 | நாகப்பட்டினம் | .. | திரு. கே. ரெ. ஞானசம்பந்தம் (மார்க்ஸ் |
| 182 | வேதாரண்யம் | .. | திரு. பி. வெங்கடாசல தேவர் (காங்.) |
| 183 | திருத்துறைப்பூண்டி | .. | திரு, ந. தர்மலிங்கம் (தி.மு.க.) |
| 184 | கோட்டூர் (தனித் தொகுதி) | .. | திரு ஆ. கு. சுப்பையா (கம்யூ.) |
| 185 | மன்னார்குடி | .. | திரு த. சி. சுவாமிநாத உடையார் (காங்.) |
| 186 | ஒரத்தநாடு | .. | திரு எஸ். கணேசன் (தி.மு.க.) |
| 187 | கந்தர்வகோட்டை | .. | திரு ரா. ராமச்சந்திர துரை (காங்.) |
| 188 | பட்டுக்கோட்டை | .. | திரு ஏ. ஆர். மாரிமுத்து (பி. சோ.) |
| 189 | பேராவூரணி | .. | திரு எம். கிருஷ்ணமூர்த்தி (தி.மு.க.) |
| 190 | அறந்தாங்கி | .. | திரு ஆ. துரையரசன் (தி.மு.க.) |

(மொத்த இடங்கள்—23)

## இராமநாதபுரம் மாவட்டம்

| | | | |
|---|---|---|---|
| 191 | திருப்பத்தூர் | .. | திரு எஸ். மாதவன் (தி.மு.க.) |
| 192 | காரைக்குடி | .. | திரு சா. மெய்யப்பன் (சுதந்.) |
| 193 | திருவாடானை | .. | திரு கரியமாணிக்கம் அம்பலம் (சுதந்.) |
| 194 | இளையாங்குடி | .. | திரு வீ. மலைக் கண்ணன் (தி.மு.க.) |
| 195 | இராமநாதபுரம் | .. | திரு டி. தங்கப்பன் (தி.மு.க.) |
| 196 | கடலாடி (தனித் தொகுதி) | .. | திரு எம். அலங்காரம் (தி.மு.க.) |
| 197 | முதுகுளத்தூர் | .. | திரு ரா. ரெத்தின தேவர் (சுதந்.) |
| 198 | பரமக்குடி (தனித் தொகுதி) | .. | திரு தொ. க. சிறைமீட்டான் (தி.மு.க.) |
| 199 | சிவகங்கை | .. | திரு சி. சேதுராமன் (தி.மு.க.) |

| | தொகுதி. | | வெற்றிபெற்றவர் பெயர். |
|---|---|---|---|
| 200 | மானுமதுரை | .. | திரு கே. சிமைச்சாமி (சுதந்.) |
| 201 | கரியாபட்டி | .. | திரு ஏ. ஆர். பெருமாள் (சுதந்.) |
| 202 | அருப்புக்கோட்டை | .. | திரு சௌடி எஸ். சுந்தர பாரதி (சுதந்.) |
| 203 | விருதுநகர் | .. | திரு பி. சீனுவாசன் (தி.மு.க.) |
| 204 | சாத்தூர் | .. | திரு எஸ். ராமசாமி நாயுடு (சுதந்) |
| 205 | சிவகாசி | .. | திரு அழகு தேவர் (சுதந்.) |
| 206 | ஸ்ரீவில்லிப்புத்தூர் (தனித் தொகுதி) | .. | திரு கு. ஆண்டி குருசாமி (தி.மு.க.) |
| 207 | இராஜபாளையம் | .. | திரு ஏ. ஏ. சுப்பராஜா (சுயே.) |

(மொத்த இடங்கள்—17)

## திருநெல்வேலி மாவட்டம்

| | | | |
|---|---|---|---|
| 208 | விளாத்திகுளம் | .. | திரு மு. இ. ரத்தின சபாபதி (தி.மு.க) |
| 209 | கோயில்பட்டி | .. | திரு சோ. அழகிரிசாமி (கம்யூ) |
| 210 | ஓட்டப்பிடாரம் (தனித்தொகுதி) | | திரு மு. முத்தையா (சுதந்) |
| 211 | சங்கரன்கோயில் (தனித் தொகுதி) | | திரு பே. துரைராஜ் (தி.மு.க) |
| 212 | வாசுதேவநல்லூர் | .. | திரு ஏ. வெள்ளத்துரை (தி.மு.க) |
| 213 | கடையநல்லூர் | .. | திரு ஏ. ஆர். சுப்பைய முதலியார் (சுயே) |
| 214 | தென்காசி | .. | திரு இ. அ. சிதம்பரம்பிள்ளை (காங்) |
| 215 | ஆலங்குளம் | .. | திரு வி. அருணசலம் (தி.மு.க) |
| 216 | அம்பாசமுத்திரம் | .. | திரு க. கோமதி சங்கர தீட்சிதர் (காங்) |
| 217 | சேரன்மகாதேவி | .. | திரு டி. எஸ். ஆதிமுலம் (சுதந்) |
| 218 | கங்கைகொண்டான் (தனித் தொகுதி) | | திரு ஆ. கருப்பையா (தி.மு.க) |
| 219 | திருநெல்வேலி | .. | திரு அ. லெ. சுப்பிரமணியம் (தி.மு.க) |
| 220 | மேலப்பாளையம் | .. | திரு எம். எம். பீர் முகம்மது (சுயே) |
| 221 | ஸ்ரீவைகுண்டம் | .. | திரு சி. பா. ஆதித்தனர் (தி.மு.க) |
| 222 | தூத்துக்குடி | .. | திரு மு. ச. சிவசாமி (தி.மு.க) |
| 223 | திருச்செந்தூர் | .. | திரு எட்மண்ட் பர்ணன்டோ (தி.மு.க.) |
| 224 | சாத்தான்குளம் | .. | திரு மார்ட்டின் (காங்) |
| 225 | நான்குநேரி | .. | திதி என். துரைபாண்டியன் (காங்) |
| 226 | ராதாபுரம் | .. | திரு என். சௌந்திரபாண்டியன் (காங்) |

(மொத்த இடங்கள்—19)



## கன்யாகுமரி மாவட்டம்

| | தொகுதி. | | வெற்றிபெற்றவர் பெயர். |
|---|---|---|---|
| 227 | கன்யாகுமரி | .. | திரு ப. மகாதேவன்பிள்ளை (காங்) |
| 228 | நாகர்கோயில் | .. | திரு எம். சி. பாலன் (தி.மு.க) |
| 229 | கொளச்சல் | .. | திரு ஏ. சிதம்பரநாத நாடார் (காங்) |
| 230 | பத்மநாபபுரம் | . | திரு வி. ஜார்ஜ் (காங்) |
| 231 | திருவட்டார் | .. | திரு சே. ஜேம்ஸ் (காங்) |
| 232 | விலவங்கோடு | .. | திரு ஆர். பொன்னப்பன் நாடார் (காங்) |
| 233 | கிள்ளியூர் | .. | திரு வில்லியம் (காங்) |

(மொத்த இடங்கள்—7)

....

## தமிழ் நாட்டில் சட்டசபைத் தொகுதிகள்.

| | மாவட்டம் | தொகுதிகள் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | சென்னை நகரம் | 12 |
| 2 | செங்கல்பட்டு | 15 |
| 3 | வட ஆர்க்காடு | 22 |
| 4 | தென் ஆர்க்காடு | 21 |
| 5 | தர்மபுரி | 9 |
| 6 | சேலம் | 17 |
| 7 | நீலகிரி | 3 |
| 8 | கோயமுத்தூர் | 25 |
| 9 | மதுரை | 22 |
| 10 | திருச்சிராப்பள்ளி | 23 |
| 11 | தஞ்சாவூர் | 22 |
| 12 | இராமநாதபுரம் | 17 |
| 13 | திருநெல்வேலி | 19 |
| 14 | கன்யாகுமரி | 7 |
| | மொத்த இடங்கள் .. | 234 |

# 1967 - பொதுத் தேர்தல்

தமிழ் நாட்டிலிருந்து பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள்.

| தொகுதி. | வெற்றிபெற்றவர் பெயர். |
|---|---|
| 1. வட சென்னை | திரு கே. மனோஹரன் (தி. மு. க.) |
| 2. தென் சென்னை | திரு சி. என். அண்ணாதுரை (தி. மு. க.) |
| 3. ஸ்ரீபெரும்புதூர் (தனித்தொகுதி) | திரு பி. சிவசங்கரன் (தி. மு. க.) |
| 4. செங்கல்பட்டு | திரு சி. சிட்டிபாபு (தி. மு. க.) |
| 5. திருத்தணி | திரு எஸ். கே. சம்பந்தன் (தி.மு.க.) |
| 6 வேலூர் (தனித்தொகுதி) | திரு ஜி. குசேலர் (தி. மு. க.) |
| 7. திருப்பத்தூர் | திரு ஆர். முத்து கவுண்டர் (தி. மு. க.) |
| 8. வந்தவாசி | திரு ஜி. விஸ்வநாதன் (தி. மு. க.) |
| 9. திண்டிவனம் | திரு டி. டி. இராமபத்திர நாயுடு (தி. மு. க.) |
| 10. கடலூர் | திரு. வி. கிருஷ்ணமூர்த்தி கவுண்டர் (தி. மு. க.) |
| 11. சிதம்பரம் (தனித்தொகுதி) | திரு வி. மாயவன் (தி. மு. க) |
| 12. கள்ளக்குறிச்சி | திரு. எம். தெய்வீகன் (தி. மு. க.) |
| 13. கிருஷ்ணகிரி | திரு எம். கமலநாபன் (தி.மு.க.) |
| 14. சேலம் | திரு கே- இராஜாராம் (தி. மு. க.) |
| 15. மேட்டூர் | திரு எஸ். கந்தப்பன் (தி. மு. க.) |
| 16. திருச்செங்கோடு | திரு கே. அன்பழகன் (தி. மு. க) |
| 17. நீலகிரி | திரு எம். கே. நஞ்சா கவுடர் (சுதந்.) |
| 18. கோயமுத்தூர் | திரு கே. ரமணி (மார்க்ஸ்) |
| 19. பொள்ளாச்சி | திரு டி. நாராயணன் (தி .மு. க.) |
| 20. தாராபுரம் (தனித்தொகுதி) | திரு சி. டி. தண்டபாணி (தி. மு. க.) |
| 21. கோபிச்செட்டிபாளையம் | திரு பி. ஏ. சாமிநாதன் (தி. மு. க) |
| 22. பெரியகுளம் | திரு எச். அஜ்மல்கான் (சுதந்.) |
| 23. திண்டுக்கல் | திரு அன்புச்செழியன் (தி. மு. க.) |
| 24. மதுரை | திரு பி. இராமமூர்த்தி (மார்க்ஸ்) |
| 25. கரூர் | திரு சி. முத்துசாமி கவுண்டர் (சுதந்) |
| 26. திருச்சிராப்பள்ளி | திரு கே. அனந்தன் நம்பியார் (மார்க்ஸ்) |
| 27. பெரம்பலூர் (தனித்தொகுதி) | திரு ஏ. துரைராசு (தி. மு. க.) |
| 28. புதுக்கோட்டை | திரு ஆர். உமாநாத் (மார்க்ஸ்) |
| 29. கும்பகோணம் | திரு இரா. செழியன் (தி. மு. க) |
| 30. மாயூரம் (தனித்தொகுதி) | திரு கே. சுப்ரவேலு (தி. மு. க.) |
| 31. நாகப்பட்டினம் | திரு வி. சாம்பசிவம் (காங்) |
| 32. தஞ்சாவூர் | திரு சோமசுந்தரம் கோபாலர் (தி. மு. க.) |
| 33. சிவகங்கை | திரு ஆர். கிருட்டினன் (தி. மு. க.) |
| 34. இராமநாதபுரம் | திரு மகமது ஷெரீப் (சுயே) |
| 35. சிவகாசி | திரு பி. இராமமூர்த்தி (சுதந்.) |
| 36. திருநெல்வேலி | திரு எஸ். சேவியர் (சுதந்.) |
| 37. தென்காசி (தனித்தொகுதி) | திரு ஆர். எஸ். ஆறுமுகம் (காங்) |
| 38. திருச்செந்தூர் | டாக்டர் எம். சந்தோஷம் (சுதந்) |
| 39. நாகர்கோயில் | திரு எ. நேசமணி (காங்) |

[மொத்த இடங்கள் 39]

1. (தி. மு. க.) — திராவிட முன்னேற்றக் கழகம்
2. (காங்.) — காங்கிரஸ்
3. (சுதந்.) — சுதந்திரா
4. (மார்க்ஸ்) — மார்க்ஸிஸ்ட் கட்சி (இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி)
5. (கம்யூ.) — இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (வலதுசாரி கம்யூனிஸ்ட்)
6. (பி. சோ.) — பிரஜா சோசியலிஸ்ட்
7. (ச. சோ.) — சம்யுக்த சோசியலிஸ்ட்
8. (சுயே.) — சுயேச்சை

# தமிழ்நாட்டில் பொதுத் தேர்தல்கள்

மக்களாட்சி தழைத்தோங்கும் வகையில், மக்கள் காட்டிய ஆர்வம் சார்ந்த ஒத்துழைப்பாலும், அரசாங்க அதிகாரிகள், ஊழியர்களின் செம்மையான கடின உழைப்பாலும், தமிழ்நாட்டில் பொதுத்தேர்தல்கள் செவ்வனே நடைபெற்றுள்ளன.

இதில், மக்களது பங்கு, நிர்வாகத்தினர் பணி ஆகியவற்றை விளக்கும் புள்ளி விவரமும், மற்றும் சில பொதுத் தகவல்களும் கீழே தரப்பட்டுள்ளன.

## மக்கள் பங்கு

| | 1957 | 1962 | 1967 |
|---|---|---|---|
| வாக்காளர்களின் எண்ணிக்கை | 1,75,14,993 | 1,86,75,436 | 2,07,96,846 |
| வாக்களித்தவர்களின் சதவிகிதம் | 49·05 | 70·60 | 76·56 |



## நிர்வாகத்தினர் பணி

| | 1957 | 1962 | 1967 |
|---|---|---|---|
| அமைக்கப்பட்ட வாக்குச் சாவடிகள் | 22,283 | 21.041 | 23,860 |
| தேவைப்பட்ட அதிகாரிகள் ஊழியர்கள் | .. | .. | 1,47,000 (இது, முன்னைய தேர்தல்களின் போது பணியாற்றியவர்களின் எண்ணிக்கையைவிட, மிக அதிகம்). |

| | | | |
|---|---|---|---|
| அச்சடிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலின் அளவு | | | 9,05,000 பக்கங்கள் (கையெழுத்துப் பிரதியில்) |

| | 1957 | 1962 | 1967 |
|---|---|---|---|
| வாக்காளர் கணக்கெடுப்பில் ஈடுபட்டவர்கள் | | | |
| 1. ஊழியர்கள் | .. | .. | 67,985 |
| 2. மேற்பார்வையாளர்கள் | .. | .. | 16,615 |

## பொதுத் தகவல்கள்

| | 1967 | முன்பு |
|---|---|---|
| சட்டசபை தொகுதிகளின் எண்ணிக்கை | 234 | 206 |
| மக்கள் சபை தொகுதிகனின் எண்ணிக்கை | 39 | 41 |

| | 1957 | 1962 | 1967 |
|---|---|---|---|
| வாக்குப்பதிவு நடந்த நாட்களின் எண்ணிக்கை | 5 | 4 | 3 (பிப்ரவரி 15, 18, 21) |

தமிழ்நாட்டில் தேர்தல் வரலாற்றிலேயே முதன் முறையாக, 1967 தேர்தலுக்கு முன்புதான், மாநிலத்தில் எல்லா தொகுதிகளிலும் ஒரே சமயத்தில், வாக்காளர் கணக்கெடுப்பு செய்யப்பட்டது. இதற்காக, கணக்கெடுப்பு அதிகாரிகள்—ஊழியர்கள் தகவல் விசாரணை செய்த குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 7,70,516 ஆகும்.

---

### பொதுத் தேர்தலில், சட்டசபை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் விவரம்:

திருவாளர்கள் டி. டி. எஸ். திப்பையா, பி. கே. சி. முத்துசாமி, பி. எம். முனுசாமி கவுண்டர், பி. என். பரமசிவ கவுண்டர், எம். கந்தசாமி படையாச்சி, ஜி. நடராஜன், தம்பி நாயக்கர், வி சுவாமிநாதன், எஸ். சௌந்தரராஜ மூப்பனார், பி. வெங்கடாசலத் தேவர், கரியமாணிக்கம் அம்பலம், கே. ஆர். சீமைச்சாமி, அ. சௌந்திரபாண்டியன், எஸ். ஆறுமுகம், கே. பி. எஸ். மணி, பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்: திரு எம். கமலநாபன்.

(இதுவரை அறிந்த விவரம்)

## அமைச்சர் பதவி ஏற்பு உறுதிமொழி

“ ........................................ என்னும் நான், சட்ட விதிகளுக்கிணங்க அமைக்கப்பட்ட இந்திய அரசியலமைப்பின்பால், உண்மையான நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டிருப்பேன் என்றும், இந்திய நாட்டின் முழுமுதல் ஆட்சியையும் ஒருமையையும் என்றும் நிலைநிறுத்துவேன் என்றும், தமிழ்நாட்டு அரசாங்கத்தின் அமைச்சராக என் கடமைகளை உண்மையாகவும் உளச்சான்றின் படியும் நிறைவேற்றுவேன் என்றும், அரசியலமைப்பிற்கும் சட்ட விதிகளுக்கும் இணங்க, அச்சமும் ஓர்வழிப்பற்றும் இன்றி, காய்தலும் உவத்தலும் அகற்றி—பல்வேறான மக்கள் அனைவருக்கும் நியாயம் வழங்குவேன் என்றும் உளமார உறுதி கூறுகிறேன்.”

## இரகசியப் பாதுகாப்பு உறுதிமொழி

“ ........................................ என்னும் நான்—தமிழ் நாட்டு அரசாங்கத்தின் அமைச்சர் என்ற முறையில்—எனது ஆலோசனைக்குட்பட்ட அல்லது எனக்குத் தெரியவருகின்ற எந்தப் பொருளையும், அவ்வகை அமைச்சரின் கடமைகளை முறைப்படி நிறைவேற்ற வேண்டிய அளவுக்கன்றி, ஒருவரிடமோ அன்றிப் பலரிடமோ, நேர்முகமாகவோ. மறைமுகமாகவோ அறிவிக்க அல்லது வெளிப் படுத்தமாட்டேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்.”

[ 6—3—1967 அன்று பதவி ஏற்ற அமைச்சர்கள் எடுத்துக்கொண்ட பதவி ஏற்பு உறுதிமொழி, இரகசியப் பாதுகாப்பு உறுதிமொழி-முழு வாசகம்].

---

## இந்த இதழில்


| | பக்கம். |
|---|---|
| மக்களாட்சிக் காவியத்தில் புதிய படலம் .. | 1 |
| மாணவர் கண்ட அமைச்சர்கள் .. | 4 |
| ஆக்க முயற்சிகள் அனைத்திலும் முழு ஆதரவு | 5 |
| மக்களுடன் மிக நெருங்கிய தோழமைத் தொடர்பு கொள்வோம். | 7 |
| தோழமை உணர்வின் சிறந்த எடுத்துக்காட்டு | 11 |
| ஆட்சிப் பொறுப்பில் இணக்கமான மாறுதல் | 25 |


## அடுத்த இதழில்...

விருதுபெற்ற ஆசிரியர்கள்..

## பத்திரங்களைப் பதிவு செய்வதில் புதிய முறை

### ஏப்ரல் முதல் தேதி முதல் அமுலுக்கு வந்துள்ளது

பத்திரங்களைப் பதிவு செய்வதில் ஒரு புதிய முறை வகுக்கப்பட்டு, அம்முறை ஏப்ரல் முதல் தேதி முதல் தமிழ்நாட்டில் அமுலுக்கு வந்துள்ளது.

பழைய முறைப்படி, பத்திரங்களில் உள்ள விஷயங்களையெல்லாம், பத்திரப் பதிவுப் புத்தகத்தில் நகல் எடுத்துக்கொள்வது வழக்கம். இதனால் சிறிது கால தாமதம் ஏற்படுகிறது.

இனி பத்திரத்தைப் பதிவு செய்ய விரும்பும் பொது மக்கள், பத்திரத்தின் இரு நகல்களை அவர்களே எடுத்துச் செல்லவேண்டும். ஒன்றை பதிவாளர் புத்தகத்தில் ஒட்டி வைத்துக்கொண்டு, மற்றொன்றை பதிவு செய்துகொண்டு, உரிமையாளரிடம் கொடுத்துவிடுவார்.

பத்திரப் பதிவு அலுவலகத்தில் ஒட்டி வைத்துக் கொள்வதற்கான நகல், அதற்குரிய உயர்ந்தரகக் காகிதத்தில் எழுதப்படவேண்டும். அதை அவ்வலுவலகத்திலேயே விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒன்றின் விலை ஐந்து காசுகளே.

---


கடைசி அட்டைப் படம் :

தமிழக அமைச்சர்களுடன், மாநிலக் கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங்கும், கவர்னரின் மனைவியாரும்.


வெளியிடுபவர் :
குமாரி எஸ். சத்தியபாமா, ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர் :
திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development (in-charge), Madras-9.



உள் ஆட்சித் துறை அமைச்சர் திரு எம். முத்துசாமி அவர்கள் பதவி ஏற்பு [சென்னை, ராஜாஜி மண்டபம்-6-3-67]



சென்னை மாநகராட்சி வரவேற்பு (9-3-67)



பத்திரிகை நிருபர்களுடன், முதலமைச்சர் (8-3-67)

